Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 03 ஞாயிற்றுக்கிழமை (17.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 260















# மீள்குடியேற்றம், வடக்கு தேர்தல்
# ஜனநாயகம் உறுதிப்படுத்த வழி



## இராஜதந்திரிகள் குழு வலியுறுத்து

இடம்பெயர்ந்துள்ள மக்களை மீள்குடியேற்றுவதும், வட மாகாணசபைத் தேர்தலை நடத்துவதும் அந்தப் பிராந்தியத்தில் ஜனநாயகத்தை உறுதிப்பாட்டுடன் வைத்திருப்பதற்கு அவசியமான தென Consular Corps of London குழு வலியுறுத்தியுள்ளது.

1902 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட லண்டனில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் பிரதானிகள் மற்றும் தூதரக அதிகாரிகளின் அமைப்பான Consular Corps of London குழுவொன்று இலங்கைக்கு கடந்த 11 ஆம் திகதி பயணம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்துள்ளது. இந்த அமைப்பின் நிறைவேற்று உறுப்பினரும், பிரித்தானியாவுக்கான செசெல்ஸ் தீவின் கவுன்சிலர் ஜெனரலுமான பேர்னாட் சில்வர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

போர் நடைபெற்ற பிரதேசங்களில் மூன்றாண்டுகளுக்குள் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள துரிதமான மீள் கட்டுமான, புனர்வாழ்வுத் திட்டங்களை வரவேற்கிறோம்.

மீள்கட்டுமானம் மற்றும் நல்லிணக்கத்தை தேர்தல் ஜனநாயகத்தின் மூலமே வலுப்படுத்த முடியும். ஜனநாயக நடைமுறைகளின்

19 ஆம் பக்கம் பார்க்க

## வாய்க்காலில் வீழ்ந்த வயோதிபர் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி சந்தையடி நீர்ப்பாசன வாய்க்காலில் வயோதிபர் ஒருவர் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த முத்துக்குமாரு லோகநாதன் (வயது-65) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் நேற்றுக் காலை வாய்க்கால் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. வட்டக்கச்சி சந்தையடியில் உள்ள உடைந்த பாலத்திற்கு அருகில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (கே)

## போரின் வடுக்கள் மறைவதற்கு இராணுவ பிரசன்னம் குறைய வேண்டும்

### சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெரிவிப்பு

Save the Children

இராணுவத்தினரின் பிரசன்னம் தொடர்ந்து காணப்படுவது சிறார்களின் மனங்களில் போரின் வடுக்கள் ஆறுவதனைத் தடுக்கின்றதென Save the Children அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி மேனகா கல்யாணரத்தின தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத்தீவின் யுத்த பிரதேசங்களில் தொடர்ந்தும் இராணுவத்தினரின் பிரசன்னமானது சிறார்களின், மனங்களிலிருந்த

19 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேசத்தைப் பற்றிப்பிடித்து தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்

### நம்பிக்கை கொள்கிறார் மாவை



(யாழ்ப்பாணம்)

சர்வதேசத்தின் கரங்களைப் பற்றிக் கொள்வதன் மூலம் எமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும் என தமிழரசுக் கட்சி பொதுச் செயலர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடை பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி அதிகாரிகளுக்கான தலமைத்துவம் மற்றும் ஆட்சி நிர்வாகம் பற்றிய பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்விதம் கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், எங்களது தேசத்தில் எங்களை நாம் ஆளக்கூடியவர்களாக இருக்க வேண்டும் ஆனால் வடக்கில் நடப்பது என்ன? வடக்கின் ஆட்சியில் இராணுவமும் ஆளுநரும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு இருக்கின்றார்கள்.

எமது நிலங்களை நாம் ஆளுவதற்குரிய முயற்சியாக எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும். உள்ளூர் மட்டத்திலிருந்து எங்களைத் தயார்ப்படுத்தி எதிர்காலத்தில் எமது பிரதேசத்தையும் இளைய சமூகத்தையும் அபிவிருத்திப் பாதையூடாக கொண்டுசெல்ல வேண்டும்.

உள்ளூராட்சிச் சபைகளில் இருப்பவர்களுக்காக இந்தியா மற்றும் கனடாவில் உள்ள உள்ளூராட்சி நிர்வாக

19 ஆம் பக்கம் பார்க்க

## அநாகரிகமாக செயற்படும் கரைச்சி பிரதேசசபை தவிசாளர்



### எதிர்க்கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் மாதாந்தம் நடைபெறும் கூட்டங்களின் போது எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்டுத்தும் பிரதேச நலன் கருதி தெரிவிக்கின்ற கருத்துக்கள் வெளியிடப்படுகின்ற கூட்டறிக்கைகளில் நீக்கப்பட்டு வெளியிடப்படுவதாக எதிர்த்தரப்பு உறுப்பினர் பரமசாமி இராமச்சந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார். கடந்த கால கூட்டறிக்கைகளில் இவ்வாறு நடந்துள்ளதாகவும் இதன் மூலம் தங்களின் கருத்துக்கள் வேண்டும்

19 ஆம் பக்கம் பார்க்க

## தாக்குதலாளிகள் இனங்காணப்பட்டனர்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தி யாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய சந்தேக நபர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். யாழ். பொலிஸ் நிலைய சிரேஷ்ட அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர். இவ்வாறு

19 ஆம் பக்கம் பார்க்க

## அம்பாந்தோட்டைச் சம்பவம் பின்னணியில் அரசாங்கம்

### குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.


(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தின் பின்னால் அரசாங்கம் இருப்பதாக ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார். அது தெளிவாக, அரசாங்கத்தின் வேலை. எம்மிடம் அதற்கான ஆதாரம் உள்ளது என அவர் கூறினார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு முஸ்லிம் பகுதிகளில் அரசு மீது மக்கள் அதிருப்தி

### என்கிறார் அமைச்சர் ஹக்கீம்



(கிண்ணியா)

கிழக்கில் எந்தவொரு முஸ்லிம் பிரதேசங்களிலும் அரசாங்கத்திற்கு திருப்திகரமான நிலையில் இல்லை. அரசாங்கத் தின்மீது திருப்திகரமாக இருப்பதாக யாரும் சொல்வார்களானால் அது மகா புளுகாகவே இருக்கும். இதனை நான் சொல்லித் தெரிந்து கொள்ளத் தேவையில்லை. எல்லோருடைய மனச் சாட்சியைத் தொட்டுத் தெரிந்து கொள்ள முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை தொடர்பான விளக்கக் கூட்டமொன்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பில் தகவல் திரட்டிய புலி உறுப்பினருக்கு 8 வருடச் சிறை

(கொழும்பு)

கொழும்பில் குண்டுகளை வெடிக்க வைக்கவும், முக்கிய பிரமுகர்கள் மற்றும் மக்கள் அதிகளவில் நடமாடும் இடங்கள் குறித்து புலனாய்வுத் தகவல்களைத் திரட்டியதாக சுமத்தப் பட்டிருந்த குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட புலிகள் அமைப்பில் ஆயுதப்பயிற்சிகளை பெற்றிருந்த ஒருவருக்கு 8 வருட சிறைத் தண்டனை விதித்த நீர்கொழும்பு மேல்நீதி

19 ஆம் பக்கம் பார்க்க

# மாணவர்களின் கல்வி மட்டத்தை உயர்த்த நூலகங்களை அபிவிருத்தி செய்யவேண்டும்

(வேலணை)

கடந்த காலங்களில் கல்வி அடைவு மட்டம் முதலாம் நிலையில இருந்தது. தற்போது 9 ஆம் இடமாக பின்னடைந்துள்ளது. மாணவர்கள் மத்தியில் அதிகரித்த தொலைக் காட்சி, தொலைபேசி மற்றும் இணையத்தள பாவனையுமே காரணமாகும். இவ்வாறு தீவக நூலக அபிவிருத்திக் குழுக கூட்டத்தில் வேலணைப் பிரதேச சபை செயலாளர் செ.ரமேஷ் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது, தீவகப் பிரதேச சபை நூலகங்களின் வினைத்திறனான செயற்பாட்டுக்குத் தீவக நூலக அபிவிருத்திக் குழு மூலம் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகை முப்பரிமான பொதுநூலகங்களை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகள் மூலம் நூலகங்களின் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்படுகின்றமை நூலகங்களின் செயற்பாட்டு அறிக்கைகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா மாணவர்கள், பெற்றோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொலைக்காட்சி, தொலைபேசி பாவனையைக் குறைத்துக் கட்டுப்படுத்த வேண்டும் என்றார். அத்துடன் நூலகத்தின் அபிவிருத்திக்கு தமது பூரண ஒத்துழைப்பினையும் முழுப்பங்களிப்பினையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பாலசுப்பிரமணியம் புஷ்பராணி நூலகங்களின் முக்கியத்துவம் தற்போது உணரப்பட்டுள்ளது. இதனால் நூலகங்களை விருத்தி செய்ய வேண்டிய பொறுப்புள்ளது. அத்துடன் அனைத்து செயறபாடுகளுக்கும் பணமும் செலவு செய்யவேண்டும் என்றார். அத்துடன் நூலகங்களில் மாணவர்களை ஈர்த்துக்கொள்வதற்கு கணினியின் முக்கியத்துவம் பற்றியும் தெரிவித்தார். நூலகங்களை நாம் எப்போதும் அழகாக வைத்திருக்கவேண்டும். அதனால தான் வாசகர்களைக் கவரமுடியும் என்றார். அத்துடன் முப்பரிமானம் (3D Library System) மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்றார்.

# வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு விசாரணை அறிக்கை வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இருந்து இரும்புக்கேடர்கள் மற்றும் மின்பிறப்பாக்கி என்பன கொண்டுசென்றமை தொடர்பான விசாரணை அறிக்கை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு வழங்கவில்லை என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் செ.ஸ்ரீகுகநேசன் தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். போதனா வைத்தியசாலையின் கேடர்கள், மின்பிறப்பாக்கிகள் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசாரணை மேற்கொண்ட பின்னர் அறிக்கை நீதமன்றிற்குச் சமர்ப்பிக்கப்படும். அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்ட பின்னர்தான் அறிக்கையினை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு வழங்கப்படும்.

நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் முன்பு அந்த அறிக்கையினை உரியவர்களுக்கு வழங்குவதற்கான சட்டம் இல்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் புற்றுநோய் வைத்திய நிபுணரின் வீட்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியடசகர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# குற்றச் செயல்கள் 50 வீதம் தடுப்பு

(யாழ்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 50 வீதமான குற்றச்செயல்கள் கடந்த வாரம் தடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். யாழ். தலைமைப் பொலிஸ் நிலையத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. அச் சந்திப்பின போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் தற்போது குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்பட்டன. அதன்போது பொலிஸ் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அத்துடன் குற்றச் செயல்கள் நடைபெறும் இடங்களுக்கு பொலிஸ் புலனாய்வுத்துறையினர் செயற்பட்டு வருகின்றனர். அந்த வகையில், பாரிய குற்றச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்கக் கூடியதாக இருக்கின்றது.

தற்போது சிறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன, களவுகள், பாலியல் துஷ்பிரயோகம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தித் தண்டனை வழங்கப்பட்டது. இனி வரும் காலங்களிலும், சிறு குற்றச செயல்கள் இடம்பெறாது தடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர மேலும் தெரிவித்தார். (எஸ்)

# அலங்கார உற்சவம்

(குருநகர்)

யாழ். வண்ணை பன்றிக் கோட்டுப்பிள்ளையாரென அழைக்கப்படும் ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிறு தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகும். முற்பகல் 10.15 மணிக்கு வசந்தமண்டபப் பூசை, 11.00 மணிக்கு தீர்த்தம், நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை என்பனவும், மாலை 4.30 மணிக்கு வாஸ்து சாந்தி, சாயரட்டைப் பூசை 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை, 6.00 மணிக்கு திருவூஞ்சல், 6.30 மணிக்கு சுவாமி வெளிவீதி எழுந்தருளல் ஆகியன இடம்பெறும். (68)

# துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசினால் யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 1500 துவிச்சக்கர வண்டிகளில் முதற் கட்டமாக 4 பிரதேச செயலர் பிரிவுகளில் தலா 25 பேர் வீதம் 100 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நல்லூர் பிரதேச செயலகத்தில் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இந்திய துணைத்தூதரக அதிகாரி வி.மகாலிங்கம் ஆகியோர் விருந்தினராகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கவுள்ளனர்.

# புதிய பேருந்து நிலையம் நுணாவிலில் திறப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புதிய நட்புறவு பஸ்தரிப்பு நிலையம் ஒன்று நேற்று மாலை 6.00 மணிக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நுணாவில் கிழக்கு ஏ-9 வீதியில் இந்த பஸ்தரிப்பு நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கண்டி, செங்கடகல லயன்ஸ் கழகம் தனது 30 ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டும், சாவகச்சேரி லயன்ஸ் கழகம் தனது 33 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் இந்த பேருந்து நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சார்ள்ஸ் மற்றும் லயன்ஸ் கழக முக்கியஸ்தர்கள் இணைந்து நாடாவெட்டித் திறந்து வைத்தனர். (11)

# கூட்டமைப்பினரின் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சி அதிகார சபைகளின் தலைமைத்துவம் மற்றும் ஆட்சி நிர்வாகம் சம்பந்தமான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை நிகழ்வு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகியது.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிறிதரன், சரவணபவன், முன்னாள் மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானம், இந்தியத் துணைத்தூதர் வி.மகாலிங்கம், முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

மேலும் "சிறந்த சேவை வழங்கலுக்கான மூன்று ஆண்டுகள் செயற்பாட்டுத்திட்டம் மக்கள் பிரதிநிதிகளுக்கானவை" எனும் கருப்பொருளில் எஸ்.ரங்கராஜ னும், உள்ளூராட்சி மன்றங்களின் நடைமுறை நிர்வாகம் எனும் கருப்பொருளில் முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானமும் சிறப்புரையாற்றினர்.

இன்று இரண்டாம் நாள் நிகழ்வில் முற்பகல் 9.30 - 11.00 மணி வரை "சட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய அதிகாரங்கள்" எனும் தலைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமாகிய எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றவுள்ளார்.

தொடர்ந்து பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை "நடைமுறைப் பொறுப்புக்களும் தீர்வுகளும்" எனும் பொருள்பட மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சீ.வி.கே.சிவஞானம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (பா)

# மஹோற்சவம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனி உத்தரத்தைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

உற்சவ காலங்களில் அடியார்கள் ஆசாரசீலர்களாகத் தினமும் ஆலயத்திற்கு வந்து முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைத் தரிசித்து அருள்பெறுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

# வருடாந்த உற்சவம்

(வரணி)

வடவரணி கூளாநின்றபுல முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நேற்று ஆரம பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெற்று வருகிறது. மேலும் இறுதி நாளன்று விசேட கலை நிகழ்வுகள் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (150)

# உதவிப் பணம் வழங்கல்

(வரணி)

வரணிப் பிரதேச உபஅஞ்சல் அலுவலகத்தில் விதவைகள், நலிவுற்றோருக்கான ஆனிமாத உதவிப் பணம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. உரியவர்கள் பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வரணி தபாலதிபர் அறிவிததுள்ளார். (150)

# 4 வயது சிறுமி மீது துஷ்பிரயோகம்


(யாழ்ப்பாணம்)

4 வயது சிறுமியை 18 வயது இளைஞன் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய்ப் பகுதியில் வீடொன்றில் 4 வயதுச் சிறுமி இருந்த வேளை அயல் வீட்டுக்கார இளைஞன் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

குறித்த இளைஞன் கோப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். (எஸ்)

# மினிபஸ் மோதியதில் குடும்பஸ்தர் படுகாயம்



(கிரு)

ஆனைக்கோட்டைச் சந்தியில் நேற்று மாலை 5.15 மணியளவில் இளவாலையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த மினிபஸ், சைக்கிளுடன் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் முதுகெலும்பு முறிவடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்தில் அராலிப் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை தர்மராசா (வயது-44) என்ற குடும்பஸ்தரே முள்ளந்தண்டு முறிந்து கவலைக்கிடமான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்தில் சம்பந்தப்பட்ட மினிபஸ் சாரதி மானிப்பாய் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எஸ்,104,02)


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனை

சுதுமலை தெற்கில் சகல வசதிகளுடனும் கூடிய நல்ல சுற்றாடலில் உள்ள ஒரு நடுத்தர வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: க.சீவறட்ணம், றியிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/138)

# சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் வடக்கு, கிழக்கில் சேவை விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்கள ஊழியர்களின் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவு சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேம்படுத்தல் உத்தியோகத்தர்களை நியமித்ததன் மூலம் சேவையை விஸ்தரித்துள்ளது.

இதன் பிரகாரம் வடமாகாணத்தில் நகர்ப்புற கல்விச் சேவை ஊழியர்கள் மட்டுமல்லாது கிராமப்புற கல்விச் சேவை ஊழியர்களும் பயன்பெறும் வகையில் மேம்படுத்தல் உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

அந்த வகையில் இச்சங்கமானது கல்வித்துறை ஊழியர்களின் நலனைக் கருத்திற்கொண்டு சில கடன் திட்டங்களை முன்னெடுத்து வருகினறது.

இதில் 7 இலட்சத்து 50 ஆயிரம் வரையிலான சொத்துப் பிணைக்கடன் 3 இலட்சம் வரையிலான இருவர் பிணை கொண்ட கடன், 50 ஆயிரம் வரையிலான உடனடிக்கடன், 75 ஆயிரம் வரையிலான வெளிநாட்டு சுற்றுலாக்கடன், 5 ஆயிரம் வரையிலான மூக்குக்கண்ணாடிக் கடன், 2 இலட்சம் வரையான மோட்டார் சைக்கிள் கடன, நிரந்தர வைப்பு மீதான கடன், கையடக்கத் தொலைபேசிக் கடன் என்பன ஊழியர்களின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும். அத்துடன் மேலதிக விசேட நலத்திட்டமாக பல்கலைக்கழக புலமைப் பரிசில், 5 ஆம் தர புலமைப்பரிசில், மரணாதார திட்டம், ஓய்வூதியக் கொடுப்பனவு, பாராயமடையாதோர் சேமிப்புக்கணக்கு போன்றவும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

வடக்கு மாகாணத்தின் மேம்படுத்தல் உத்தியோகத்தராக சீ.சுதாகரன் நியமிக்கப்பட்டுள்ளார். மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் டச்றோட் அளவெட்டி அல்லது 0718243745 என்னும் இலக்கத்துடன் தொடாபு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# குறும்பட விமர்சன நிகழ்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் குறும்பட விமர்சன நிகழ்வு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கலை கலாசாரத்துடன் தொடர்புடைய அமைப்புகளைச் சார்ந்தவர்களும் செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி சு.சுகுணாவும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

# விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கோட்ட முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று காலை 9 மணிக்கு குரும்பை கலட்டி மைதானத்தில் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி த.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை மக்கள் வங்கி பதில் முகாமையாளர் த.உதயமூர்த்தி பிரதம விருந்தினராகவும், யாழ். பிராந்திய உள்ளூராட்சி அலுவலர் திருமதி ப.யோகராசா, வடமராட்சி ஈ.பி.டி.பி. அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்ரீரங்கேஸ்வரன், வடமராட்சி வலய முன்பள்ளி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

# மாற்று வலுவுடையோருக்கு விசேட தரவுப் பதிவுப் புத்தகம்

(யாழ்ப்பாணம்)

மாற்று வலுவடையவர்களை இலகுவாக அடையாளம் காண்பதற்கும் அவர்களுக்கான உதவித்திட்டங்களை கிரமமான முறையில் திட்டமிட்டு நடை முறைப்படுத்துவதற்கும் வசதியாக அவர்களுக்கு விசேட தரவுப் பதிவு அட்டை வழங்கப் படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் உள்ள நலிவுற்றவர்கள் மற்றும் மாற்று வலுவுடையவர்களது விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

அத்துடன் அவர்களது புகைப்படங்களும் எடுத்துக் காட்டப்பட்டு வருகின்றது. மிக விரைவில் இவர்களுக்கு தரவுப்பகிர்வு அட்டை வழங்கப்படவுள்ளது.

இதற்கான வேலைகளில் யாழ் சமூக சேவைகள் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. (க)

# பாரதி ஸ்ரீதர் இலங்கைக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

இந்திய தமிழக ராஜ் தொலைக்காட்சிப் புகழ் பாரதி ஸ்ரீதர் இம்மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்கிறார். இலங்கையின் பல பகுதிகளுக்கும் செல்லவுள்ள இவர் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கும் செல்லவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் நிகழ்வுகளிலும் கலந்து கொள்வார். ஆன்மீக நிகழ்வுகள், பெண்கள் எழுச்சி நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகளிலும் பங்கு பற்றுவார்.

இவர் பொது மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவார். இவரைத் தொடர்புகொள்ள



மாவை அசோகன், 07232899998 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொளளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (01)

# பொதுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கல்வி மேம்பாட்டு நிதியச் செயற்பாடு தொடர்பாக புதிய நிர்வாகத் தெரிவு தொடர்பான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரும் முல்லைத்தீவு மாவட்ட கல்வி மேம்பாட்டு நிதியத் தலைவருமான நா.வேதநாயகன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. (04)

# மண்டைதீவில் நள்ளிரவு கொள்ளை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பகுதியில் மண்டைதீவு மகா வித்தியாலயதத்திற்கு அருகாமையில் உள்ள பலசரக்குக் கடையிலிருந்து சுமார் இருபத்தைந்து ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் திருட்டுப் போயுள்ளது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடை பெற்ற இத்திருட்டுச் சம்பவத் தின்போது குறித்த பலசரக்குக் கடையின் பின் பகுதியினால் உட்புகுந்த திருடன் 15000 ரொக்கப் பணம் 2400 ரூபா பெறுமதியான கிற்காட்டுகள் 4000 ரூபா பெறுமதியான சிகரட் போன்ற பொருட்களைத் திருடிச் சென்றிருப்பதாகத் தெரியவருகின்றது.

மண்டைதீவு முகப்புவயல் கந்தன் கொடியேற்றத் திருவிழாவின் இரவு நிகழ்ச்சிக்கு குறித்த கடைக்காரர் சென்றிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இத் திருட்டு நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மண்டைதீவுப் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் மண்டைதீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (பா)

# பொது வாகனங்களில் "ஸ்ரிக்கர்" ஒட்டும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டத்தில் இடம்பெறவுள்ள தேசியடெங்கு கட்டுப்பாட்டு விழிப்புணர்வை முன்னிட்டு பொதுப் போக்குவரத்து வாகனங்களில் ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு, நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்ணை தனியார் பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பொதுப் போக்குவரத்து வாகனங்களில் ஸ்ரிக்கர் ஒட்டும் இந்நிகழ்வை கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர் எனப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் உள்ள பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ காலங்களில் பெரிய புராணம் என்னும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவாளர் பொன். சுகந்தனின் தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (116)

•••

நல்லூர் மூத்தவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு இரதோற்சவமும், 26 ஆம் திகதி காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெற்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் இடம்பெறவுள்ளது.



மயிலங்கூடலூர் பி.நடராசாவின் "ஈழத்தமிழர் தொன்மையும், வழக்காறுகளும்" நூல் வெளியீட்டுவிழா இணுவில் அறிவாலயத்தில் நடைபெற்றபோது நூலாசிரியரை பேராசிரியர் எஸ்சிவலிங்கராசா மாலை அணிவித்துக் கௌரவிப்பதையும், திருமதி மகாயோகேஸ்வரி சிவஞானத்திடமிருந்து எழுத்தாளர் ஆ.சபாரத்தினம் நூலைப் பெற்றுக்கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (44)

நல்லவனுக்கு நலம் நடக்கும்
என மட்டும் நம்பாது வல்லவனாயும் வாழ்ந்துவிடு பாப்பா
- பாரதியார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
விளம்பரப் பணிமனை : 0212220188
thinamurasu@live.com

## இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்!

இன்று தந்தையர் தினம். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் வரும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையருக்கான தினமாக உலகமெங்கும் கொண்டாடப்பட்டு வருகிறது.

"மரியாதை செலுத்த விரும்பும் போது பெற்றோர் இறந்துவிட்டனர்" என்று ஜப்பானியக் கவிதைவரி ஒன்று உண்டு. நம்மில் பலருக்கு பெற்றவர்களின் எண்ணங்களையும் கண்டிப்புகளையும் சரியான அர்த்தத்தில் விளங்கிக் கொள்ள ஒரு பக்குவ காலம் தேவைப்படுகிறது. குறைந்தபட்சம் நமக்கும் பிள்ளைகள் என்று வந்த காலத்தின் பிறகு, நமது பெற்றோர் பற்றிய கணிப்பும் நம்மிடம் கூடுதல் வெளிச்சம் பெறுகிறது.

ஃப்ரெய்ட் சொல்லியபடியே பெரும்பாலான தந்தை–மகன் உறவு நெருடல்களுடன் கூடியதுதான். பெண் பிள்ளைகளுக்கு தந்தையே அன்புநிறைந்த ஒரு ஆளுமையாக, மாற்றுப்பால் உலகின் மாதிரியுருவாகத் தோற்றம் பெறுவதும் காணக்கிடைக்கிற ஒன்றுதான். தந்தையோடு எல்லாமும் போய்விட்டதாக வருத்தப்படும் பாரிமகளிரின் நெஞ்சைக் கனக்க வைக்கும் சோகத்தை இலக்கியமாயும் அறிகிறோம்.

பொறுப்புகளைப் புறக்கணித்து வாழ்கிற தந்தை, தாயைச் சமஉரிமைகளோடு மதிக்காத் தந்தை பிள்ளைகளால் மதிக்கப்பட முடியாதவனாகிறான். தந்தைக்குப் பிறகு குடும்பத்தின் தலைமைப் பொறுப்புக்குக் காத்திருக்கும் ஆண்மகனின் அந்தரங்க உணர்விலும் தந்தைக்கெதிரான எண்ணங்கள் உருவாகிவிடுவதை உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். "தந்தையின் மரணத்தை விரும்பாதவர் யார்?" என்ற கேள்வியை கரமசோவ் சகோதரர்கள் நாவலில் டொஸ்ரோயெவ்ஸ்கி எழுப்புகிறார்.

எல்லாமிருந்தாலும், தன்னுடைய இடத்தில் பிள்ளையையும், தன்னை அப்பாவாகவும் வைத்துப் பார்க்கிற அந்தக் காலம் வருகையில், எந்தப் பிள்ளைக்கும் அப்பா பற்றிய புரிதல் நிகழ்கிற கணமாகி விடுகிறது. கவிஞர் ஒருவர் எழுதுகிறார்: "அப்பாவை வெறுத்து வந்திருக்கிறேன் நான். குடும்பத்தைக் கவனியாமல் இருந்தவர் என்று வசைகள் சொல்லியிருக்கிறேன். சண்டை போட்டு வீட்டை விட்டு ஓடிப் போயிருக்கிறேன். ஆனால் யோசிக்கும் வேளையில்... எல்லா விதத்திலும் அப்பாவைப் போலத்தான் நானும் இருக்கிறேன். விவரம் தெரிந்த பிறகு என் பிள்ளைகளும் என்னை வெறுக்கலாம். நிச்சயம் என்னால் தாங்கிக்கொள்ள முடியாது அப்போது" என்று தன் பதற்றத்தைப் பதிவு செய்கிறார்.

இந்த பதற்றத்தையும் சோகத்தையும் சிறுவயதிலேயே உணரக் கிடைக்கிறது பாரதிக்கு. "தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது, தரணி மீதினில் அஞ்சலென்பாரிலர்" என்று தன் சுயசரிதையில் சிந்தை நோகிறான் அவன்.

பிள்ளைகள் எவ்விதமாய் உணர்ந்தாலும் தந்தையர் எப்போதும் பிள்ளைகளை வெறுக்க முடியாதவர்களாகவே தான் இருப்பர். சோகங்களில் எல்லாம் தலையாயது புத்திர சோகம்தான் என்றறிகிறோம். அது பிள்ளைகளின் மீது பிரவகிக்கும் கட்டுக்கடங்காத பேரன்பினால் நேர்வது. "பேரன்பு கொண்டோரில் யாரிங்கே பிழைத்து நின்றார்" என்று அறிய நேரும் சோகம் எல்லாவற்றிலும் கொடியதுதான்.

தந்தையரின் அன்பையும் அக்கறைகளையும் உணர்ந்து கொள்ள பிள்ளைகள் சிலருக்கு குறிப்பிட்டளவு காலமெடுக்கலாம். அந்தப் புரிதல் நேரும் காலத்தை விரைவுபடுத்தவும், தந்தையரைப் போற்றுவது நம்மை நாமே போற்றுவதும், நம்முடைய வாழ்வின் விழுமியங்களைச் சரிசெய்து கொள்வதுமே என்பதை உணர்த்தவும் இத்தகைய தினங்கள் உதவும்.

அன்பைப் பகிரும் மற்றுமொரு விசேட வாய்ப்பாகக் கருதி – தந்தையர் தின வாழ்த்துக்கள்!

- ஆசிரியர்

# குற்றச் செயல்களுக்கு முழுக்குப் போடுங்கள்

## – சிறைக் கைதிகளுக்கு நீதிபதி அறிவுரை



(யாழ்ப்பாணம்)

குற்றச் செயல்களில் திரும்பத்திரும்ப ஈடுபடுபவர்கள் ஆண்களாகத்தான் இருக்கின்றார்கள் என யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா தெரிவித்தார்.

யாழ்.சிறைச்சாலையில் கைதிகளுக்கான பனம்பொருள் சார் உற்பத்தி கைப்பணி பயிற்சி ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

தேவையற்ற விடயங்களில் தலையிடுவதனாலும், நண்பர்களின் தூண்டுதலினாலும் பல்வேறு தரப்பினரும் குற்றச் செயல்களில் திரும்பத் திரும்ப ஈடுபடுகின்றார்கள்.

ஒரு ஆண் தவறுதலாக புரியும் குற்றச் செயல்களை நிறுத்த நினைப்பதில்லை. மீண்டும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றம், சிறைச்சாலைகளில் காணக்கூடியதாக இருக்கிறது. உங்களில் ஏற்படுகின்ற மாற்றங்களை கொண்டுதான் குற்றம் புரியாது தடுக்க முடியும். தீய வழிகளில் செல்லாது நல்ல விடயங்களை கற்றுக் கொள்ள வேண்டும். ஆண், பெண் என வேறுபடுத்தி கைப்பணி வேலைகளையும், பயிற்சி நெறிகளையும் பயில்வதன் மூலம் சமுதாயத்தில் தேவையானவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

நாம் எதிர்மறையான விடயங்களை சிந்திக்கக் கூடாது. நல்ல விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கும் நாம் தயாராக இருக்கவேண்டும்.

வீட்கங்கள் முடிந்து போன போர்ச் சூழலை மீண்டும் உருவாக்கும் நோக்கத்துடன் செயற்படுகின்றன. அங்கு சில அரசியற் கட்சிகளும் ஒத்துழைக்கின்றன.

முடிவுற்றவற்றை நினைவுபடுத்துவது வேதனை தரக் கூடியது. முடிந்தவற்றை நினைக்காது நல்ல விடயங்கள் நடப்பதற்கு காத்திருக்கின்றன. அவற்றை சரியான முறையில் தேர்ந்தெடுத்து செய்ய வேண்டும். அதனால் நாம் பெரும் பயன டைவோம்.

நல்லவற்றை எடுத்துக் கொண்டு தீயவற்றை விலக்கினால் தீமைகளை நோக்கி செல்லத் தேவையில்லை.

நம் நாட்டு உற்பத்திகளில் பனைசார் உற்பத்திப் பொருட்களுக்கு விலை அதிகம். ஆனால் பொருளாதாரத்தினை அதிகளவில் ஈடுகட்ட முடியும். இப்பயிற்சி நெறி பெண்களுக்கு உதவியாக இருக்கும். ஆண்களும் முழுமனதோடு பொறுமையுடன் கற்றுக் கொண்டால் நல்ல பொருளாதாரத்தை ஈடுகட்ட முடியும். அத்தோடு மீண்டும் மீண்டும் குற்றச் செயல்கள் செய்வதற்கு மனம் ஒத்துழைக்க மாட்டாது.

நம் உள்ளூர் மக்களுக்கு உள்ளூர் உற்பத்திகள் பொருளாதாரத்தினை மேம்படுத்தி கொள்ள எந்த தீய வழிகளிலும் செல்லாதீர்கள். உங்களில் ஏற்படுகின்ற மாற்றத்தினை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள். சிறையிலிருந்து வெளியே சென்று சமூகத்துடன் சேரும் போது புதிய தன்னம்பிக்கை உருவாக்க இப் பயிற்சி நல்வழியை உருவாக்கும் என்றார். (எஸ்)

# தீவிர அரசியலில் பொன்சேகா; கட்டியம் கூறும் பொதுக் கூட்டங்கள்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா அரசியல் நடவடிக்கைகளில் தீவிரம் காட்ட ஆரம்பித்துள்ளார்.

இந்த தீவிர அரசியல் நடவடிக்கையின் ஒரு கட்டமாக ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களின் சங்கம் ஒழுங்கு செய்த கூட்டம் ஒன்றில் சரத் பொன்சேகா முக்கிய அதிதியாகக் கலந்து கொள்வதற்கு ஏற்பாடாகியிருந்தது.

மேற்படி ஜெனரலுக்கான யுத்த வீரர்கள் சங்கமானது முன்னாள் இராணுவத் தளபதியின் ஜனநாயக வரம்புக்குள்ளான அனைத்து அரசியல் நடவடிக்கைகளுக்கும் ஆதரவளிக்கும் என அச்சங்கத்தின் செயலாளரான ஓய்வுபெற்ற கப்டன் ராஜு டி சில்வா கூறினார். சரத் பொன்சேகாவின் வழிகாட்டலின் கீழ் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதிற்கு தமது சங்கம் உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பொன்சேகாவின் விடுதலைக்காக தமது அமைப்பு சுவரொட்டிகள், மகஜர் கையெழுத்து உட்பட பல்வேறு பிரசாரங்களை மேற்கொண்டதாகவும் அவரின் சிவில் உரிமைகளை மீள நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கவுள்ளதாகவும் அவர் கூறினார். இதனூடாக பொன்சேகா முழுமையாக அரசியலில் ஈடுபடும் வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# பாடசாலைகளுக்கு குடிநீர் விநியோகம் பூநகரிக் கோட்டத்தில் ஆரம்பம்

(பூநகரி)

பூநகரி கோட்டப்பாடசாலைகளில் மதிய உணவு சமைப்பதற்காகவும், மாணவர்களின் குடிநீருக்காகவும் சீரான நீர் விநியோகம் இன்மையால் ஏற்பட்ட சிரமம் நீங்கியுள்ளது.

பூநகரிப் பகுதிப் பாடசாலைகளின் குடிநீர் தேவை சம்பந்தமாக ஆய்வு நடத்திய வேள்விசன் நிறுவனத்தினர் பூநகரிக்கோட்ட வடபிரதேசப் பாடசாலைகளின் நலன் கருதி உழவு இயந்திரத்துடன் இணைந்த தண்ணீர்ப் பவுசரை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளரூடாக சென்றவாரம் வழங்கப்பட்டு பூநகரி மகா வித்தியாலயத்தில் தரித்துநின்று நேற்று முன்தினம் முதல் 10 இற்கு மேற்பட்ட பாடசாலைக்கு நீர் வழங்கும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை மூலமாக நீண்ட காலமாக இருந்து வந்த பாரிய பிரச்சினைக்கு தீர்வு கிடைத்திருப்பதாக பாடசாலை மாணவர்களின் பெற்றோர் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (112)

## மஹோற்சவம்

(கொக்குவில்)

கொக்குவில் - கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய (நந்தாவில் அம்மன் கோயில்) வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 23 ஆம் திகதி 10.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி மஞ சத்திருவிழாவும், 29 ஆம் திகதி கைலாசவாகனத் திருவிழாவும், யூலை 1 ஆம் திகதி சப்பறத் திரு விழாவும், 2 ஆம் திகதி தேர்த திருவிழாவும், தொடர்ந்து தீர்த்தத் திருவிழாவும், பூங்காவனத் திருவிழாவும் இடம்பெற்று 5 ஆம் திகதி சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (112)

# ஜே.வி.பி. குழுக்களுக்கிடையில் மோதல்; பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தகவல்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை - கட்டுவன பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஜே.வி.பி.யின் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் என சந்தேகிப்பதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்ய பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து செயற்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஜே.வி.பி.யின் கட்டுவன கூட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் உட்பட இருவர் பலியானதோடு மற்றுமொருவர் படுகாயமடைந்ததார்.

ஜே.வி.பி.யின் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி-56 ரக துப்பாக்கியால் சூடு நடத்தியுள்ளனர்.

அரசாங்கத்தின் ஆட்கொலையாளர்கள் சிலர் தமது கூட்டத்தில் நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தியதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

# தமிழ் மக்களை கூட்டமைப்பு நடுத்தெருவில் விட்டுவிட்டது

-சங்கர சிவன்-

அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சு வார்த்தை தொடர்பாகவும் காணி அபகரிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை சம்பந்தமாக நடத்தவுள்ள சாத்வீகப் போராட்டம் பற்றியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்று (ஞாயிற்றுக் கிழமை) கூடி முடிவு எடுக்கவுள்ளதாகச் செய்தி வெளியாகியிருக்கின்றது. கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்களுக்கு முன்கைவிடப்பட்ட சாத்வீகப்போராட்ட வடிவத்துக்கு மீண்டும் திரும்புகின்றார்கள். இவர்கள் சாத்வீகப் போராட்டத்தின் மூலம் மக்களுக்கு எந்த நன்மையையும் பெற்றுக் கொடுக்கவில்லை. ஆயுதப் போராட்டத்தின் மூலமும் எந்த நன்மையையும் பெற்றுக் கொடுக்கவில்லை. பிரதான பிரச்சினைக்கான தீர்வை இலக்காகக் கொண்டு போராட்டத்தை முன்னெடுக்காததே இதற்கான காரணம்.

இன்று நடக்கும் கூட்டத்திலும் இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிக் கூட்டமைப்புத் தலைவர்கள் பேசுவதாக இல்லை. காணி அபகரிப்பு போன்ற விடயங்கள் பற்றியே பேசப்போகின்றார்கள். இவ்விடயங்களைப் பேசும் போது சுயவிமர்சனம் செய்துகொள்ள வேண்டியதும் அவசியம். சமஷ்டி ஆட்சி முறைக்கு மிகவும் அண்மித்ததான சந்திரிகாவின் அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டத்தை இத்தலைவர்கள் நிராகரிக்காது இருந்திருந்தால் இன்று இவ்விடயங்கள் பற்றிப் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அந்தத்தீர்வுத் திட்டத்தை நிராகரித்து ஆயுதப் போராட்டத்தின் மூலம் தனிநாடு அமைக்கலாம் என்ற நம்பிக்கையுடன் இவர்கள் செயற்பட்டதன் விளைவு தான் இன்றைய கூட்டத்தில் பேசப்படும் விடயங்கள். எனவே, நாங்கள் தான் குற்றவாளிகள் என்று மக்களுக்கு ஒப்புதல் வாக்குமூலம் அளித்து விட்டுச் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிப்பதே நியாயமானது.

இன்றைய கூட்டத்தில் மட்டுமன்றி, இன்னும் சில காலத்துக்கு இவர்கள் இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிப் பேசப்போவதில்லை என்று உறுதியாகக் கூறலாம். இனப் பிரச்சினையின் தீர்வுக்கு இவர்களிடம் ஒரு கொள்கையும் இல்லை. தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மகாநாட்டு முடிவில் சம்பந்தன் ஆற்றிய உரையிலிருந்து இதை விளங்கிக் கொள்ளலாம். அனைத்துலக சமூகத்தை அசௌகரியப் படுத்தாமல் தமிழ் மக்கள் பொறுமை காக்க வேண்டும் என்று சம்பந்தன் கூறியதில் பின்வரும் மூன்று அர்த்தங்கள் அடங்கியிருக்கின்றன.

01. இனப் பிரச்சினையின் தீர்வுக்கு எங்களிடம் கொள்கைத் திட்டம் இல்லை.

02. தமிழ் மக்கள் இப்போது அரசியல் தீர்வு பற்றி அலட்டிக்கொள்ளக் கூடாது.

03. சர்வதேச சமூகம் ஒரு கட்டத்தில் வந்து தீர்வைப் பெற்றுத் தரும்.

இதைச் சொல்வதற்கு ஒரு அரசியல் தலைமை தேவையா? இப்படியானவர்களை மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்புவதால் ஏதேனும் நன்மை உண்டா?

எத்தனையோ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் சர்வதேச ஆதரவுடன் வெற்றியீட்டிய வரலாறு இருக்கையில் தமிழ்த் தலைமை ஏன் சர்வதேசத்தின் பக்கம் திரும்பக்கூடாது என்று ஒரு அன்பர் என்னிடம் கேட்டார். சர்வதேச ஆதரவுடன் வெற்றியீட்டிய இயக்கங்கள் சரியான கொள்கையை நிலையாகப் பற்றி நின்றவை. அந்த இயக்கங்களின் நிலைப்பாட்டை முழுக்க முழுக்க ஏற்றுக் கொண்ட உலக நாடுகளே அவற்றுக்கு உதவி வழங்கின. தமிழ்த் தலைவர்கள் காலத்துக்கொரு கொள்கையைப் பின்பற்றியவர்கள். அதுவும் பிழையான கொள்கைகள். இப்போது ஒரு கொள்கையும் இல்லை. இவர்கள் நம்பிக்கை வைக்கும் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் தனிநாடு போன்ற இவர்களின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வனவாக இல்லை.



**தமிழரசுக் கட்சி முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை காலத்துக்குக் காலம் ஏதாவதொரு மாயைக்குள் தமிழ் மக்களை உட்படுத்தித் தங்கள் பாராளுமன்றப் பதவி களைத் தக்க வைத்துக் கொண்டார்கள். முதலில் சமஷ்டி. பின்னர் தனி நாடு. அதன் பின் புலிகளின் ஏக பிரதிநிதித்துவம். இப்போது சர்வதேச சமூகம்.**

இந்த நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் இலங்கையில் தமக்குச் சார்பான அரசாங்கம் அமைய வேண்டும். என்பது பிரதான இடத்தில் இருக்கின்றது. இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு அந்த நிகழ்ச்சி நிரலில் இல்லை. இந்த நிலையில் இனப் பிரச்சினையின் தீர்வுக்குச் சர்வதேச சமூகத்தை நாடுவது இலவம் பழத்துக்கு காத்திருந்த கிளியின் கதைபோல் ஆகிவிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்த வரையில் தங்கள் கட்சிக்கெனக் கொள்கைத் திட்டமொன்றைத் தயாரித்து வெளிப்படுத்தாமல் சர்வதேசத் தலையீட்டை எதிர்பார்த்திருப்பதுசர்வதேசம் கூறுவதையே ஏற்கும் நிலைக்கு கொண்டுபோய் விட்டுவிடும். அந்த நிலையை இன்று காண்கின்றோம். நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தல், போர்க் குற்ற விசாரணையை முன்னெடுத்தல், வடமாகாண சபைத் தேர்தலை நடத்துதல் ஆகியவையே தமிழ் மக்களின் பிரச் சினை தொடர்பாக சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடு. இது நான்கு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஜெனீவாத் தீர்மானம் முதலாவது சந்தர்ப்பம். ஹிலாரி கிளின்ரன் - ஜீ.எல்.பீரிஸ் சந்திப்பின் போது ஹிலாரி கிளின்ரன் தெரிவித்த கருத்து இரண்டாவது சந்தர்ப்பம். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே.சிஸன் இலங்கையில் தனது முன்னுரிமை விடயங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்தமை மூன்றாவது சந்தர்ப்பம்.தூதுவரின் கருத்து அமெரிக்க அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு என்று அமெரிக்கத் தூதரகம் விளக்கமளித்தமை நான்காவது சந்தர்ப்பம். இம் மூன்று விடயங்களையும் அமெரிக்கா அடிக்கடி வலியுறுத்திக் கூறுவது தற்செயலானதல்ல. இது தான் எங்கள் செயற்பாட்டு எல்லை என்பதை வலியுறுத்துவது தான் அமெரிக்காவின் நோக்கம்.

யதார்த்தம் இவ்வாறிருக்க அமெரிக்காஉள்ளிட்ட சர்வதேச சமூகத்தில் நம்பிக்கைவைக்குமாறு தமிழ் மக்களுக்குக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஆலோசனை கூறுவது ஏன்?

தமிழரசுக் கட்சி முதல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை காலத்துக்குக் காலம் ஏதாவதொரு மாயைக்குள் தமிழ் மக்களை உட்படுத்தித் தங்கள் பாராளுமன்றப் பதவிகளைத் தக்க வைத்துக் கொண்டார்கள். முதலில் சமஷ்டி பின்னர் தனிநாடு அதன் பின் புலிகளின் ஏக பிரதிநிதித்துவம். இப்போது சர்வதேச சமூகம்.

சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்த போதிலும் அது கனடாவைப் போல மத்திக்குக் கூடுதல் அதிகாரங்கள் உள்ள சமஷ்டியா அல்லது அவுஸ்திரேலியாவைப் போல சமஷ்டி அலகுகளுக்குக் கூடுதலான அதிகாரங்கள் உள்ள சமஷ்டியா என்பது பற்றி மக்களுக்குத் தெளிவு படுத்தவில்லை. ஆனால் தங்கள் பிரசார வளங்களையும் பேச்சு வன்மையையும் முழுமையாகப் பயன்படுத்திச் சமஷ்டி என்ற மாயைக்குள் தமிழ் மக்களைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்கள். அந்த மாயை உடையத் தொடங்கியதும் தனிநாட்டு மாயை கைகொடுத்தது. பின்னர் புலிகளை ஏக பிரதிநிதிகளாக அங்கீகரித்து அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார்கள் என்ற மாயையைத் தோற்றுவித்தார்கள். இப்போது சர்வதேசம் என்ற மாயை. இது கூட்டமைப்பின் வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடு.

தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டியது அம்மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் தலையாய கடமை. ஆனால் கூட்டமைப்பினரால் அக்கடமையை நிறைவேற்ற இயலவில்லை.

தீர்வுக்கான கொள்கைத் திட்டமொன்றைத் தயாரிக்க இயலாத நிலையில் இருப்பதே இதற்குக் காரணம். கூட்டமைப்பின் உயர் நிலைக் கூட்டங்களில் இனப்பிரச்சினையின் தீர்வு பற்றிப்பேசப்படுவதில்லை. கொள்கைக் கருத்தொருமைப்பாடு இல்லாமல் தீர்வுபற்றி எப்படிப் பேசுவது? கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது பற்றியும் காணி அபகரிப்பு பற்றியும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது பற்றியுமே பேசுகின்றார்கள். ஜே.பி.வி. எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியும் காணி அபகரிப்பு பற்றியும், தமிழ் அரசியல் கட்சிகளின் விடுதலை பற்றியும் பேசுகின்றது. 'தமிழ்மக்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்கள்என்றுஉரிமை கோருபவர்கள் காணிப் பிரச்சினையோடும் கைதிகளின் விடுதலைப் பிரச்சினையோடும் நின்றுவிடாமல் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் செயற்பாட்டிலும்ஈடுபடவேண்டும். கூட்டமைப்பினால் இயலவில்லையென்றால், அது தமிழ் மக்களை நடுத்தெருவில் விட்டுவிட்டது என்பதே அர்த்தம்.

தோற்றுப்போன தலைமையை நிராகரித்து, இனப்பிரச்சினையைச் சரியான தடத்தில் முன்னெடுக்கக் கூடிய தலைமையை ஏற்பதற்குத் தமிழ் மக்கள் முன்வரவேண்டும்.

# பொன்சேகாவுடன் அரசியல் உறவுவைத்த ஐ.தே.க. உறுப்பினர்கள் மீது கடுப்பு

## சட்ட நடவடிக்கை எடுக்கவும் முஸ்தீபு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் அரசியல் உறவு வைத்துக் கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களான பாலித்த ரங்கே பண்டார, பாலிததெவரப்பெரும ஆகியோரிடம் விளக்கங்களைக் கோரவுள்ளதாக அந்த கட்சியின் சட்டப்பிரிவு தெரிவித்துள்ளது.

தமது கட்சியின் அனுமதியின்றி வேறு கட்சித் தலைவர் ஒருவருடன் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டமை தொடர்பில் அவர்களிடம் விளக்கம் கோரப்படவுள்ளது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடமிருந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது, குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகாவுடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக முறையிடப்பட்டுள்ளது.

சரத்பொன்சேகாவை விடுவித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளுக்காக அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதேயன்றி, அவரது கட்சியை விரிவாக்குவதற்கு எந்த வித அனுமதியும் அளிக்கப்படவில்லை என எதிர்க்கட்சியின் சட்டத்துறை சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.



இராணுவத்தின் ஆசிரி இதய சிகிச்சை நிதியத்தின் முதலாவது பயனாளியான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 வயது சிறுவனான சந்தோஷ் வெற்றிகரமான இதய சத்திரசிகிச்சையின்பின் பெற்றோருடன் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியுள்ளார்.

இதயத்தில் துவாரத்தைக் கொண்டிருந்த சந்தோஷுக்கு இராணு வத்தின் ஆசிரி இதய சிகிச்சை நிதியத்தின் மூலம் ஆசிரி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# புதையல் தோண்டும் படலம் இப்போது உச்சக்கட்டம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக அமைந்துள்ள புதைபொருள் உள்ள இடங்கள் பலவற்றில், சட்டவிரோத புதையல் அகழ்வு நடவடிக்கைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், நேற்றுமுன்தினம் அநுராதபுரத்தில் உள்ள அபயகிரிய என்ற இடத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திர வட்டக்கல் பிரதேசத்தில் சட்ட விரோத அகழ்வு இடம்பெற்றபோது, அங்கு அதிகாரிகள் சென்ற வேளையில் அவர்கள் தப்பியோடியுள்ளனர்.

இந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் ஒரு அடி ஆழம் தோண்டி சிதைக்கப்பட்டிருந்ததாக புதைபொருள் திட்ட இயக்குனர் ரி.ஜி.குலத்துங்க தெரிவித்துள்ளார்.

புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தி பல ஆயுதங்களையும் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இதேவேளை, புதையல் தோண்டுபவர்களினால் அகழ்வுகளின் மூலம் பெறப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட பல அரிய பொருட்கள் அதிகளவில் விற்பனைக்கு வந்தள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மிகிந்தலை பிரதேசத்தில் 15 இலட்சம் பெறுமதியான ஆயிரத்து 300 தங்க முலாம் பூசப்பட்ட பொருட்களை விற்கமுனைந்தவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கல்வி அமைச்சின் செயலாளர் திடீர் பதவி நீக்கம்

## காரணம் புரியாமல் அதிகாரிகள் திணறல்

(கொழும்பு)



கலவி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகர உடனடியாக அமுலாகும் வகையில் அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இதன் பிரகாரம் கல்வி அமைச்சின் புதிய செயலாளராக கோத்தாபய ஜயரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் தாம் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக கோத்தாபய ஜயரத்னவுடன் தொடர்பு கொண்டுகேட்டபோது கூறினார்.

கல்வி அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள கோத்தாபய ஜயரத்ன, இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைக் கொண்டுள்ளமை குறிபபிடத்தக்கது.

வவசாய உதவி ஆணையா[illegible]க பொதுச் சேவையில் இணைந்துகொண்ட அவர் கண்டி மாவட்ட அரச அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதனையடுத்து இதுவரை காலமும் வீடமைப்பு மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சின் செயலாளராக கோத்தாபய ஜயரத்ன கடமையாற்றி வந்தார். அடுத்த வாரமளவில் புதிய கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாக கோத்தாபய ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

# சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி உதவி கோருகிறது அரசு

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு அனைத்துலக நாணய நிதியத்திடம் இருந்து அரசு மீண்டும் நிதியுதவி கோரியுள்ளது.

அனைத்துலக நாணய நிதியம் வழங்கிய 2.6 பில்லியன் டொலர் நிதியுதவியின் இறுதிக் கட்டமான 400 மில்லியன் டொலரை விடுவிப்பதற்கு முன்னதாக, அனைத்துலக நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழுவொன்று களஆய்வை மேற்கொள்ள கொழும்புக்கு வந்திருந்தது.

11 நாள் பயணத்தை மேற்கொண்ட இந்தக் குழுவினரிடமே அரசு புதிய நிதியுதவிக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. இது தொடர்பாக, கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அனைத்துலக நாணய நிதியத்தின் பயணக் குழுவின் தலைவர் ஜோன் நெல்மஸ், பல பத்தாண்டு கால உள்நாட்டுப் போரின் பாதிப்புகளிலிருந்து மீண்டெழுவதற்கு இலங்கை அரசு மேலும் நிதி உதவிகளைக் கோரியுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் எவ்வளவு நிதியுதவியை அரசு கோரியுள்ளது என்ற தகவலை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

அதேவேளை, மத்திய வங்கி கூறியது போன்று இந்த ஆண்டில் 7.2 வீத பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியாது என்றும், 6.75 வீத பொருளாதார வளர்ச்சியையே இந்த ஆண்டில் அனைததுலக நாணய நிதியம் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சில கொள்கை ரீதியான நடவடிக்கைகளால் இந்த ஆண்டில் பணவீக்கம் 9.5 வீதமாக அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையே, வெளிநாட்டு நாணயக் கையிருப்பைப் பேணுவதற்கு, குறைந்தது 500 மில்லியன் டொலரை அனைத்துலக நாணய நிதியத்திடமிருந்து கோரியுள்ளதாக நிதியமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

# பாலியல் தொழிலாளர்களை "எயிட்ஸ்" தாக்கும் அபாயம்

## மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதிலும் 37 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரையான பெண் பாலியல் தொழிலாளிகள் இருப்பதாக பாலியல் நோய்கள் தொடரபான விசேட நிபுணர் மருத்துவர் ஜி.வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பெண்களிடமிருந்து தினமும் சுமார் 80 ஆயிரம் ஆண்கள் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

வறுமை உட்பட பல்வேறு காரணங்களினால் பெண்கள் இவ்வாறு பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பாலியல் சம்பந்தமான நோய்கள் பரவுவதை தடுப்பதற்காக விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல், மார்ச் 31 ஆம் திகதி வரையான காலத்தில், இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு இலக்கான ஆயிரத்து 503 பேர் அடையாளம் காணப்பட்டதாக பாலியல் நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் ஜி.வீரசிங்க தெரிவித்துள்ளார்.

சுமார் 800 பேர் சிகிச்சைகளுக்காக சமுகமளித்து வருகின்றனர். இலங்கையில் சுமார் 3 ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்களில் 90 வீதமானோருக்கு, பாதுகாப்பற்ற உடலுறவுகள் காரணமாக அந்த நோய் தொற்றியுள்ளதாகவும் வீரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# அடம்பிடிக்கும் கல்விசாரா ஊழியர்கள்; தினசரி பத்து மில்லியன் ரூபா இழப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக பல்கலைக்கழகங்களுக்கு நாளொன்றுக்கு 10 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுவதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி சாரா ஊழியர்கள் தொடர்ந்து 10 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தமது சம்பளம் மற்றும் சம்பள முரண்பாடு தொடர்பான கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றும் வரை வேலைக்குத் திரும்பப் போவதில்லை எனக் கூறியுள்ளனர்.

வேலை நிறுத்தம் காரணமாக நாம் தினம் 10 மில்லியன் ரூபா நஷ்டத்தை அனுபவிக்கின்றோம். வேலைநிறுத்தம் தொடருமாயின் நாம் மேலும் நஷ்டமடைவோம் என உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ன கூறினார்.

வேலைநிறுத்தம் நடந்தாலும், சம்பளம், பராமரிப்பு, மின்கட்டணம், எரிபொருள் என பல்[illegible] தேவைகளுக்கு செலவழி[illegible] ஆக வேண்டும். இதுவே ந[illegible] ஏற்பட காரணம் என அவர் கூறினார்.

பல்கலைக்கழக செயற்பாடுகள் முடங்கிவிட்டமை கல்விக்கு ஏற்பட்ட பெருநஷ்டம் என ஒரு அமைச்சு அதிகாரி கூறினார்.

சில பீடங்களில் நடைபெறும் பரீட்சைகள், விரிவுரைகள் தொடரபில் இப்போது வழங்கி வரும் அத்தியாவசிய சேவைகளையும் நிறுத்தப்போவதாக கல்விசாரா ஊழியர்கள் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, ஜூலை 4 ஆம திகதியிலிருந்து தமது கோரிக்கைகள் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும்வரை தாம் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக பல்கலைக் கழக கல்விசார் சேவையினர் ஏற்கெனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குளவித் தாக்குதலைத் தவிர்க்க தேன்கூடுகளை அகற்றுவதா?

(கொழும்பு)

சிகிரியாப் பகுதியில் உள்ள தேன் கூடுகளை அகற்ற முடியாது என கமநல சேவைகள் மற்றும் வன விலங்கு அமைச்சர் எஸ்.என்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

தேன் கூடுகளை அகற்றுவது குளவித் தாக்குதலிலிருந்து தப்புவதற்கான சரியான தீர்வாக அமையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தும் உள்ளனர். இதேவேளை, சிகிரிய மலைப்பகுதி தற்காலிகமாக பல தடவைகள் மூடப்பட்டு வந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. இருந்தபோதும், குறித்த பகுதியில் குளவித் தாக்குதலில் இருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பில் தாம் கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# கிருஷ்ணபுரத்தில் புதிய பாடசாலை; சந்திரகுமார் எம்.பி. நடவடிக்கை


(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கிருஷ்ணபுரம் பகுதியில் ஆரம்ப பாடசாலை ஒன்றினை புதிதாக நிறுவுவதற்கு ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசசந்திரகுமார் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கமைவாக வலயக்கல்விப் பணிமனையின் மூலம் சாத்தியக் கூற்றறிக்கையினை தயாரித்ததன்பின், அங்கு ஆரம்ப பாடசாலையினை அமைப்பதற்கான சாதகநிலை காணப்படுவதை உறுதி செய்ததன் அடிப்படையில் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக கடந்த வியாழக்கிழமை அப்பாடசாலையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் அப்பகுதி மக்களிடம் வாக்குறுதியளித்தார்.

கிருஷ்ணபுரம், விநாயகபுரம் ஆகிய கிராமங்களை ஒன்றிணைத்து மக்களின் தேவைகள் தொடர்பான ஆய்வுக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் குறித்த கிராமங்களைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அவர்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தமது தேவைகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதன் போது மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தபின் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சி மாவட்டத்தில் 18000 வரையான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கான முயற்சிகளில் நாம் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றோம். அத்தோடு கட்டம் கட்டமாக கிராமப் புறங்களை நோக்கி மின்விநியோகங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கமைவாக தற்போது அம்பாள் குளம் பகுதிக்கு மின் இணைப்புக்களை வழங்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. அதைத் தொடர்ந்து விநாயகபுரம், அறிவியல்நகர் ஆகிய பகுதிகளுக்கான இணைப்புக்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு மின் கம்பங்கள் நாட்டப்பட்ட பகுதிகளுக்கு விரைவாக இணைப்புக்களை வழங்கவும், இவ்வருட இறுதிக்குள் மாவட்டத்தின் கணிசமான பகுதிகளுக்கு மின்சாரத்தினை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு மக்களின் கோரிக்கைக்கு அமைவாக கிருஷ்ணபுரம் ஊடாக ஏ - 9 வீதியைச் சென்றடையும் வீதியை புனரமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது. மேலும் மக்கள் எதிர்கொள்ளும் காணி அனுமதிப்பத்திரம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றது. இருப்பினும் மக்களின் காணிகளை வேறு எவரும் கையகப்படுத்த முனைவதை நாம் அனுமதிக்க மாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மேலும் குறிப்பிட்டார்.



இக்கலந்துரையாடலில் கிருஷணபுரம், விநாயகபுரம் ஆகிய கிராமங்களைச்சேர்ந்த பலநூற்றுக்கணக்கான மக்கள் பங்கு கொண்டனர். இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அப்பகுதி கிராம சேவையாளர் சேந்தன், குறித்த கிராமத்தில் மிகப் பெரும் தொகை யான மக்கள் ஒன்று கூடிய முதல் நிகழ்வு இதுவென குறிப்பிட்டார்.

இங்கு கரைச்சி பிரதேச செயலக உதவித்திட்டப்பணிப்பாளர் அமல்ராஜ், கிளிநொச்சி வலய பிரதிக்கல்விப்- பணிப்பாளர் இதயராஜா, முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் விந்தன், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், காணி வெளிகளபோதனாசிரியர் பாலவரதன், கிராம அபவிருத்திச் சங்கத் தலைவர் யோசேப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் கொடியேற்றத்துடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புத்தண்டிகை உற்சவமும், 21 ஆம் திகதி வியாழக்கிழமை கைலாசவாகன உற்சவமும், 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருமஞ்ச உற்சவமும், 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பற உற்சவமும். 25 ஆம் திகதி திங்கடகிழமை காலை 9.00 மணிககு தேர்த்திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும், மாலை 6.00 மணிக்கு கொடியிறக்க வைபவமும் நடைபெறவுள்ளது.

இவ்வாலய இவ்வாண்டு மஹோற்சவப் பெருவிழாவை சிவஸ்ரீ குருபாகரக் குருக்கள் நிறைவேற்றிவைப்பார்.

(60)

## இறுவட்டு வெளியீடு

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் மீது பாடப்பட்ட "அழகன் முருகன்" இறுவட்டு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஆலய முன்றலில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு இறுவட்டை வெளியிட்டு வைக்கவுள்ளார். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், ஆசிரியர் கு.துஸ்யந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர். இறுவட்டுப் பாடலை ஆசிரியர் பொ.சகலகலாநிதி இயற்றியுள்ளார்.

(03)

# பண்ணை வடிகால் தொகுதியில் தொடர்ந்து வீசுகிறது துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.பண்ணை உள்ளூராட்சி திணைக்கள காரியாலயத்திற்கு அருகாமையால் செல்லும் வாய்க்கால் துர்நாற்றம் வீசுவதாக அவ்வீதியூடாக பயணிக்கு பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

யாழ்.நகரப்பகுதி ஊடாக ஊடறுத்துச் செல்லும் இவ்வாய்க்கால் பண்ணைக்கிடையில் நீர் ஓட முடியாமல் ஸ்தம்பித்து உள்ளது.

இதனால் அப்பகுதியிலிருக்கும் மக்கள் ஒவ்வாத நோய்த் தாக்கத்திற்குள்ளாவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பண்ணைச் சந்தையில் உள்ள மாமிசப் பொருட்களின் கழிவுகளும் இவ்வாய்க்கால் வழியாக செல்ல முடியாமல் துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதாரசீர்கேடுகள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**அதிகாரிகளின் கண்களில் தெரியாமல் போனது ஏன்?**



எனவே இவ்வாய்க்கால் வழியாக நீர் தேங்கி நிற்காது ஓடுவதற்கும், துர்நாற்றம் வீசுவதைத் தடுப்பதற்கும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(எஸ்)

# வடக்கில் 38 ஆயிரம் பேர் செயற்கை அவயவங்களுடன்

## - ஜெய்ப்பூர் நிறுவனம் சாதனை -

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது 25 ஆவது வருட சேவையில் 38 ஆயிரத்து 820 செயற்கை அவயவங்களை தயாரித்து மாற்று திறனாளிகளுக்கு வழங்கியுள்ளதாக யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் புள்ளி விபரத்திலிருந்து தெரியவந்துள்ளது.

மாற்று திறனாளிகளின் தேவைக்கு ஏற்ற வகையில் செயற்கை அவயவங்களை நவீன தொழில் நுட்பத்தில் தயாரித்து மாற்று திறனாளிகளுக்கு வழங்கி வருகின்றார்கள்.

ஐ.எம்.ஓ.எச். மோட்டிவேஷன் உள்ளிட்ட பொது அமைப்புக்களுடன் இணைந்து யாழ்.மாவட்டத்தில் தனி ஒரு நிறுவனமாக தனித்துவ சேவை புரியும் யாழ். ஜெய்ப்பூர் நிறுவனம் தனது 25 ஆவது வருட சேவையை கொண்டாடும் விதமாக இப் புள்ளி விபரத்தினை வெளியிட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனம் 2012 ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 549 சார் உறுப்புக்களையும், 4 ஆயிரத்து 925 நடமாடும் உபகரணங்களையும் தயாரித்து மாற்று திறனாளிகளுக்கு கையளித்துள்ளது.

இதனை விட 48 ஆயிரத்து 875 பேருக்கு உடல் நிலைச் சிகிச்சை வழங்கியுள்ளது. அதே வேளை மாற்று வலுவுடையோரின் மறுவாழ்வு சேவையாக 100 பேருக்கு சேவை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எஸ்)

## முரசின் இன்றைய பலன்

(17.06. 2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆனி மாதம் 03 ஆம் திகதி. திரியோதசி மாலை 5.31 வரை.
நட்சத்திரம் கார்த்திகை முன்னிரவு 8.25 வரை. சித்தயோகம். கார்த்திகை விரதம்.
இராகுகாலம் 4.23 - 5.53 வரை. சுபநேரம் 8.53 - 10.23 வரை.
எமகண்டம் 11.53 - 1.23 வரை. குளிகைகாலம் 2.53 - 4.23 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சுபச்செலவுகள், முன் எச்சரிக்கை அவசியம், சஞ்சலப்பட நேரிடும், பெற்றோரால் கஷ்டம். |
| ரிஷபம் | சுபச் செலவு, நிலம் வீடு சேரும் வாய்ப்பு, வீண் பழி சுமக்க நேரிடும், பிரச்சினைகளை சமாளிப்பீர். |
| மிதுனம் | வாகன இலாபம், பிரச்சினைகள் சுமுகமாகத் தீரும், நினைத்த காரியம் நிறைவேறும். |
| கடகம் | எதிலும் இலாபம், பணவரவில் ஏற்றத்தாழ்வு, நண்பர்களால் பிரச்சினை, பெரியோர் நட்பு. |
| சிம்மம் | குடும்பத்தில் சுகம், மேலதிகாரிகள் பாராட்டு, சிறப்பான வேலைவாய்ப்பு, பயண அனுகூலம். |
| கன்னி | முயற்சிகளில் வெற்றி, மறைமுக எதிர்ப்புகள், சுபகாரியத்தடை, விட்டுக் கொடுத்து நடக்கவும். |
| துலாம் | சந்திராட்டமம் பயணம் தவிர்க்கவும், குடும்பத்தில்அன்னியோன்னியம், பொன்பொருள்சேரும். |
| விருச்சிகம் | நற்கீர்த்தி, உடல்நலக் குறைவு, மருத்துவச் செலவு அதிகரிப்பு, பணவரவில் தடை. |
| தனுசு | மனவிரக்தி, கடல் கடந்து பயணம், பொருளாதாரத்தில் திருப்தி, நண்பர்கள் அனுகூலம். |
| மகரம் | சுலப நன்மை, அதிகாரியை மதிக்கவும், ஒத்துப் போனால் கவலை இல்லை, திருமணம் கூடும். |
| கும்பம் | சகோதரர் உதவி, போக்குவரத்தில் அவதானம், புதிய நட்பில் கவனம், தூர தேச நற்செய்தி. |
| மீனம் | வாக்கு நலம், புதிய முதலீடுகள் பெருகும், வர்த்தகம் சிறப்படையும், முன்னெச்சரிக்கை நன்று. |

## ஆக்ரோஷமே எனது பலம்

(புதுடில்லி)

ஆக்ரோஷமான பாணியில் விளையாடுவது எனது பலம். அதைக் குறைப்பதற்கு முயற்சிக்கப் போவதில்லை எனத் இந்திய அணி துணைக் கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

ஆக்ரோஷமே எனது பலம். எனது ஆக்ரோஷம் காரணமாகவே என்னால் சிறப்பாக ஆட முடிகின்றது. எனது ஆக்ரோஷத்தைக் குறைக்க வேண்டுமென நான் கருதவில்லை. சில தருணங்களில் எல்லையை மீறி நடப்பதை ஏற்றுக் கொள்கின்றேன். அதை எதிர்காலத்தில் குறைப்பதற்கு முயற்சிப்பேன்.

மைதானத்தில் என்றாலும், மைதானத்திற்கு வெளியில் என்றாலும் மகேந்திரசிங் டோனி அமைதியான சுபாமுடையவர்.

அனைவரும் தங்களின் இயல்பான குணங்களைக் கொண்டு காணப்பட வேண்டும். மற்றையவர்கள் நினைப்பதைப் பற்றிக் கவலைப்படக் கூடாது. அதையே நான் பின்பற்றி வருகின்றேன் என்றார்.

## வென்றது இங்கிலாந்து; வெளியேறியது சுவீடன்



யூரோ கிண்ணக் கால்பந்துத் தொடரின் லீக் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றிபெற்றது. அத்துடன் தொடரிலிருந்து சுவீடன் அணி வெளியேறியுள்ளது. டோன்ஸ்டக் நகரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் இங்கிலாந்து - சுவீடன் அணிகள் மோதின. மிகவும் பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் 23ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் கரோல் அசத்தலாக கோல் அடித்தார். இதனால் இங்கிலாந்து முதல் பாதியில் 1-0 முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி ஆட்டத்தில் அனல் வேகம் இருந்தது. 49ஆவது நிமிடத்தில் சுவீடன் வீரர் ஓல்ப் மெல்பர்க் தலையால் முட்டிய பந்தை கோல் வலை பகுதியில் இங்கிலாந்து வீரர் ஜான்சன் தடுக்க முயன்றார். ஆனால் அவரது காலில் பந்துபட்டு சூசைடு கோலாக மாறியது. இதனால் ஆட்டம் 1-1 என முன்னிலை பெற்றது. எதிரணி வீரர் தங்களுக்காக அடித்த கோலால் உற்சாகமடைந்த சுவீடன் அணி துடிப்புடன் ஆடி இ ந் த 59ஆவது நிமிடத்தில் 2ஆவது கோலை அடித்தது. கோலை மெல்பர்க் அடித்தார். இதனால் இங்கிலாந்து அணிக்கு திடீர் பின்னடைவு ஏற்பட்டது. எனினும் 64ஆவது நிமிடத்தில் வால்காட் அற்புதமாக கோல் அடித்து சமநிலை பெற்று கொடுத்தார். இதனால் ஆட்டம் 2-2 என சமநிலை அடைந்தது. கடைசி கட்டத்தில் இங்கிலாந்து அணியில் மாற்று வீரராக களமிறங்கிய டேனிவெல்பெக் 78ஆவது நிமிடத்தில் சுவீடன் வீரர்களின் தடுப்பு அரணை தாண்டி கோல் அடித்தார். இதனால் இங்கிலாந்து 3-2 என முன்னிலை பெற்றது. அதன்பிறகு சுவீடன் அணியால் கோல் அடிக்க முடியவில்லை முடிவில் 3-2 என்ற கோல் கணக்கில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இங்கிலாந்து அணிக்கு இது முதல் வெற்றியாகும். அந்த அணி முதல் ஆட்டத்தில் பிரான்சுடன் சமநிலை செய்தது. இந்த வெற்றியால் இங்கிலாந்து 4 புள்ளி பெற்றுள்ளது. சுவீடன் தொடர்ச்சியாக 2 தோல்வியை சந்தித்ததால் தொடரில் இருந்து வெளியேறியது.

## வடமாகாண மட்ட கரப்பந்து யாழ். மாவட்டத்திற்கு 5 முதலிடங்கள்

(மன்னார்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஐந்து முதலிடங்களைப் பிடித்துள்ளன. வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிகள் நேற்றைய தினம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலிடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை மன்னார் எருக்கலம்பிட்டி மகாவித்தியாலய அணியும் பிடித்துக்கொண்டன. 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலிடத்தை அளவெட்டி அருணாசலம் மகாவித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை வவுனியா கிடாச்சூரி அ.த.க.பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் மகாவித்தியாலய அணியும் பிடித்துக்கொண்டன.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலிடத்தை ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் மகாவித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை ஆவரங்கால் மகாஜனா வித்தியாலய அணியும் பிடித்துக் கொண்டன.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலிடத்தை வவுனியா ஸ்ரீசுமண வித்தியாலய அணியும், இரண்டாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை வவுனியா கிடாச்சூரி அ.த.க.பாடசாலை அணியும் பிடித்துக் கொண்டன.

19 வயது ஆண்களுக்கான போட்டியில் முதலிடத்தை புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை தலைமன்னார் அ.த.க. பாடசாலை அணியும் பிடித்துக் கொண்டன.

19 வயது பெண்கள் பிரிவில் முதலிடத்தை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை வவுனியா கிடாச்சூரி அ.த.க. பாடசாலை அணியும் பிடித்துக்கொண்டன. இப்போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகள் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதிபெறும். (12)

## அரையிறுதியில் சாய்னா



(ஜகார்த்தா)

இந்தோனேஷியா ஓப்பன் பட்மின்ரன் தொடரின் அரையிறுதிக்கு இந்தியாவின் சாய்னா நேவல் முன்னேறினார்.

இந்தோனேஷியாவில் நடக்கும் இத்தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதியில் செய்னா, சீனாவின் வாங்கை சந்தித்தார். முதல் செட்டை 21-17 என்று செய்னா கைப்பற்றினார். இரண்டாவது செட்டை சீனாவின் வாங் 23-21 என வென்றார். வெற்றியாளரை முடிவு செய்யும் மூன்றாவது செட்டில் செய்னா 21-19 என வெற்றி பெற்றார். முடிவில் செய்னா 21-17, 21-23, 21-19 என்ற செட்களில் வென்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

## உலகின் மிகச் சிறந்த ஒரு நாள் வீரர்

(லண்டன்)

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணிக்காக மீண்டும் போட்டிகளில் விளையாடத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அதிரடி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் உலகின் மிகச்சிறந்த ஒருநாள் போட்டித் துடுப்பாட்ட வீரர் என அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் ஓற்றிஸ் கிப்ஸன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும், கிறிஸ் கெய்ன் உலகின் மிகச்சிறந்த ஒருநாள் சர்வதேசப் போட்டித் துடுப்பாட்ட வீரர். இத்தொடர் ஆரம்பிக்கும் போதே ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரே மேற்கிந்தியத் தீவுகளுக்கு அதிக வெற்றிகளைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்ட தொடராகக் காணப்படுகிறது. அதனை மீண்டும் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த ஒருநாள் போட்டித் தொடரை வெல்வதற்கான அதிக வாய்ப்புக்கள் எங்களுக்கு உள்ளது. கிறிஸ் கெய்ல் ஓர் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர். அவரது உள்ளடக்கம் அணியைப் பலப்படுத்தும். கிறிஸ் கெய்ல் எப்போதும் நகைச்சுவை உணர்வு கொண்டவராக, குறும்புத்தனங்களைச் செய்பவராகவே காணபபடுபவர். அவர் தனது வழமையான இயல்பிலேயே காணப்படுகின்றார் எனத் தெரிவித்தார்.

## பாலின சர்ச்சை விளக்கமறியலில் வீராங்கனை




(கொல்கத்தா)

ஆணா, பெண்ணா என்ற பாலினச் சர்ச்சையில் இந்திய தடகள வீராங்கனை. பிங்கி பிராமனிக்கை 14 நாட்கள் நீதிமன்றச் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்குவங்கத்தை சேர்ந்தவர் பிங்கி பிரமானிக். ஆசிய விளையாட்டு உட்பட பல்வேறு போட்டிகளில் பதக்கம் வென்றுள்ளார். இவர் மீது பெண் ஒருவர் பாலியல் பலாத்கார குற்றச்சாட்டை சுமத்தினார். பிங்கி உண்மையில் ஒரு ஆண் என்றும், தன்னை திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றி விட்டதாகவும் பொலிஸில் புகார் அளித்தார்.

இதன் அடிப்படையில் கைது செய்யப்பட்ட பிங்கிக்கு தனியார் மருத்துவமனையில் பாலின சோதனை நடத்தப்பட்டது. இதில், அவர் ஒரு ஆண் என்பது தெரிய வந்தது. தொடர்ந்து அரசு மருத்துவமனையில் இரண்டாவது சோதனை மேற்கொள்ள மறுத்தார்.

இந்நிலையில் நேற்று சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் நீதிமன்றில் பிங்கி ஆஜர்படுத்தப்பட்டார். இவருக்கு, தலைமை சுகாதார அதிகாரி பாலின சோதனை நடத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டது. ஜாமின் மனு நிராகரிக்கப்பட்டது. 14 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது. இதுகுறித்து தலைமை சுகாதார அதிகாரி டாக்டர் சுகந்தா சில் கூறுகையில் நீதிமன்றின் உத்தரவு எங்களது கையில் கிடைக்கவில்லை. இதனைப் பெற்றவுடன் பிங்கிக்கு பாலின சோதனை நடத்தப்படும் என்றார்.

## பயஸ், பூபதி ஜோடியே களமிறங்கும்

(பெங்களூர்)

லண்டன் ஒலிம்பிக் ரென்னிஸ் போட்டியின் ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியா சார்பில் லியாண்டர் பயஸ் , மகேஷ் பூபதி ஜோடி களமிறங்கும் என்று அகில இந்திய ரென்னிஸ் சங்கம் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

உலக ரென்னிஸ் அரங்கில் அமர்க்களப்படுத்திய இந்தியாவின் பயஸ், பூபதி இருவரும் கருத்துவேறுபாடு காரணமாக தற்போது வெவ்வேறு வீரர்களுடன் இணைந்து விளையாடி வருகின்றனர். சமரசம் ஏற்பட்டு மீண்டும் இணைந்து விளையாடிய போட்டிகளிலும் பெரிதாகச் சாதிக்க முடியாமல் தடுமாறினர். இந்த நிலையில், லண்டன் ஒலிம்பிக் போட்டியில் ரோகன் போபண்ணாவுடன் இணைந்து களமிறங்க விரும்புவதாக மகேஷ் பூபதி தெரிவித்திருந்தார்.

ஆனால், அவரது வேண்டுகோளை நிராகரித்த இந்திய ரென்னிஸ் சங்கம், ஒலிம்பிக்கில் பயஸ் , பூபதி களமிறங்குவார்கள் என்று அறிவித்துள்ளது. பெங்களூரில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் இதற்கான முடிவு ஒருமனதாக எடுக்கப்பட்டதாக ரென்னிஸ் சங்க நிர்வாகி கூறியுள்ளார்.

கலப்பு இரட்டையர் பிரிவிலும் லியாண்டர் பயஸூடன் இணைந்து சானியா மிர்சா விளையாட வேண்டும் என ரென்னிஸ் சங்கம் வலியுறுத்தியுள்ளது. சானியா, பூபதி ஜோடி பிரெஞ்ச் ஓப்பனில் கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்று சாதனை படைத்த நிலையில், இந்த ஜோடியை பிரிக்க முடிவு செய்துள்ளது இந்தியாவின் பதக்க வாய்ப்பை கேள்விக் குறியாக்கி உள்ளது.

## பூபதியின் கோரிக்கை நிராகரிப்பு



(பெங்களூர்)

லண்டன் ஒலிம்பிக் ரென்னிஸ் இரட்டையர் பிரிவில் விளையாட லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி தேர்வு செய்யப்பட்டனர். போபண்ணாவுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற பூபதியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால், பெரும் சர்ச்சை வெடித்துள்ளது.

இது குறித்து பூபதி கருத்துத் தெரிவிக்கையில், பயசுடன் இணைந்து மீண்டும் ஒலிம்பிக்கில் விளையாட விருப்பது ஏமாற்றமான முடிவு. ஏற்கனவே நான்கு முறை விளையாடியுள்ளோம். இதில் ஒரு முறை கூட பதக்கம் கிடைக்கவில்லை. கடந்த சீசனில் திடீரென பிரிந்து, எனது முதுகில் குத்தினார். நாங்கள் இருவரும் பேசிக் கொள்வதில்லை. எங்களுக்குள் நட்பு இல்லை.

இந்நிலையில் மீண்டும் எங்களை ஒலிம்பிக் போட்டிக்கு அனுப்புவது சரியான முடிவு அல்ல. தற்போது நிறைய இளம் வீரர்கள் உள்ளனர். இதில் ஒருவரை, பயசின் ஜோடியாக தேர்வு செய்திருக்கலாம். இரண்டு ஜோடிக்கு வாய்ப்பு இருந்தும், ஒரே ஒரு ஜோடியை மட்டும் அனுப்புவது ஏமாற்றம் அளிக்கிறது எனத் தெரிவித்தார்.




படப்பிடிப்பு: கனகஸ்

# மாகாண மட்ட கால்பந்து நாவாந்துறை ம.வி. சம்பியன்

விளையாட்டுச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கால்பந்துத் தொடரின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் நாவாந்துறை மகாவித்தியாலய அணி சம்பியனாகியுள்ளது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்துத் தொடரின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டங்கள் கடந்த 13ஆம் திகதி வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்பிரிவின் இறுதிப் போட்டியில் நாவாந்துறை மகா வித்தியாலய அணியும், தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும் மோதின. யாழ். கல்வி வலயத்தில் கால்பந்துப் போட்டிகளில் தனித்துவமான திறமையை வெளிப்படுத்தி வரும் நாவாந்துறை மகா வித்தியாலய அணி இந்த ஆண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்டக் கால்பந்துத் தொடரில் சம்பியனாகியிருந்தது. அத்துடன் இலங்கை பாடசாலை கால்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட மாவட்ட மட்டப் போட்டியிலும் கிண்ணம் வென்று வலுவான ஆட்டத் திறனுடன் திகழ்ந்ததுடன் மாகாண மட்டப் போட்டியிலும் சம்பியன் பட்டத்தை வெல்லவேண்டும் என்ற முனைப்புடன் நாவாந்துறை மகாவித்தியாலய அணி களமிறங்கியது. அதேபோன்று வடமராட்சி வலயத்தில் வலுவான அணியாகத் திகழும் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும் மாகாண மட்டப் போட்டியில் சம்பியன் பட்டம் வெல்லும் முனைப்பில் தமது வியூகங்களை அமைத்துக் களமிறங்கின.

பலம் வாய்ந்த இரு அணிகளின் ஆட்டம் மிக வேகமான முறையில் அமைந்திருந்ததுடன் பார்பவர்களையும் பரவசப்படுத்தியது. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நாவாந்துறை மகாவித்தியாலய அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மாகாண சம்பிய னானது. இப்போட்டியை அனைத்துத் தரப்பினரும் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும் மோதின. ஆட்டத்தின் ஆரம்பம் முதலே மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தியது. இறுதி யில் 4 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. இப்போட்டி நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த உயர் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (12, 93)

## கிறிஸ்தவக் கல்லூரியில் மாவட்ட மட்ட கரப்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்தும் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 30 மற்றும் 01ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் என இரு பாலாருக்குமிடையில் நடைபெறவுள்ளது. ஆண்களுக்கான போட்டி 'ஏ', 'பி' என இரு பிரிவுகளாக இடம்பெறவுள்ளது. இதில் 'ஏ' பிரி வில் யாழ். பல்கலைக்கழகம், கலைமதி, காங்கேசன்துறை ஐக்கியம், நவஜீவன், பிரதீப், மத்தி, இந்து இளைஞர் ஆகிய அணிகளும், 'பி' பிரிவில் அரியாலை ஐக்கியம், புத்தூர் வளர்மதி, நாயன்மார்கட்டு பாரதி, கைதடி வளர்மதி, பன்னாலை கணேசன், நீர்வேலி ஐக்கியம், பருத்தித்துறை ஒற்றுமை, மட்டுவில் வளர்மதி, சங்கானை ஐக்கியம், கோப்பாய் ஐக்கியம், ஜனசக்தி, கைதடி குமரன், மட்டுவில் ஐங்கரன், அச்சுவேலி ஸ்ரார் ஆகிய அணிகளும் போட்டியிடவுள்ளன.

இதேபோன்று பெண்களுக்கான போட்டியில் காங்கேசன்துறை ஐக்கியம், சங்கானை ஐக்கியம், நீர்வேலி ஐக்கியம், கோப்பாய் ஐக்கியம், ஆவரங்கால் இந்து இளைஞர் ஆகிய அணிகள் பங்குபற்றவுள்ளன.

இவற்றில் ஆண்களுக்கான 'ஏ' பிரிவும், பெண்களுக்கான போட்டியும் எதிர்வரும் 30ஆம் திகதியும், 'பி' பிரிவுக்கான போட்டி அடுத்த மாதம் முதலாம் திகதியும் இடம்பெறவுள்ளன.

லீக் முறையில் நடைபெறும் இப்போட்டித் தொட ரில் உரிய நேரத்திற்கு அணிகளை வருகை தந்து தமது வரவை உறுதிப்படுத்திக் கொள்ளும் படியும் போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரா ஒலிம்பிக்: இலங்கையிலிருந்து இருவர் தகுதி



(கொழும்பு)

இலங்கையின் சக்கர நாற்காலி ரென்னிஸ் வீரர்களான கா-மினி திஸாநாயக்க மற்றும் உபாலி ராஜகருணா ஆகியோர் 2012 பராஒலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் இதனை உறுதிப்படுத்தி யுள்ளதாக இலங்கை ரென்னிஸ் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த இரண்டு வீரர்களும் இலங்கை இராணுவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், வைய்ல் கார்ட் முறையில் 2012 பரா ஒலிம்பிக் போட்டிகளுக்கு இவர்கள் தகுதிபெற்றுள்ளனர்.

2008 ஆம் ஆண்டு பீஜிங்கில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி உபாலி ராஜகருணா பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. பரா ஒலிம்பிக்கில் பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தமை மகிழ்ச்சி. நிச்சயம் சாதிப்போம் என உபாலி குறிப்பிட்டார்.

## மாகாண பெண்கள் கபடி வவுனியா மாவட்டம் சம்பியன்

(வவுனியா)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான மாகாண மட்ட கடிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

இப்போட்டித் தொடர் வவுனியா நகர சபை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், கிளிநொச்சி மாவட்ட அணியும் மோதின. இதில் யாழ். மாவட்ட அணி 74 -11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டித் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியும், மன்னார் மாவட்ட அணியும் மோதின. இதில் வவுனியா மாவட்ட அணி 45-25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் வவுனியா மாவட்ட அணி 42- 29 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்று மாகாண மட்ட சம்பியனானது. (93)

## இன்றைய ஆட்டங்கள்

(கைதடி)

கைதடி மேற்கு சனசமூக நிலையததின் 54ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டத் தொடரின் இன்றைய தினம் இடம்பெறவுள்ள போட்டிகளில் ஸ்ரார் அணியை எதிர்த்து உதயதாரகை அணியும், புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கியம் அணியும் மோதவுள்ளன.

மின்னொளியில் இடம்பெற்று வரும் இப் போட்டித் தொடர் நாளொன்று இரு ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றது. நேற்றைய தினமே இப்போட்டித் தொடர் ஆரம்பமானமை குறிப் பிடத்தக்கது. இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# மயானத்தை நோக்கிய நாடு

வெளிச்சக்திகளான அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக அணி, சீனா, இந்தியா ஆகியவை வெவ்வேறு கோணங்களில் பங்கேற்கும் முக்கோணப் போட்டிக்குள் இலங்கையைச் சிக்க வைத்துள்ளன. வலையிற் சிக்கவைத்து மீனைப் பிடிப்பதைப்போன்ற நிலை இது.

இந்த நிலைமைக்குள் - நெருக்கடிக்குள் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடின்றி அனைவருமே சிக்கும் நிலையே காணப்படுகிறது.

தமது தலையீடுகளுக்கும் செல்வாக்கிற்கும் நலன்களுக்கும் அவை நாட்டினுள் காணப்படுகின்ற இடைவெளிகளை - பிரிநிலைகளை - முரண்களைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றன.

அதேவேளை அரசாங்கத்தின் தவறுகளை நாட்டின் தவறாகச் சித்திரித்து அந்தத் தவறுகளைக் கண்டிப்பதாகவும் அவற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்தித் தமது தலையீட்டைச் செய்வதற்கும் இவை முயற்சிக்கின்றன.

இவ்வாறு வெளிச் சக்திகளின் போட்டிக்குள் சிக்குண்டிருக்கும் எந்த நாடும் ஒரு போதும் நிம்மதியாக இருக்க முடியாது.

வளத்தைப் பேணவும் முடியாது. வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கவும் முடியாது.

இந்த ஆதிக்கப் போட்டிக்குள் மிகப் புத்திபூர்வமாகச் செயற்பட்டுத் தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என உள்நாட்டு அரசியலாளர்களும் மக்கள் சமூகமும் சிந்திக்கலாம். அத்தகைய சிந்தனைப் போக்குகள் மெல்ல மெல்ல வளர்ந்து வருவதையும் நாம் அவதானிக்க முடிகிறது.

ஆனால், அது சிரிப்புக்கிடமானது. வல்லரசுகளின் தேவைகளை மிஞ்சி, வெற்றிகளைப் பெற வேண்டுமானால், அது பிரிவுகளையும் இடைவெளிகளையும் கொண்டுள்ள நிலைமைகளில் சாத்தியமாகாது.

பதிலாக, ஒருங்கிணைந்த நடவடிக்கைகளினாலும் பிரிக்கப்படாத உறவினாலுமே முடியக் கூடியது.

ஆனால், இன்றைய நிலைமை மிகக் கவலையளிக்கும் நிலையிலேயே உள்ளது.

மிகக் கடுமையான அழிவுகளின் மத்தியில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த அரசாங்கம் அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, அமைதியையும் நல்லிணக்கத்தையும் முன்னேற்றத்தையும் கொண்டு வருவதற்குத் தவறியுள்ளது.

அத்தகைய ஒரு நிலை எட்டப்பட்டிருக்குமானால், இன்று நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளில் பாதிக்கு மேலானவை உருவாகாமலே போயிருக்கும்.

குறிப்பாக, இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி நகர்ந்திருந்தாலே பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்திருக்கும். நாட்டிலுள்ள மக்களில் ஒரு சாராராகிய தமிழர்களைப் பயன்படுத்தி, அவர்களுடைய மனக்குறைகளைப் பயன்படுத்தி, அவர்கள் சந்திக்கின்ற அரசியல் நெருக்கடிகளைப் பயன்படுத்தி, தமது நலன்களைப் பேணும் வெளிச் சக்திகளின் முயற்சிகள் தடுக்கப்பட்டிருக்கும்.

ஆனால், இதை மறுத்துரைப்போரும் உண்டு. அவர்கள் சொல்கிறார்கள், இலங்கையின்



மீது முக்கோண வல்லரசுகள் ஆதிக்கம் செலுத்தும் காலகட்டம் இது. இதில் அவை எப்படியும் தங்கள் கரங்களை நுழைப்பதற்கு முயற்சித்தே ஆகும். இனப்பிரச்சினையைத் தீர்க்க விடாமல் வைத்திருப்பதே இந்தச் சக்திகள்தானே என்று.

இதில் ஒருவகையான உண்மைகள் இருக்கலாம். ஆனால், இன முரணைத் தீர்க்கும்போது இலங்கைச் சமூகங்களுக்கிடையிலான முரண்கள் தணிந்து விடும். அதன்மூலம் ஒரு கட்டிறுக்கமான நிலைமை பெரும்பாலும் நாட்டுக்குள் நிலவும்.

இதற்கு நாம் ஒரு உதாரணத்தை இங்கே முன்வைக்கலாம். இன்றைய அரசாங்கத்தின் மீது அளவுக்கதிகமான செறிவழுத்தங்கள் நிலவுகின்றபோதும் அது எல்லாவற்றையும் எவ்வாறு தாக்குப் பிடிக்கிறது? பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருப்பதனால்தானே! ஆனால் இந்தப் பெரும்பான்மைப் பலமானது தனியே சிங்கள மக்களை மட்டும் உள்ளடக்கியது. இதை முழுமைப்படுத்தி, அனைத்துச் சமூகங்களும் இணைந்த பெரும்பான்மைப் பலமாக ஆக்கினால், அது நாட்டை மேலும் உறுதிப்பாடுடையதாக்கியிருக்கும்.

அத்தகைய ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்குமானால், இன்று மனித உரிமை விவகாரங்கள் பற்றிய குற்றச்சாட்டுகள், இயல்பு நிலையை உருவாக்க வேண்டும் என்ற அழுத்தங்கள், ஜனநாயகம் பற்றிய பேச்சுகள், யுத்தக்குற்றங்கள், நல்லிணக்கச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கட்டளைகள், அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நெருக்கடிகள் எல்லாம் கருவிகளாகப் பயன்படுத் தப்பட முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கும்.

வருகின்ற நெருக்கடிகள் அனைவருக்கும் பொதுவானவை, இலங்கையர்கள் என்ற வகையில் அனைவரும் இணைந்தே இதை முறியடிக்க வேண்டும். ஆனால், அப்படிச் சிந்திக்கும் நிலை இல்லை என்பது வருத்தத்திற்குரியது.

இலங்கைக்கு வரும் நெருக்கடிகள் என்பது, அரசாங்கத்துக்கு வரும் நெருக்கடிகளாகவும் அதிலும் ஆட்சியாளர்களுக்கு வரும் நெருக்கடிகளாகவும் சிங்கள மக்களுக்கு வருகின்ற நெருக்கடிகளாகவும் பார்க்கின்ற போக்குத் தமிழர்களிடம் உள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள இன்றைய நெருக்கடியானது இன்றைய ஆளுந்தரப்புக்கே என்று எதிர்கட்சிகள் சிந்திக்கின்றன.

இலங்கைக்கு - நாட்டுக்கு வருகின்ற நெருக்கடிகளைப் பார்த்துத் தமிழர்கள் சந்தோசப்படுகிறார்கள். ஆகவே அவர்கள் எதிரிகளாகத்தான் இருப்பார்கள் என்று அரசாங்கமும் சிங்கள மக்களும் கருதுகிறார்கள்.


இப்படி வெவ்வேறு கோணங்களில் முரண்நிலைகள் விரிவாக்கம் பெறுகின்றன. தங்கள் நாடு நெருக்கடிகளால் சூழப்பட்டிருப்பதை விளங்கிக் கொள்ளாமல் இப்படி ஆளாளுக்குக் கோணங்கித்தனமாகச் சிந்திக்கும் மக்களை என்ன என்று சொல்வது?

ஆனால், மக்கள் இப்படித்தான் தவறாகச் சிந்திக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை இப்படி வைத்தே அரசியல்வாதிகளும் கட்சிகளும் ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் தங்களின் வாழ்வையும் வயிற்றையும் நிரப்பிக் கொள்கிறார்கள்.

போதாக்குறைக்கு மதவாதிகளும் இப்படித்தான் சிந்திக்கிறார்கள்.

முட்டாள்தனமாகச் சிந்திப்போரையும் மூடத்தனமாகச் செயற்படுவோரையும் கொண்டுள்ள நாடு கோமாளிகளைக் கொண்டுள்ள நாடாகவே இருக்கும். அல்லது துக்கத்துக்குரிய நாடாக இருக்கும். இன்றைய இலங்கை அப்படித்தான் உள்ளது.

- அரவிந்தன் கட்டுரையிலிருந்து.



# சிங்கப்பூர் பூங்கா

நேரம், காலம் பார்க்காமல் உழைப்பதில், ஜப்பானியர்களுக்கு சற்றும் சளைக்காதவர்கள், சிங்கப்பூர் மக்கள். வானுயர்ந்த கண்கவர் கட்டடங்கள், அதிசயிக்கத் தக்க, அழகு மிளிரும் பாலங்கள் என சிங்கப்பூர், உலகின் நவீன கட்டடக் கலையின் அடையாளமாக விளங்குகிறது.


சிங்கப்பூரின் அழகுக்கு, மேலும் அழகு சேர்க்கும் வகையில், தற்போது ஒரு பிரமாண்டமான பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. அங்குள்ள கடற்கரை அருகே, 101 ஹெக்டர் பரப்பளவில், இந்த அதிசய பூங்கா தயாராகி வருகிறது. இதில், இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட செடிகள், வளர்க்கப்பட்டுள்ளன. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், இந்தச் செடிகள் கொண்டு வரப்பட்டு, இங்கு பயிரிடப்பட்டுள்ளன. இவற்றில் பூத்துக் குலுங்கும், ஆயிரக்கணக்கான மலர்களை பார்த்து ரசிப்பதற்கே, கோடிக் கண்கள் வேண்டும்.

இந்த பூங்காவின் சிறப்பம்சம் என்ன தெரியுமா? சிங்கப்பூரின் அழகைப் பார்த்து ரசிப்பதற்காக, தரையிலிருந்து, 22 மீற்றர் உயரத்தில், பிரமாண்டமான தொங்கு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மாலை மயங்கும் வேளையில், மின் விளக்குகளின் ஒளியில் மிளிரும் சிங்கப்பூர் நகரின் அழகை, இந்தப் பாலத்தின் மேலிருந்து பார்த்து ரசிப்பதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இந்த பிரமாண்ட பாலம், செயற்கையாக வடிவமைக்கப்பட்டு, கொங்கிரீட் மரங்களுக்கு இடையில் அமைக்கப்பட்டுள்ளது. பூங்காவின் குறிப்பிட்ட இடைவெளிகளில், பிரமாண்டமான அளவில், செயற்கையாக, 18 மரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இயற்கையான மரம் போல் தோற்றமளிக்க வேண்டும் என்பதற்காக, இந்த செயற்கை மரத்தின் உச்சியில், இரும்பு கம்பியாலான கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த கிளைகளில் லேசர் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இரவு நேரத்தில், இந்த மரங்களை பார்த்தால், சொர்க்கலோகத்தை, பெயர்த்து வந்து, சிங்கப்பூரில் வைத்து விட்டது போல் தோன்றுகிறது. முழுக்க, முழுக்க, பசுமை பாதுகாப்புத்திட்டம், இங்கு செயல்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

பிரமாண்டமான பாலத்தில் நடந்து சென்றால், அதன் கீழே, சிங்கப்பூர் நகரத்தை மட்டுமல்லாது, ஆயிரக்கணக்கான மலர்கள், கண்கவர் கட்டடங்கள், பரந்து விரிந்த கடல், செயற்கை நீர்வீழ்ச்சி என இதுவரை கண்டிராத ஒரு சுகமான சுற்றுலா அனுபவம் கிடைக்கும். சிங்கப்பூரின் புதிய அடையாளமாக மாறியுள்ள இந்த பிரமாண்ட அதிசய பூங்கா, விரைவில் பொது மக்கள் பார்வைக்காக திறக்கப்பட உள்ளது.

# நூறு பில்லியன் மகாராஜா!



- நரேன் -

சூக் (zuck) என்று செல்லப்பெயர் கொண்ட மார்க் சுக்கர்பேர்கின் சமூக வலைத்தளம் ஃபேஸ்புக்தான், அமெரிக்காவின் மூன்றாவது பெரிய பங்கு வெளியீட்டு நிறுவனம். வெறும் எட்டே வருடங்களில் ஒரு வலைத்தளச் சேவை 100 பில்லியன் டொலர் மதிப்பு பெறுதல் என்பது கனவில்கூட நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று. ஆனால் ஃபேஸ்புக் சாதித்திருக்கிறது. ஃபேஸ்புக்கின் கதையை வைத்து ஹொலிவுட்டில் திரைப்படம்கூட வந்துவிட்டது.

ஹார்வர்ட் பல்கலைக்கழக விடுதியில் மார்க் தொடங்கிய கல்லூரி மாணவர்களுக்கான தரவரிசைத் தளம் ஒன்றுதான் பின்னாளில் வளர்ந்து உலகின் நம்பர்-1 சமூக வலைத்தளமாக மாறியிருக்கிறது.

2003இல் இரட்டையர்கள் கமரான் விங்கில் வாஸ், டைலர் விங்கில்வாஸ் ஆகியோர் திவ்யா நரேந்திரா என்பவருடன் சேர்ந்து ஹார்வர்ட் பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஒரு சமூக வலைத்தளத்தை உருவாக்குவது பற்றி யோசித்தனர். அதற்கு அவர்கள் வைத்த பெயர் ஹார்வர்ட்கனெக்ஷன்ஸ்.கொம் என்பது. இந்தத் தளத்தில் ஹார்வர்ட் மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தளம் நன்றாக இயங்கினால், இதை மற்ற க
ரிகளுக்கும் விரிவாக்குவதாக முடிவெடுத்த
இதைச் செயற்படுத்த அவர்களுக்கு ஒரு
பொருள் ப்ரோகிராமர் தேவைப்பட்டது.
முதலில் வேலைக்கு அமர்த்தியது விக்டர்
என்பவரை. ஆனால் அவருக்கு வேறு பணி
இருந்ததால், அவர்
சுக்கர்பேர்க் என்ப
கை காட்டினார்.

19 வயது மார்க்
பேர்க் முதலில் எ
பேஸ்மெஷ் (Face
என்ற ப்ரோகிராம்.
ஹார்வர்ட் இணை
திலிருந்து இரண்டு
மாணவிகளின் பட
போட்டு, யார் அதி
அழகாக இருக்கிற
(Hot or Not) என்று பயனாளர்களிடம் கே
கேட்பதுதான் பேஸ்மெஷ். இது சடுதியாக
பிரபலம் ஆனது.

முகத்தை வைத்து மனிதர்களை வகைப்
வது ஹார்வர்ட் ஒழுங்குமுறைக்கு ஒத்துவர
மார்க் சுக்கர்பேர்கை ஒழுங்கு கமிட்டி நிற்க
கேள்வி கேட்டு, கடுமையான எச்சரிக்கை
அவரை அனுப்பியது. ஹார்வர்ட் கனெக்ஷ
மாணவர்கள் மூவரும் மார்க்கைச் சந்தித்து
திட்டத்தை விவரித்தனர்.

ஆரம்பத்தில் ஆர்வம் காட்டிய மார்க்,
வாரங்கள் கழித்து கொஞ்சம் கொஞ்சமாக
இத்திட்டத்திலிருந்து விலக ஆரம்பித்தார்.
ஆனால் பின்னர் வேறு சில நண்பர்களுடன்
சேர்ந்து கிட்டத்தட்ட அதே கருத்தை அடி
யாகக் கொண்டு, 2004இல் TheFaceBook.
com என்ற தளத்தை ஆரம்பித்தார். பின்னா
ஹார்வர்ட் கனெக்ஷன் ஐடியாவை முன்
மூவரணி மார்க் மீது வழக்குத் தொடர்ந்த
நீதிபதி வழக்கைத் தள்ளுபடி செய்தார். இ

# விருப்பமின்றி நடிக்க வந்தவர்



என் மகள் அம்மு திரைப் படங்களில் நடிக்க வேண்டும் என்று, நான் முதலில் விரும்பவில்லை.

சிறு குழந்தையாக இருக் கும்போதே, அம்மு எதையும் சீக்கிரத்தில் புரிந்து கொள்ளும் திறமையை பெற்றிருந்தாள். படிப்பில் அம்மு கெட்டிக்காரி. வகுப்பில் அவள் தான் முதல் மாணவி. படித்துப் பட்டம் பெற வேண்டும் என்ற ஆர்வம் அம்முவுக்கு இருந்தது. அவள் விரும்பியவாறு நிறைய படிக் கட்டும் என்று தான் நானும் எண்ணினேன்.

சிறுவயதில், ரேடியோவில் ஒலிபரப்பாகும் இசையைக் கேட்டால், அதற்கேற்ப நடன மாடுவாள். நடனத்தின் மீது, அவளுக்கு உள்ள ஆர்வத்தை ஏன் வீணடிக்க வேண்டும் என்று நினைத்த நான், நடன ஆசிரியை, கே.ஜே.சரசாவிடம் அம்முவுக்கு நடனம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தேன்.

சென்னை சர்ச் பார்க் கான்வென்ட்டில் அம்மு படிக்கும்போதே, அவளுக்கு நாடகத்தில் நடிக்க அழைப்பு வந்தது. அதுவும் ஆங்கில நாடகம். ஆங்கில மொழியை நன்கு அறிந்து, சரளமாகப் பேசும் அம்முவுக்கு, அந்த நாடகத்தில் ஆங்கிலம் பேசத் தெரியாத பிரெஞ்சுப் பெண்ணின் வேடம் கிடைத்தது.

இந்த நாடகத்தில், வில்லனாக நடித்தவர், சோ. அம்முவின் நடிப்பை அனைவரும் பாராட்டினர்.

இதே சமயத்தில், சங்கர் கிரி (ஜனாதிபதி வி.வி.கிரி அவர்களின் மகன்) ஆங்கிலத்தில் டொக்குமென்ட்ரி படம் ஒன்றைத் தயாரிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அதில் கதாநாயகியாக நடிக்க, ஆங்கிலம் நன்றாகப் பேசத் தெரிந்த, ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டிருந்தார்.

அம்முவின் நடிப்பைப் பாராட்டிய, ஒய்.ஜி.பார்த்தசாரதி, சங்கர் கிரியிடம், அம்முவை சிபாரிசு செய்திருக்கிறார். சோவும், சங்கர் கிரியிடம் அம்முவை புகழ்ந்து கூறி, "உங்கள் படத்தில் அம்மு



சிறப்பாக நடிப்பார்..." என்று சொல்லி இருக்கிறார்.

அம்முவை தன் டொக்கு மென்ட்ரி படத்தில் நடிக்க, என்னிடம் அனுமதி கேட்டார் சங்கர் கிரி. "அம்மு சினிமாவில் நடிப்பதை நான் வரு... 'வில்லை..." என்று அவரிடம் கூறினேன்.

"இது ஒரு ஆவணப்படம், உங்கள் மகளின் படிப்புக்கு இடையூறு ஏற்படாத வகையில், சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களில் படப்பிடிப்பை நடத்திக் கொள்கிறேன். உங்கள் மகளுக்கும், இது ஒரு நல்ல பொழுது போக்காக இருக்கும்..." என்றார்.



சனி, ஞாயிறில் மட்டும் படப்பிடிப்பு. அதுவும் ஆங்கிலப் படம். இரண்டையும் எண்ணிப் பார்த்து, நான் சரி என்று சம்மதித்தேன்.

இந்தப் படம் தான், "எபி சில்!" படப்பிடிப்பு துவங்கியது.

அப்போது நான், "நன்ன கர்த்தவ்யா" என்ற கன்னடப் படத்தில் நடித்து வந்தேன். அதில் எனக்கு மாமியார் வேடம். படத்தின் கதாநாயகி, ஒரு பால்ய விதவை, அந்த வேடத்தில் நடிக்க களையான முகம் கொண்ட, ஒரு இளம் நடிகையைத் தயாரிப்பாளர்கள் தேடினர். உடனே கிடைக்காத தால், அந்தப் பாத்திரம் சம்பந் தப்பட்ட காட்சிகளை விட்டு வைத்துவிட்டு, படத்தில் வரும் மற்ற காட்சிகளை படம் எடுத்துக் கொண்டிருந்தனர்.

ஒரு நாள் என்னிடம் கால்ஷீட் வாங்க தயாரிப்பாளர்கள் வந்த போது, தற்செயலாக அம்முவை பார்த்து விட்டனர். "நாங்கள் தேடிய முகப்பொலிவு உள்ள கதாநாயகி இதோ இங்கேயே இருக்கிறாரே... உங்கள் மகளையே, நாங்கள் கதாநாயகியாகப் போடப் போகிறோம்..." என்றனர். ஆனால், நான் அதற்கு சம்மதம் அளிக்கவில்லை.

ஆறு மாதங்கள் சென்றிருக்கும். மீண்டும் அவர்கள் என்னிடம் வந்தனர். "இன்னும் எங்கள் படத்துக்கு கதாநாயகி அமையவில்லை. உங்கள் பெண்ணையே தயவு செய்து நடிக்க அனுமதியுங்கள்..." என்று கேட்டுக் கொண்டனர். நீண்ட நேரம் நான் யோசித்து, ஒரு முடிவுக்கு வந்தேன்.

"அம்முவின் படிப்பு கெடக்கூடாது. அவளுக்குக் கோடை விடுமுறை வரும்வரை காத்திருப்பீர்களா?" என்று ஒப்புக்கு கேட்டேன். அவர்களும் உடனே, "ஆகட்டும்" என்று கூறினர்.

மேலும், மூன்று மாதங்கள் ஓடி விட்டன. அம்முவுக்குக் கோடை விடுமுறையும் வந்தது. அதே தயாரிப்பாளர்கள் மீண்டும் வந்தனர். "உங்கள் மகளை, இந்த முறை மட்டும் நடிக்கச் செய்யுங்கள் தொடர்ந்து நடிக்கச் செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி..." என்றனர். என் நிலைமை தர்ம சங்கடமாகி விட்டது. "அம்முவை நடிக்க அனுமதிக்க வேண்டியது தானா?" என்ற எண்ணம் எழுந்தது. அம்முவிடமும் கேட்டேன்.

"நான் திறமையாக நடிப்பேன் என்று உங்களுக்கு நம்பிக்கை இருந்தால், எனக்கு ஆட்சேபனை இல்லை..." என்றாள். விடுமுறை நாட்கள் தானே என்று, அம்முவை நடிக்க அனுப்பி வைத்தேன்.

நான் நடித்திருந்த, "கர்ணன்" தமிழ்ப்படத்தின், 100 ஆவது நாள் விழாவுக்குப் போயிருந்தேன். என்னுடன் அம்முவும் வந்திருந்தாள். அம்முவை கண்ட தயாரிப்பாளர், டைரக்டர் பி.ஆர்.பந்துலு, அம்முவை அவரது படத்தில் நடிக்க அனுமதிக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டார். நான் வழக்கம் போல மறுத்தேன். கோடை விடுமுறையிலேயே படப் பிடிப்பை முடித்துக் கொள்வதாகக் கூறினார். கல்யாண குமார் நடித்த கன்னடப்படம் அது. அதில் நடிக்க அம்மு ஒப்பந்தமானாள்.

இந்நிலையில், அம்மு பள்ளிப் படிப்பில் பாசாகி, கல்லூரியில் சேர்ந்து வகுப்புக்கு இரண்டொரு நாள் சென்று வந்தாள். அப்போது டைரக்டர் ஸ்ரீதர், அம்முவுக்கு தன் படத்தில் கதாநாயகி யாக நடிக்க அழைப்பு விடுத்தார். அம்முவை நடிக்கச் செய்வதா அல்லது தொடர்ந்து படிக்கச் செய்வதா? வீட்டில் என் தந்தையோ, "குழந்தை தொடர்ந்து படிக்கட்டும்..." என்று, தன் எதிர்ப்பைத் தெரிவித்தார். அம்முவுக்கு



படிப்பில் தான் மிகுந்த விருப்பம். அப்படியிருந்தும், அம்மு நடிப்புத் துறைக்கு வந்து விட்டாள் என்றால், அதை விதியின் வலிமை என்றுதானே கூற முடியும்?

**- அம்முவாகிய தன் மகள் ஜெயலலிதா நடிப்புக்கு வந்தது குறித்து, அவரது தாயார் சந்தியா**

**பழைய சினிமா இதழ் ஒன்றில் அளித்திருந்த பேட்டி.**

---

இதை மற்ற கல்லூ
முடிவெடுத்தனர்.
ளுக்கு ஒரு மென்
வப்பட்டது. அவர்கள்
யது விக்டர் காவ்
கு வேறு பணிகள்
ந்ததால், அவர் மார்க்
ர்பேர்க் என்பவரைக்
காட்டினார்.
9 வயது மார்க் சுக்கர்
க் முதலில் எழுதியது
மெஷ் (FaceMesh)
ப்ரோகிராம்.
வர்ட் இணையத்தளத்
ந்து இரண்டு
ளவிகளின் படத்தைப்
ட்டு, யார் அதிக
காக இருக்கிறார்
ர்களிடம் கேள்வி
இது சடுதியாக மிகப்

களை வகைப்படுத்து
றக்கு ஒத்துவராதது.
கமிட்டி நிற்க வைத்து
எச்ச[illegible]க்கையோடு
வர்ட்[illegible]னெக்ஷன்
கைச் சந்தித்து தங்கள்

ட்டிய மார்க், சில
கொஞ்சமாக
ஆரம்பித்தார்.
ண்பர்களுடன்
கருத்தை அடிப்படை
heFaceBook.
ந்தார். பின்னாளில்
ாவை முன்வைத்த
தொடர்ந்தது. ஒரு
செய்தார். இருந்தும்

மார்க் இவர்களுக்குப் பணம் கொடுத்துச் சமரசம் செய்துகொண்டார்.

2004இல் ஃபேஸ்புக் ஆரம்பித்தபோது இணையத்தில் இருந்த மொத்த நபர்களின் எண்ணிக்கை 81 கோடி. இன்றைக்கு ஃபேஸ்புக்கில் மட்டுமே 90 கோடி பயனாளர்கள் இருக்கிறார்கள். எட்டு வருடத்தில் இணையமும், இணையம் வழியாக ஃபேஸ்புக்கும் மனித வரலாற்றையே தலைகீழாக புரட்டிப் போட்டிருக்கின்றன. இன்றைக்கு, குழந்தைக்குப் பெயர் வைத்தவுடனே யே ஒரு ஃபேஸ்புக் பக்கத்தைத் திறக்கக்கூடிய அளவுக்கு அது மக்களை ஈர்த்திருக்கிறது.

உண்மையில் தொழில்நுட்ப வரலாற்றின் படி ஃபேஸ்புக் ஒன்றும் முதல் சமூக வலைத்தளம் இல்லை. ஃபேஸ்புக் தொடங்கியபோது மைஸ்பேஸ் (MySpace), ப்ரெண்ட்ஸ்டர் (Friendster) ஆகிய இரண்டும்தான் பெரியதாக இருந்தன. மைஸ்பேஸை ரூபர்ட் மர்டாக் காசு கொடுத்து வாங்கி நாசமாக்கினார். ப்ரெண்ட்ஸ்டரால் ஃபேஸ்புக்கின் அசுர வளர்ச்சியை எதிர்கொள்ள




முடியவில்லை. கூகிளின் பல்வேறு சமூக வலைத்தள முயற்சிகளான ஆர்க்குட், கூகிள் பஸ், கூகிள் ப்ளஸ் எதுவுமே பலன் அளிக்கவில்லை.

யாஹூவின் முயற்சிகளோ படுமோசம். மைக்ரோசொப்டுக்கோ இதுகுறித்த பார்வை ஏதும் இருப்பதாகக் கூடத் தெரியவில்லை.

ஃபேஸ்புக்கின் புள்ளிவிவரங்கள் அசாதாரணமானவை.

- தினமும் 52 கோடி பேர் ஃபேஸ்புக்கைப் பயன்படுத்துகிறார்கள்
- 100 கோடி பின்னூட்டங்கள் தினமும் போடப்படுகின்றன
- 30 கோடி புகைப்படங்கள் சேர்க்கப்படுகின்றன.
- 60 வீத ஃபேஸ்புக்கர்கள் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளில் இருக்கிறார்கள்.

இந்த அளவுக்குப் பயனாளர்களைக் கட்டிப்போட்ட நிறுவனம் இதற்குமுன் கூகிள் மட்டுமே. ஆனால், ஃபேஸ்புக்கின் வீச்சு கூகிளைவிட விரிவானது. உலகெங்கிலும் இருக்கக்கூடிய பதினெட்டிலிருந்து முப்பது வயது இளைஞர் சமூகத்தின் திண்ணையாக ஃபேஸ்புக் திகழ்கிறது.

ஃபேஸ்புக் பங்குச் சந்தையில் விடப்பட்ட போது, முதல் நாளே ஃபேஸ்புக்கின் சந்தை மதிப்பு 104 பில்லியன் டொலர் (கிட்டத்திட்ட 5,80,000 கோடி ரூபா). ஃபேஸ்புக் பணியாளர்கள் சுமார் 1,000 பேருக்கு மேல் மில்லியனர் ஆகினர். ஒரு 28 வயது இளைஞனின் கனவு ஒட்டுமொத்த உலகத்தைப் புரட்டிப் போட்டது.

ஆனால், இப்போது தலைவலிகளும் உருவாகியிருக்கிறது. கடந்த மாதம் ஜெனரல் மோட்டர்ஸின் விளம்பர எஜென்சி, ஃபேஸ்புக்கில் விளம்பரம் செய்வதை நிறுத்திக்கொள்ளப் போவதாகச் சொன்னது. பிற நிறுவனங்களும் இப்படியே முடிவு செய்தால் என்ன ஆவது என்று பங்குச்சந்தையின் முதலீட்டாளர்கள் பயப்படலாம். ஏனெனில் ஃபேஸ்புக்கின் வானளாவிய மதிப்பீட்டின் பெரும்பகுதி, அதன் விளம்பர



**தனது நீண்டநாள் தோழியான பிரிசில்லா சான் (வயது - 27) என்பவரைக் கடந்த மாதம் மார்க் திருமணம் செய்துகொண்டார். வீட்டின் பின்புறத் தோட்டத்தில் எளிமையான முறையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நூறுக்கும் குறைவானவர்களே கலந்துகொண்டனர். மறுநாள் தனது ஃபேஸ்புக் பக்கத்தில் 'married' என்று சிம்பிளாக அறிவித்தார் மார்க். பிரிசில்லா அவருடைய ஃபேஸ்புக் பக்கத்தில் தன்னை இப்படி அறிமுகம் செய்துகொள்கிறார். 'சமையலையும் எளிமையான விஷயங்களையும் விரும்பும் சாமானியப் பெண்!'**

வருமானத்தை நம்பியே இருக்கிறது.

கலிபோர்னியா நீதிமன்றத்தில் 15 பில்லியன் டொலர் நஷ்ட ஈடு கேட்டு ஃபேஸ்புக் மீது சிலர் வழக்கு தொடர்ந்துள்ளனர். அந்தரங்கத்தை மீறுதல் என்பது தொடர்பாக தொடரப்பட்ட 21 வழக்குகளைத் தொகுத்து ஒரே வழக்காக இது போடப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் பயனாளர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வந்தால் ஃபேஸ்புக் 15 பில்லியன் டொலர் தண்டம் அழவேண்டியிருக்கும். மற்றொரு பக்கம், பயனாளர் களின் அந்தரங்கத் தகவல்களைப் பாதுகாக்க அதிக முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இதன் மூலம், ஃபேஸ்புக்கின் "பணமாக்கல்" முயற்சிகள் முடங்கிப்போகும்.


இந்தத் தலைவலிகளை எப்படி ஃபேஸ்புக் கையாளப் போகிறது என்பதை வைத்துத்தான் ஃபேஸ்புக் இன்னொரு கூகிள், அப்பிள் அல்லது மைக்ரோசொப்ட் ஆகுமா அல்லது நெட்ஸ்கேப், யாஹூ போல் வீழுமா என்பது தெரியவரும். இப்போதைக்கு, மார்க் சுக்கர்பேர்கின் அடுத்த ஆட்டம் ஆரம்பம்.




AJ.Nimalrajan


இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனங்கள் பல்வேறு கட்டணங்களுடனும், விதம் விதமாய் Condition-களுடனும் நமக்கு இணைப்பு தருகின்றன. மற்ற எதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றாலும், நம்மிடம் வாங்கும் கட்டணத்திற்கேற்ற வேகத்தில் இணைப்பு கிடைக்கிறதா என்று இன்டர்நெட் இணைப்பின் வேகத்தை நாம் கணக்கிட்டுப் பார்த்து அறிய வேண்டும். இதனை எந்த வழியில் அறியலாம் என்று பார்க்கலாம்.

# உங்கள் இணையத்தின் வேகம்!!!




உங்கள் இன்டர்நெட் இணைப்பின் வேகத்தை அறிய www.speedtest.net என்ற தளத்திற்குச் செல்லுங்கள். அங்கு வேகத்தைச் சோதனை செய்வதற்கான தொடர்பில் கிளிக் செய்தால், உடனே உங்கள் BroadBand இணைப்பிற்கான Router-ருக்கும் கம்ப்யூட்டருக்குமான வேகத்தையும், இன்டர்நெட் டவுண்லோட் ஸ்பீடையும் அது அளந்துகாட்டும். கீழாக உங்களுக்கு இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனத்தின் பெயருடன், இணைப்பின் தன்மையை நட்சத்திரக் குறியிட்டுக் காட்டும். அதிலேயே வரைபடம் ஒன்று காட்டப்பட்டு அதில் இணைய இணைப்பினை நீங்கள் பெறும் நகரம் சுட்டிக் காட்டப்படும்.

தளத்திற்கு சென்றவுடன் Begin Test என்பதை Click செய்யவும்.




உங்கள் இணைய வேகம் அடங்கிய தகவல்கள் இப்படி கிடைக்கும்




அடுத்ததாக, நீங்கள் இன்டர்நெட் இணைப்பு பெற்று சில ஆண்டுகள் கழிந்திருந்தால், உங்களிடம் முதன் முதலில் கொடுத்த மோடம் தான் இருக்கும். இணைப்பு தரும் நிறுவனத்திடம், தற்போது அதிக வேக இணைப்பு மோடம் இருந்தால், ஒன்று உங்கள் இணைப்பிற்கென கேட்டுப் பெறவும். இன்டர்நெட் சேவை தரும் நிறுவனங்கள் அடிக்கடி தங்களின் அடிப்படை இயக்க சாதனங்களை புதுப்பித்துக் கொள்கின்றன. ஆனால் வாடிக்கையாளர்களுக்கு அது போல புதுப்பித்துத் தருவதில்லை அது குறித்த தகவல்களைக் கூடத் தருவதில்லை.

# பாதுகாப்பான தேடல்களை மேற்கொள்ள Firefox




இணையப் பக்கங்களை எமது கண்முன்னே காண்பிப்பதில் பல உலாவிகள்(Browsers) முக்கிய பங்கு வகிக்கின்றன.

எனினும் அவற்றுள் சிலவே பாதுகாப்பானதும், விரைவானதுமான சேவைகளை வழங்கக் கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் கூகுளின் குரோம் உலாவிக்கு அடுத்த படியாக பயனர்களின் வரவேற்பைப் பெற்ற உலாவி Firefox ஆகும். தற்போது Firefox 13 எனும் புதிய beta பதிப்பு வெளியாகியுள்ளது.

இப்பதிப்பானது முந்தைய பதிப்புக்களை விடவும் வேகம், பாதுகாப்பு, சிறந்த உலாவல் போன்றவற்றை வழங்கக்கூடியவாறு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் அதிகமாக பயணம் செய்யும் இணையப்பக்கங்களை தெரிவுபடுத்தும் வசதியுடன் bookmarks> browsing history> Firefox settings போன்றவற்றினை விரைவாக தெரிவு செய்யும் வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.




# ஸ்கைப்பினூடாக நாடித்துடிப்பை பரிசோதிக்கலாம்

மனிதனில் ஏற்படும் பல்வேறு நோய் நிலைகளின் போது, உடல் நிலையை அறிந்து கொள்வதற்காக நாடித்துடிப்பு வீதம் அறியப்படுவது வழக்கமாகும்.

இச்செயற்பாட்டினை வைத்தியர்கள் நோயாளியின் அருகிலிருந்து நேரடியாகவே ஸ்ரெதஸ்கோப்பினைப் பயன்படுத்தி மேற்கொள்வார்கள்.

ஆனால் தற்போது தொலைவில் உள்ள நோயாளி ஒருவரின் நாடித் துடிப்பு பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான புதிய தொழில்நுட்பம் அறிமுகமாகியுள்ளது.

Eulerian Video Magnification எனும் இத்தொழில்நுட்பத்தின் மூலம் நோயாளி ஒருவரின் நாடித் துடிப்பு வீதத்தினை ஸ்கைப் போன்ற வீடியோ மென்பொருட்கள் மூலம் அறிய முடியும்.

MIT ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த தொழில்நுட்பம் மணிக்கட்டினை வீடியோப் பதிவு செய்து ஸ்கைப்பினூடாக வைத்தியருக்கு தெரிவிப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

# ஒலிம்பிக் 2012 போட்டிகளை யூடியுபில் நேரடியாக




மிகப்பெரிய விளையாட்டுத் தொடரான ஒலிம்பிக் 2012 போட்டிகள் லண்டனில் தொடங்க உள்ளது. உலகம் முழுவதும் ரசிகர்களை கொண்ட ஒலிம்பிக் போட்டிகள் ஜூலை 27 இருந்து ஆகஸ்ட் 12 ஆம் திகதி வரை நடக்க இருக்கிறது. ஒரு சில நாடுகளே நேரடி ஒளிப்பரப்புக்கு அனுமதி வாங்கி உள்ளதால் பெரும் பாலான நாடுகளில் ஒலிம்பிக் போட்டிகளை நேரடியாக காண முடியாது. இதனை கருத்தில் கொண்டு சர்வேதேச ஒலிம்பிக் அமைப்பு (IOC) இந்தியா உட்பட 64 நாடுகளுக்கு யூடியுப் மூலம நேரடியாக பார்க்கும் வசதியை வழங்க இருக்கிறது.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், புருனே, பூட்டான், கம்போடியா, கிழக்கு திமோர், இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், லாவோஸ், மலேஷியா, மாலதீவு, மொரிஷியஸ், மங்கோலியா, மியன்மார், நேபால், பாகிஸ்தான், பப்புவா நியூகினி, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து, வியட்நாம் மற்றும் ஆபிரிக்காவின் சில நாடுகளில் ஒலிம்பிக் 2012 போட்டிகளை நேரடியாக காணலாம்.


இதற்காக யூடியுபில் The Olympics என்ற புதிய சனல் திறந்து இருக்கிறார்கள். இந்த சனலில் போட்டிகளின் நேரலை மட்டுமின்றி நடந்து முடிந்த போட்டிகளையும் பார்க்கலாம். இப்பொழுது இந்த சனலில் கடந்த ஒலிம்பிக் போட்டிகளின் வீடியோக்கள் நிறைந்து உள்ளன. ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கியவுடன் லைவ் லிங்க் வீடியோ தெரியும். லிங்க் -www.youtube.com/olympic

# கணினி எப்போதும் புதிதாகவே இயங்க

**பொ**துவாக கணிப்பொறி பயன்படுத்துவோர் அனைவருக்கும் நேரும் அனுபவம் வாங்கிய புதிதில் அல்லது FORMAT செய்த புதிதில் மிக வேகமாக இயங்கும். ஆனால் நாளடைவில் வயோதிகரைப் போல் மெதுவாக இயங்கி நம்மை சோதிக்கும்.

சிலரது கணினி பூட் ஆவதற்குள் காலை சிற்றுண்டியை முடித்துவிடலாம்.சிலரது கணினி SHUT DOWN ஆவதற்கு மணிக்கணக்கில் நேரம் எடுத்துக கொள்ளும். இடையில் கணினியை RESTART செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் அதற்குள் தூக்கம் வந்துவிடும்.

இதுபோல இல்லாமல் நாம் கணினியை வாங்கியபொழுது என்ன வேகத்தில் இயங்கியதோ அதே வேகத்தில் தொடர்ந்து இயங்க ஒரு மென்பொருள் உள்ளது.




WIN ASO REGISTRY OPTIMIZER என்னும் மென்பொருளில் உங்கள் கணினியை வேகமாகவும் பிழையின்றியும் செயல்பட வைக்க பல்வேறு கருவிகள் உள்ளன. மிகவும் மெதுவாக இயங்கும் ஒரு பழைய கணினியில் இதை நிறுவினால் நிறைய வித்தியாசத்தை உணரலாம்.

# பாதுகாப்பான கடவுச்சொல் எப்படி அமைக்கலாம்

**நமது** கடவுச்சொல் திருட்டுப் போவது நமது கையில் தான் இருக்கிறது. எனது கடவுச் சொல்லைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம் என்று உங்களிடம் சொன்னால் முதலில் என்ன செய்வீர்கள்?

எனது பெயர், என் அப்பா பெயர், என் ஊர், என் வயது அல்லது 123456 , abcdef இந்த மாதிரி தானே முயற்சி செய்வீர்கள்? இதுபோன்ற பெயர்களைக் கொண்டு கடவுச்சொல் உருவாக்குவதை நாம் முற்று முழுதாக தவிர்த்துக்கொள்ள வேண்டும் .

இதுமாதிரி அர்த்தம் தரும் வேறு எந்த பெயரையும் பயன்படுத்துவது பாதுகாப்பானதல்ல. இதற்கென சில திருட்டு மென்பொருட்கள் உள்ளன. அதில் இதுபோன்ற கடவுச்சொல் சேமித்து வைக்கும் கோப்பைக் கொடுத்தால் போதும் உடனே உங்கள் கடவுச்சொல்லை கண்டு பிடித்துவிடும்.

அடுத்து நீங்கள் கடவுச்சொல்லை தட்டச்சு செய்யும் போது யாரும் பின்னால் இருந்து பார்க்கின்றனரா? என உறுதி செய்துகொள்ளுங்கள். பக்கத்தில் யாரும் இருந்தால் கடவுச் சொல் இடுவதை நிறுத்துங்கள். பல இடங்களில் 6 இலக்கமே போதும் எனச் சொல்வார்கள். ஆனால் நீங்கள் நீளமான கடவுச்சொல்லை அமைத்துக் கொள்ளுங்கள். கடவுச்சொல் இடும் கட்டம் தாண்டியும் நீளமாக கடவுச்சொல்லை அமைத்துக் கொள்ளலாம்.

ஸ்பைவேர், மால்வேர் போன்ற வைரஸ்கள் நமது கணினியில் இருந்து தகவல்களை சிலருக்கு அனுப்பிக் கொண்டிருக்கலாம். இச் சந்தர்ப்பத்தில் நமது கடவுச்சொல்லும் போக வாய்ப்புண்டு. எனவே நீங்கள் கணினித்திரையின் கீழ்ப் பக்கம் வலது சொடுக்கி Task Manager திறந்து பாருங்கள் உங்களுக்குத் தெரியாத ஏதேனும் பின்புலத்தில் ஓடிக் கொண்டிருக்கிறதா? என்று. இம் மாதிரி மென்பொருட்கள் நீங்கள் தட்டச்சு செய்பவனவற்றை உடனுக்குடன் தனது முதலாளிக்கு அனுப்பும் வல்லமை வாய்ந்தவை. மற்றவர்களின் கணினியில் புகுந்து திருடுவது சேதம் விளைவிப்பது என்பது ஒரு சிலரால் மட்டும்தான் முடியும். ஏதோ நானும் செய்தேன் என்று சும்மாவேனும் சிலர் பொய் சொல்லக் கூடும். அதற்கு Hack மற்றும் Crack போன்ற துறைகளில் நல்ல தேர்ச்சி வேண்டும். எனவே மற்றவர் உங்கள் கணினியில் நுழையாமல் தடுக்க நல்ல வைரஸ் பாதுகாப்பு மென்பொருளை நிறுவிக்கொள்ள வேண்டும்.

முடிந்தவரை ஜிமெயில், யாஹூ மற்றும் ஹொட் மெயில் போன்ற தளங்களில் தானாக உள்ளே நுழைவதை (auto login) தவிருங்கள். அதேபோல ஒவ்வொரு முறையும் மின்னஞ்சல் அல்லது கடவுச சொல் இட்ட தளங்களில் இருந்து வெளியேறும் போது லொக்அவுட் செய்து வெளியேறுங்கள்.

அடுத்து முக்கியமாக நாம் கடவுச்சொல் தேர்வு செய்யும்போது எண்கள் மற்றும் எழுத்துகளுக்கு இடையிடையே சிம்போல் (symbol) :- ! . > * - + `~ @ # $ % ^ & ( ) _ = : ; / போன்றவைகளையும் உள்ளடக்கி கடினமான கடவுச் சொல்லாக தேர்வு செய்வது மிக மிக பாதுகாப்பானது.

# சீரற்ற பேருந்து சேவை; பயணிகள் சிரமம் தொடர்கிறது

(சிகரம்)

யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து கேரதீவு வீதியினூடாக சாவகச்சேரி வரை பயணம் செய்யும் 809 இலக்கப் பேருந்துச் சேவை சீரற்ற முறையில் உள்ளதால் இந்தப் பேருந்தில் பயணம் செய்யும் பயணிகள் மிகுந்த சிரமத்தினை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

ஒரு நாளைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கோயிலாக்கண்டி வரையில் மூன்று முறை சேவையிலும், யாழிலிருந்து சாவகச்சேரி வரையில் இரண்டு முறை சேவையிலும் ஈடுபட்டு வந்த இந்தப் பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர்கள் யூன் மாதம் 1ஆம் திகதியுடன் வேறு இடங்களிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அத்துடன் பேருந்து பிரயாணம் செய்வதிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. முன்னர் மாலை 5.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் இந்தப் பேருந்து சாவகச்சேரியில் தங்கி நின்று மறுநாட்காலை 7.00மணிக்கு தனங்கிளப்பு, மறவன்புலோ, கைதடி,நாவற்குழி ஊடாகக் கோயிலாக்கண்டிக்குச் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்வது வழமை.

எனினும், யூன் மாதம் 1ஆம் திகதியின் பின்னர் காலை 7.00 மணிக்கு கோண்டாவிலிலிருந்து புறப்பட்டு தனங்கிளப்பு வரையிலும் சென்று அதன் பின்னரே மறவன்புலோ, கைதடி,நாவற்குழி ஊடாகக் கோயிலாக்கண்டி செல்கின்றது. அத்துடன், மிக நீண்ட காலமாக கடமையாற்றிய பேருந்தின் சாரதி மற்றும் நடத்துனர்கள் மாற்றப்பட்டுள்ளதால் புதிய சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் சேவையில் ஈடுபடும் பொழுது அவர்கள் கோவிலாக்கண்டித்துறை வரையிலுமே பயணத்தில் ஈடுபடுகின்றனர்.

எனவே, நேர மாற்றம் ஏற்பட்டுள்ளதாலும், சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் மாற்றத்தினாலும் இந்தப் பேருந்தில் பயணம் செய்யும் பாடசாலை மாணவர்கள் , வேலைக்குச் செல்பவர்கள் எனப் பலரும் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன், புதிய சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் சேவையில் இருக்கும் போது கடைசி நேரப் பேருந்தில் (மாலை 6.30ற்குப் பின்னர்)பயணம் செய்யும் மறவன்புலோ, தனங்கிளப்புப் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பிரயாணிகளையும் இடைநடுவில் இறக்கி விட்டுச் செல்கின்றனர்.

எனவே, இந்த நிலையினைக் கவனத்திற் கொண்டு உரிய தீர்வொன்றினை அதிகாரிகள் பெற்றுத் தர வேண்டும் என 809 வழி இலக்கப் பேருந்தில் பயணம் செய்யும் மறவன்புலோ மற்றும் தனங்கிளப்புப் பகுதி பாடசாலை மாணவர்கள மற்றும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# சுன்னாகத்தில் ஆங்கில வகுப்பு

(கிரு-சிகரம்)


சுன்னாகம் கலைவாணி சனசமூக நிலையத்தில் மாலை நேர ஆங்கில வகுப்புக்கள் கடந்த வாரம் முதல் ஆரம்பமாகியுள்ளன.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியரான ஜெகநாதன் இந்த இரவு நேர ஆங்கில வகுப்புக்களை நடத்திவருகின்றார்.

நடைபெற்று வரும் இந்த மாலை நேர ஆங்கில வகுப்பில் பாடசாலை மாணவர்கள் முதல் பாடசாலைக் கல்வியை முடித்த மற்றும் விலகிய மாணவர்கள் என ஆங்கிலக் கல்வியை விரும்பும் அனைவருமே கற்று வருகின்றனர்.

கலைவாணி சனசமூகத்தின் தலைவியான சிவாஜினி சுரேஸ்குமார் கூறுகையில்,இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சி, ஆளுமை, தலைமைத்துவப் பண்புகள் என்பவற்றுடன் மறைந்து கிடக்கும் அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காக ஆங்கில வகுப்புக்களுடன், யோகாசன வகுப்புக்கள், கராத்தே வகுப்புக்கள் மற்றும் இசை,ந[illegible]நிகழ்வுகளையும் எமது சனசமூக நிலையத்தினூடாக மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

மேலும், இந்தச் சனசமூக நிலையம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கராத்தே வகுப்பின் மூலம் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் உயர்தர



வகுப்பில் கல்வி பயிலும் சுரேஸ்குமார் என்ற மாணவி பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற கராத்தே போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றதுடன், மாகாண மட்டப் போட்டியில் பங்கு பற்றுவதற்காக எதிர்வரும் 28ஆம் திகதி வவுனியா செல்லவுள்ளதாக தெரிவித்தார்.

எனவே, இங்கு கல்வி கற்கவரும் மாணவிகளுக்கு முன்னுதாரணமாக இந்த மாணவி திகழ்வதாகக் குறிப்பிட்ட அவர், பெற்றோர்கள் பிள்ளைகளை இவ்வாறான வகுப்புகளுக்கு அனுப்புவதனூடாக பிள்ளைகளின் ஆளுமைகளை வளர்த்துக் கொள்ள முடியும் என சிவாஜினி சுட்டிக்காட்டினார்.

# மன்னார் முருங்கைக்காய்க்கு யாழில் அதிக கிராக்கி


(கிரு-சிகரம்)

மன்னார் -முருங்கைக் காய்க்கு யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் சகல பாகங்களிலும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

மன்னாரின் கருதோட்டவெளி,தாராபுரம், பேசாலை, தலைமன்னார் ஆகிய கிராமங்களில் பெருமளவில் நல்ல இன முருங்கை மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இவற்றில் தரமான விளைச்சல் கிடைப்பதுடன் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

தற்போது மன்னாரில் கிலோ 180 - 200 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதால் முருங்கை உற்பத்தியாளர்கள் அதிக வருமானம் ஈட்டுகின்றனர். மன்னார் முருங்கைக்காய் வேறுமாவட்டங்களுக்கு எடுத்து செல்லப்படுவதால் மன்னாரில் முருங்கைக்காயக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்தோடு அதன் விலையும் அதிகரித்துள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்து நுகர்வோர் மன்னார் முருங்கைகாயை நம்பி இருக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது என விவசாயி ஒருவர் குறிப்பிட்டார். யாழில் ஒருகிலோ முருங்கைக்காய் 400 ரூபா வரை விற்கப்படுகிறது.



மண்டைதீவு முகப்பு வயல் கந்தசுவாமி கோவிலின் பத்துநாள் கொடியேற்றத் திருவிழா நடைபெற்று வருகின்றது. ஐந்தாம் நாள் திருவிழா நிகழ்வின்போது வள்ளி, தெய்வயானை யுடன் முருகப் பெருமான் வீதியுலா வரும் காட்சி.

# பதிவிறக்கப் பெட்டகம்

நதியில் புதிய வெள்ளப்பெருக்கு
நாணல் நடனம் என்ன ஆனது?
**– தேனரசன்**

புல்லை விட்டு
மரத்தைப் பிடுங்கிச்
செல்லும் புயல்
**– மனுஷ்யபுத்திரன்**

இந்த பிளாஸ்டிக் ஸ்டூல் மீது
ஒரு ஈ அமர்ந்து என்னையே
பார்த்துக் கொண்டிருக்கிறது.
எழுதும்போது
வண்ணத்துப்பூச்சி என்றுதான்
எழுதவேண்டியிருக்கும்.
**– பேயோன்**

வான் நோக்கி வளர்ந்து
ஒடிந்து விழுகிறது கிளை;
பூமி பார்த்து சரிந்து
நிலை கொள்கிறது விழுது.
**– சு.பார்த்தசாரதி**

நான் சண்டை போடாத எல்லோரையும்
நான் விரும்புகிறேன் என்று அர்த்தமில்லை
**– நிம்ல விஸ்வநாதன்**

"என்ன செய்துகொண்டு
இருக்கிறாய் இப்போ?"
என்று நானும்
இனிமேல் கேட்கலாம்
எனக்கு வேலை கிடைத்துவிட்டது.
**– கல்யாண்ஜி**

எலிகளைக் கொல்ல
மனமில்லை
பூனை வளர்க்கிறேன்
**– பாபு**

பழுத்துக் களைத்து –
கழற்றி வைத்த கண்ணாடியில்
இரண்டு மின்விசிறிகள்
களைப்பில்லாமல் சுற்றிக்கொண்டு.
**– கலாப்ரியா**

குழந்தையின்
கல்லறையில்:
"வந்தது
பிடிக்கவில்லை
திரும்பிவிட்டது."
**– சூரியதாஸ்**

இருப்பதற்கென்றுதான்
வருகிறோம்
இல்லாமல்
போகிறோம்.
**– நகுலன்**

செத்துச் செத்துப் பிழைத்தாய் நீ
வாழ்ந்து வாழ்ந்து அழிந்தேன் நான்.
**– பசுவய்யா**

நந்தனுக்கு உண்டு
எப்போதும் புகழ்
நந்தியை
விலகச் சொன்ன
முதல் மனிதன் என்பதால்.
**– அறிவன்**

ஒவ்வொருவர் கையிலும்
தராசு
தன்னை எடை போட
இல்லை.
**– விக்ரமாதித்யன்**

பிரியம் விதைத்த காட்டில்
நெருப்பு முளைத்தாலும்
பிடுங்கி எறிந்துவிட்டு
மீண்டும் உழுது வைப்பேன்.
**– சமயவேல்**

கந்தையானாலும்
கசக்கிக் கட்டுவது சரி
காயும் வரை
எதைக் கட்டுவது?
**– பொன்.ரவி**

இடைவெளிகள்தான்
நெருக்கத்தைத்
தீர்மானிக்கின்றன
எனினும் நெருக்கமற்ற
இடைவெளிகள்
பிரயோசனமற்றவை.
**– யுகபாரதி**

அவரவர் வானம்
அவரவர்க்கே யானாலும்
அடியாமல் பிடியாமல்
வசப்பட வழியில்லை.
**– வண்ணநிலவன்**

பழத்தின் அழகை
பாராட்டுகிறார்
உள்ளிருந்து குடையும்
வண்டின் குடைச்சலை
யாரறிவார்? **– அபி**

வெற்றியும் தோல்வியும்
வீரர்க் கழகானாலும்
வெற்றிதானே குறி!
**– தேவதேவன்**

* பூஞ்செடி வீட்டுக்கு
பூத்த மரம் தெருவிற்கு

* குருவி பறந்து பறந்து செல்லும்
பள்ளத்தாக்கின் உள்ளே

* மனதை அள்ளும்
மலைச் சரிவில் பூக்கள்
**– காளிதாஸ்**

என்ன வரம் வேண்டும்
என்கிறார் கடவுள்
அது தெரியாத
நீர் என்ன கடவுள்?
**– நீலமணி**

அறைந்து சாத்தப்படுகிற
கதவுகளுக்கென்ன தெரியும்
வெளியே நிற்பவர் துயரம் பற்றி
**– கல்யாணராமன்**

வேறெந்த இனத்திலும்
இத்தனை விபரீதமில்லை
மனிதனைத் தின்னும்
மனிதனைப் போல
மீனை உண்ணும் மீன்கள்.
**– இளையபாரதி**

* நிழல் எனக்கல்ல
என்மேல் படும் வெய்யிலுக்கு

* காலத்தின் சிறையில் நாட்கள்
நாட்களின் சிறையில் நான்

* சாவு சர்வ நிச்சயம்
மனிதர்கள் வாழ்கிறார்கள்
**– ப்ரதிபா ஜெயச்சந்திரன்**

கடைசிப் பக்கம்
கிழிந்த நாவலில்
கொலை செய்தது யார்?
**– தனசேகரன்**

# அரசைக் குறைகூறும் பொன்சேகா தான் குற்றமற்றவரென நிரூபிக்கட்டும்

## அமைச்சர் ரம்புக்வெல சவால்

(கொழும்பு)

அரசாங்கத்தை குற்றஞ்சாட்டும், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா முதலில், தான் குற்றமற்றவரென நிரூபிக்க வேண்டுமென அரசாங்கப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அவருடைய மருமகன் பொலிஸாரினால் தேடப்பட்டு வரும் ஒருவர். அவர் தலைமறைவாகியுள்ளார். பொன்சேகா ஊழலை ஒழிப்பதில் உண்மையில் அக்கறையானவராக இருந்தால், தன் மருமகனை சட்டத்தின் முன் நிறுத்தி தன் நேர்மையை நிரூபிக்க வேண்டுமெனவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறினார்.

தானும் தன் குடும்பத்தினரும் அரசியல் பழிவாங்கலினால் பாதிககப்பட்டவர்களென முன்னாள் இராணுவத் தளபதி தெளிவாகக் கூறியுள்ளாரென அவரிடம் தெரிவிக்கப்பட்டபோது, அப்படியாயின் நீதித்துறை ஊழல் மிக்கதென அவர் கூற வருகின்றாரா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

அப்படியாயின் நீதித்துறை ஊழல் மிக்கதென முதலில் நாட்டுக்கு கூறட்டும். முழு நீதித்துறையுமே ஊழலானதென அவர் கூறினால், அது வேறு கதை. ஆனால் நீதித்துறையில் அவருக்கு நம்பிக்கை இருந்திருந்தால் அவர் வேறு யாரையும் குற்றஞ்சாட்ட முன் அவர்தான் குற்றமற்றவரென நிரூபிக்க வேண்டுமெனவும் அவர் கூறினார்.

முன்னாள் இராணுவத் தளபதியின் அரசியல் விஞ்ஞாபனத்தில் முழு நாட்டிலும் அரசியல் தலையீடு தலைவிரித்தாடுவதாக கூறியதைப் பற்றி கேட்டபோது, பொன்சேகா இராணுவத் தளபதியானதே அரசியல் தலையீட்டின் காரணமாகத் தானெனவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறினார்.

உண்மையில் ஒரு இளைப்பாறிய இராணுவ அதிகாரியான இவர் இராணுவத் தளபதியாக்கப்பட்டார். இதை அரசியல்



தலையீடென கருத முடியும். அவரை இராணுவத் தளபதியாக நியமித்தது தவறென்பது தெளிவான விடயம். அவர் கூறும் குற்றச்சாட்டுக்கள் அவருக்கு பொருந்துமெனவும் அவர் கூறினார்.

## சுற்றுவட்ட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை சுற்றுவட்டத் திறப்பு விழாவும், மர நடுகையும் நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு பண்ணைச் சுற்று வட்டத்தில் யாழ். மாநகர முதல்வர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். மாநகர சபையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## விவசாய ஓய்வூதியத் திட்டத்தை வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை மீளவும் ஆரம்பிக்க வேண்டுமென விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் பிரதான செயலாளர் நிஷங்க பாலசூரிய கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்ததாவது,

விவசாய ஓய்வூதியத் திட்டத்தை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாதவிடத்து, விவசாயிகளுடன் இணைந்து போராட்டம் நடத்தவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இதுதொடர்பில் விவசாயத்துறை அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவிக்கையில்,

விவசாய ஓய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

# டெங்கு நுளம்பை ஒழித்துக்கட்ட விசேட ஜனாதிபதி செயலணி

(கொழும்பு)

நாட்டில் பரவலாக திடீரென டெங்கு தொற்று தீவிரமாக வியாபித்து வருகின்றமை தொடர்பில் ஆராய்வதற்காக டெங்கு ஒழிப்பு குறித்த ஜனாதிபதி செயலணியை உடனடியாக அழைப்பதற்கு சுகாதார அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பை தீவிரப்படுத்துவது தொடர்பில் இதன்போது ஆலோசனைகள் முன்வைக்கப்படவுள்ள டெங்கு தொற்று நிலைமை குறித்து ஆராய்ந்துள்ள சுகாதாரத்துறை அமைச்சர், நாளை திங்கட்கிழமை நிலைமை தொடர்பான அறிக்கையொன்றை சமர்பிக்குமாறு ஜனா திபதி செயலணிக்கு பணித்துள் ளார்.

இதன்படி, 12 அமைச்சுகளின் செயலாளர்கள், டெங்கு தொற்று ஒழிப்பு வேலைத்திட்டம் தொடர்பான வைத்தியர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் உளளிட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பான அனைத்து பிரிவினரும் அமைச்சருக்கு விளக்கங்களை அளிக்கவுள்ளனர்.

தற்போது செயற்பாட்டில் உள்ள டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் காணப்படும் குறைபாட்டின் காரணமாகவே தொற்று துரிதமாக பரவுவதற்கு காரணமாக இருக்கின்றதா என்று இதன்போது விசேடமாகக் கவனம் செலுத்தப் படவுள்ளது.




இதுதவிர, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய திட்டங்கள் இருக்கும் பட்சத்தில் அது தொடர்பாக தீர்மானம் எடுப்பதறகு நாளை திங்கட்கிழமை எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தேசியமட்ட கூடைப்பந்து இறுதியில் யாழ். மாவட்டம்

(குருநாகல்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் தேசிய மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட அணி தகுதி பெற்றுள்ளது. தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் தேசியமட்ட கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடர் குருநாகல் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் முதல் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், குருநாகல் மாவட்ட அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத்திறனை வெளிப்படுத்திய யாழ். மாவட்ட அணி 28-14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இப்போட்டியில் ஆரம்பத்திலிருந்து ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 28 - 14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் யாழ். மாவட்ட அணியும், திருகோணமலை மாவட்ட அணியும் மோதின. இதில் 41- 31 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட அணி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

இன்றைய தினம் மாலை 5. 00 மணியளவில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு யாழ். மாவட்ட அணி தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடமாகாண கூடைப்பந்தாட்டப் பயிற்றுநர் ரமணன் யாழ். மாவட்ட அணியை நெறிப்படுத்தி வழிநடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# காலாவதியான சீமெந்து மூடைகள் மருதானையில் கைப்பற்றப்பட்டன



(மருதானை)

மருதானை மற்றும் பண்டாரகம ஆகிய பிரதேசங்களிலிருந்து காலாவதியான சீமெந்து மூடைகள் 13200 ஐ மீட்டதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்தது.


மேற்படி காலாவதியான சீமெந்துகளை புதிய பைகளில் ஈடும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருந்தபோதே அவை கைப்பற்றப்பட்டதாக மேற்படி அதிகார சபை கூறியது.

மருதானை பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானதெனக் கூறப்படும் களஞ்சிய சாலையொன்றிலிருந்து 10 ஆயிரம் மூடை சீமெந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் காலாவதியான சீமெந்து மூடைகள் 3200 ஐ பண்டாரகம பொலிஸார் அப்பகுதியில் வைத்து கைப்பற்றியுள்ளனர்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸாருடன் இணைந்து நுகர்வோர் அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது.

## மழலை மனதில் "தினமுரசு"




அரியாலை சனசமூக நிலைய முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நேற்றைய தினம் இடம்பெற்றது. இதில் மழலை ஒருவர் தினமுரசு பத்திரிகை விற்பனையாளராக வினோத உடை தரித்திருந்தார். இந்த வினோத உடை பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது.

(படம் - ஜெகநாதன்)

Grade - 13

க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper

02 | T | II

நேரம் : 2 மணித்தியாலம்

கல்வி முரசு

உயிரியல்
Biology

ஆசிரியர் :
Ponniah Aravinthan
(B.se, M.ed, Dip.in.ed)

உயிரியல் - பகுதி II தொடர்ச்சி............

1) பீடை முகாமைத்துவத்தில் இரசாயனக் கட்டுப்பாட்டை விட உயிரியல் கட்டுப்பாட்டு முறையிலுள்ள அனுகூலங்கள் இரண்டு தருக.

..............................................................

..............................................................

2) தென்னையைத் தாக்கும் Coleoptera பீடைகளின் பொதுப் பெயர்களையும், சேதத்தை உண்டுபண்ணும் வாழ்க்கைவட்ட நிலைகளையும் தருக.

| பொதுப்பெயர் | சேதம் விளைவிக்கும் பருவம் |
|---|---|
| a. .............................. | .............................. |
| b. .............................. | .............................. |
| c. .............................. | .............................. |

3) மேற்கூறிய பீடைகளுக்குரிய பொதுவான கட்டுப்பாட்டு முறைகளைத் தருக.

a. ..............................................................

b. ..............................................................

c. ..............................................................

D) 1) நெல்லில் தோன்றும் மூன்று முக்கிய நோய்கள் எவை?

..............................................................

..............................................................

..............................................................

2) a) களைகளின் தாக்கத்தினால் நெற்பயிர்களின் வளர்ச்சி எவ்வாறு தடைப்படுகின்றது?

..............................................................

..............................................................

b) பிரதான களைக்கட்டுப்பாட்டு முறைகள் எவை?

..............................................................

..............................................................

..............................................................

3) தாவர இனக்கலப்பு என்பதன் கருத்து யாது?

..............................................................

..............................................................

..............................................................

4) **பின்வரும் பதங்களை விளக்குக.**

a) தெரிவு செய்யப்பட்ட இனக்கலப்பு

..............................................................

..............................................................

..............................................................

b) கலப்புப் பிறப்பாக்கம்

..............................................................

..............................................................

..............................................................

5) சிறந்த கலப்புப் பிறப்பாக்கத்தைப் பெற்றுக் கொள்ள, எடுக்க வேண்டிய முக்கிய நடைமுறைகள் எவை?

a) ..............................................................

b) ..............................................................

## பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. மனித கண்ணின் பிரிவலு அண்ணளவாக எவ்வளவு?
 01. 0.1mm 02. 0.5µm 03. 0.25µm
 04. 2mm 05. 1µm

02. பின்வருவனவற்றுள் எது கலக்கொள்கையில் உள்ளடக்கப்படவில்லை?
 01. உயிரங்கியின் அடிப்படையலகு கலம்
 02. உயிரங்கிகள் யாவும் தனிக்கலத்தால் ஆனவை.
 03. கலங்கள் யாவும் முன்பிருந்த கலங்களில் இருந்து தோன்றுகின்றன.
 04. உயிரங்கியின் அடிப்படை தொழிற்பாட்டலகு கலமாகும்.
 05. உயிரங்கியின் அடிப்படைக் கட்டமைப்பலகு கலமாகும்.

03. பின்வருவனவற்றுள் எது உயிரற்ற உயிருள்ள பொருட்களுக்குப் பொதுவானது எது?
 01.அசைவு 02. இசைவாக்கம் 03. தலைமுறையுரிமை
 04.உறுத்துணர்ச்சி 05. கழிவகற்றல்

04. பின்வரும் ஆட்சி நிரைகளில் எது மிகவும் தாழ்நிலையில் காணப் படுகின்றது?
 01. கலம் 02. கலப்புன்னங்கம் 03. உயிரியல் மூலக்கூறு
 04. இழையம் 05. அங்கம்

05. அழுத்தமற்ற அகக்கலவுருச்சிறுவலையின் தொழிலாக அமைவது?
 01. நச்சுத்தன்மை நீக்கல் 02. ஸ்திரோயிட் தொகுப்பு
 03. புரதத்தொகுப்பு 04. Ca அயன் சேமிப்பு
 05. ஒளித்தொகுப்பு

06. பின்வரும் மூலகச்சோடிகளில் எது நுண்போசணை மூலகங்களாகும்?
 01. Mn,Cu 02. N,P 03. C,H 04. Ca,Mg 05. K,O

07. காபோவைதரேற்றுகளில் ஐதரசனுக்கும் ஒட்சிசனுக்கும் இடையிலான விகிதம்?
 01. H: O= 2:1 02. H: O= 1:2 03. H: O= 3:1
 04. H: O= 1:3 05. H: O= 1:1

08. பின்வருவனவற்றுள் எது 6C காபன் வெல்லமாகும்?
 01. Glyceraldhyde 02. Erythrose 03. Ribose
 04. Ribulose 05. Galactose

09. பின்வருவனவற்றுள் எது விஞ்ஞான முறையின் மிக அடிப்படையானது?
 01. கருதுகோள் அமைத்தல் 02. அவதானம்
 03. எதிர்வுகூறல் 04. பரிசோதித்தல்
 05. கருதுகோள் நிராகரிப்பு

10. *Paramecium* போன்ற தனிக்கல அங்கிகளில் கழிவகற்றலுக்குப் பொறுப்பாகவுள்ள கலப்புன்னங்கம்?
 01. சுருங்கத்தக்க புன்வெற்றிடம் 02. லைசோசோம்
 03. Ribosome 04. இழைமணி
 05. கரு

11. பின்வரும் ஓமோன்களில் எது சிறுநீரகத்தில் தொழிற்படுகிறது?
 01. Insulin 02.ADH 03.Progestrone
 04. Erythropoietin 05.

12. Testestorne சாதாரண சுகதேகி ஒருவரின் கலன்கோள வடிதிரவத்தில் காணப்படக்கூடியது?
 01. அல்பியூமின் 02. குருதிச்சிறுதட்டுகள் 03. அமினோவமிலம்
 04. நீர் 05. கனியுப்புக்கள்

13. உடற் சமனிலையுடன் தொடர்புபட்ட மனித செவியின் கட்டமைப்பு?
 01. ஊத்தேக்கியன் கால்வாய் 02. கோட்டியின் அங்கம்
 03. சம்மட்டியுரு என்பு 04. தொட்டி
 05. பொட்டு

14. முள்ளந்தண்டு விலங்குகளின் ஒளிவாங்கிகளை ஒத்த ஒளிவாங்கிகளைக் கொண்ட முள்ளந்தண்டற்ற கணம்?
 01. Mollusca 02. Coelenterata
 03. Annelida 04. Arthropoda
 05. Platyhelminthes

15. விலங்குகளிடையே காணப்படும் சில கழிவகற்றும் கட்டமைப்புகளும், இக்கட்டமைப்புகளுடைய விலங்குகள் அடங்கும் கணங்களும் கீழே தரப்பட்டுள்ளன. பின்வரும் கழிவகற்றும் கட்டமைப்பு - கணம் சேர்க்கைகளுள் தவறான சேர்க்கை எது?

| கழிவகற்றும் கட்டமைப்பு | கணம் |
|---|---|
| 01. கழிநீரகம் | Annelida |
| 02. மல்பீசியன் உடல் | Arthropoda |
| 03. பசும் சுரப்பி | Mollusca |
| 04. சிறுநீரகம் | Chordata |
| 05. சுவாலைக்கலம் | Platyhelminthes |

16. பின்வருவனவற்றுள் எது கலமென்சவ்வின் தொழிலன்று?
 01. கலத்தின் வெளிப்புற எல்லையாக தொழிற்படல்
 02. கழிவுப் பதார்த்தங்களின் வெளியேற்றத்தை ஒழுங்காக்கல்
 03. கலத்தின் பிரசாரணச்சீராக்கலை மேற்கொள்ளல்
 04. பிறப்புரிமைப் பதார்த்தங்களைச் சேமித்தல்.
 05. கலங்களுக்கிடையில் தகவல் பரிமாற்றம் செய்தல்.

17. மனிதனின் அகச்சூழலில் சீராக்கப்படாதது பின்வருவனவற்றுள் எது?
 01. Urea 02. Glucose 03. காபனீரொட்சைட்டு
 04. வெப்பநிலை 05. நீர்

18. சூழலின் வெப்பநிலை குறையும்போது மனித உடலில் பின்வரும் செயன்முறைகளில் எது நடைபெறுவதில்லை?
 01. அனுசேபவீதம் அதிகரித்தல்
 02. வியர்வைச் சுரப்பிகள் நிரோதித்தல்
 03. வெப்ப இழப்புப் பொறிமுறைகள் நிரோதிக்கப்படல்
 04. ருபிணியின் சிறுதுணிக்கைகள் தூண்டப்படுகின்றன.
 05. தோலிற்கான குருதி வழங்கல் குறைதல்

19. ஒரு மூலக்கூறு ATP ஆனது ADP நீர்ப்பகுப்பு அடைவதனால் கிடைக்கும் சக்தி அண்ணளவாக?
 01. 30.6KJ 02. 12.4KJ 03. 15.3KJ
 04. 61.2KJ 05. 6.12KJ

(மறுபக்கம் பார்க்க)

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்

G.C.E. (A/L) Examination model Paper

02 T II

நேரம் : 2 மணித்தியாலம்

# கல்வி முரசு

உயிரியல் - (பகுதி I)
Biology -(Part - I)

ஆசிரியர் :
Ponniah Aravinthan
(B.se, M.ed, Dip.in.ed)

20. மனித சிறுநீரகம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது?
01. அது RBC உற்பத்தியுடன் தொடர்புபட்டது.
02. அது உடலின் பிரதான பிரசாரணச் சீராக்கல் அங்கமாகும்
03. அது குருதியின் pH இனை ஒழுங்காக்குகிறது.
04. அது யூரியாவைத் தொகுக்கிறது.
05. அது அகஞ்சுரக்கும் பகுதியாகத் தொழிற்படுகிறது.

21. பின்வரும் ஓமோன்களில் எது அனுசேபத் தொழிற்பாட்டை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்கிறது?
01. Prolactin 02. Thyroxine 03. Melatonin
04. ADH 05. Oestrogen

22. தாவரங்களை அவற்றின் தோற்றம் அடிப்படையிலும் வாழ்க்கைக் காலம் அடிப்படையிலும் பாகுபடுத்தியவர்?
01. Carolus Linnaeus 02. Theoparatus
03. Ernest Haeckel 04. Aristotle
05. Carl woese

23. மனித ஓமோன்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது?
01. Thymosine தைமஸ் சுரப்பியினால் சுரக்கப்படுகிறது.
02. Parathormone குருதிக் ca அளவினைக் அதிகரிக்கிறது.
03. FSH புடைப்புகளின் விருத்தியைத் தூண்டுகிறது.
04. Calcitonin குருதி ca அளவினைக் கூட்டுகிறது.
05. Insulin ஈரலில் தொழிற்படுகின்றது.

24. மனிதனில் பரபரிவு நரம்புத் தொகுதியின் ஏவல்
01. இதய அடிப்பு வீதத்தை அதிகரித்தல்.
02. புன்னாடிகளில் கலன் ஒடுக்கம்.
03. மயிர்நிறுத்தித்தசை சுருங்கல்.
04. கண்ணீர் உற்பத்தியைத் தூண்டல்.
05. குடற்சுருக்கத்தை மந்தமடையச் செய்தல்.

25. மனித கண்ணின் விழித்திரையிலுள்ள கூம்புக்கலங்களில் காணப்படும் நிறப்பொருள்?
01. Rhodopsin 02. Iodopsin 03. Haemoglobin
04. Myoglobin 05. Bilirubin.

26. மனித கண்ணினை வந்தடையும் ஒளிக்கதிர்கள் குவியும் இடம்?
01. விழிவெண்படலம் 02. விழித்திரை 03. மையச்சிற்றிக்கம்
04. கண் வில்லை 05. குருட்டிடம்.

27. பின்வரும் ஓமோன்களுள் எது பிற்புற கபச் சுரப்பிச் சோணையால் விடுவிக்கப்படுவது?
01. Prolactin 02. GH 03. Oxytocin
04. Insulin 05. Thyroxine.

28. மனித ஈரல் தொடர்பான தொழில்களில் தவறானது?
01. Cholesterol தொகுப்பு
02. வெப்பநிலைச் சீராக்கத்தில் பங்கெடுத்தல்.
03. இலிங்க ஓமோன்களின் தொகுப்பு
04. மேலதிக குருதியைக் களஞ்சியப்படுத்தல்
05. நச்சுத்தன்மையகற்றல்.

29. பின்வரும் இயல்புகளில் எது பேரிராச்சியம் Archaea உடன் தொடர்பற்றது?
01. இயூக்கரியோற்றா கல ஒழுங்கமைப்பு
02. மெதியோனைன் மூலமாக புரதத்தொகுப்பு ஆரம்பித்தல்
03. பல்வேறு வகை RNA பொலிமரேஸ் காணப்படுதல்
04. கலச்சுவரில் Peptidoglycan காணப்படாமை.
05. அசாதரணமான வாழிடங்களில் காணப்படல்.

30. மனித தோல் தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?
01. நுண்ணங்கி உட்புகுதலைத் தடுக்கிறது.
02. Vitamin D தொகுப்பு
03. கழிவகற்றும் அங்கமாக தொழிற்படல்.
04. வெப்பநிலைச் சீராக்கத்தில் பங்கெடுப்பதில்லை.
05. உட்தோலில் புலன் வாங்கிகளைக் கொண்டுள்ளது.

31. இனப்பெருக்கத்தொகுதியின் சுக்கிலச் சிறுகுழாயிலுள்ள சேற்றோலியின் கலங்களின் தொழிற்பாடுகளில் சரியானது?
01. விந்தினை உற்பத்தி செய்தல்
02. விந்தின் முதிர்ச்சியைத் தூண்டல்
03. விந்தாக்கத்தினை தூண்டல்
04. விந்திற்கு போசணையளித்தல்
05. விந்தின் உற்பத்தியை நிரோதித்தல்

32. மனிதனில் வெப்பச்சீராக்கல் மையம் அமைந்துள்ள இடம்?
01. நீள்வளையமையவிழையம் 02. பரிவகக்கீழ்
03. வரோலியின் பாலம் 04. மூளையம்
05. மூளி

33. அழுகல்வளரிப்போசணையை காண்பிக்கும் அங்கிகள் தொடர்பான கூற்றுக்களில் தவறானது?
01. இவை இறந்த சேதனப் பதார்த்தங்களை உண்ணுகின்றன.
02. இவை சமிபாட்டு நொதியங்களை அகஞ்சுரக்கின்றன.
03. இவை கலப்புறச் சமிபாட்டை மேற்கொள்கின்றன.
04. பெரும்பாலான பங்கசுக்கள் இப்போசணையை காண்பிக்கின்றன.
05. இவை பிறபோசணை முறைப் போசணை வகையாகும்.

34. உமிழ்நீரில் காணப்படக்கூடிய கழிவுப்பொருள் எது?
01. சீதம் 02. காபனீரொட்சைட்டு
03. Urea 04. பித்த நிறப்பொருட்கள்
05. பித்த உப்புக்கள்.

35. பின்வருவனவற்றுள் எது நரம்புக்கலங்கள் யாவற்றுக்கும் பொதுவானது?
01. கருவுடைய கலவுடல்.
02. மயலின் கவசமுடைய நரம்புமுளை.
03. இரண்விபரின் கணு காணப்படுதல்.
04. சுவானின் கலத்தால் சூழப்பட்ட நரம்புமுளை
05. அதிக எண்ணிக்கையான நரம்புமுளைகள் இருத்தல்.

36. மனித சிறுநீரகத்தின் அடிப்படை தொழிற்பாட்டு கட்டமைப்பு அலகாவது?
01. கலன்கோளம் 02. சிறுநீரகத்தி
03. சிறுநீரக இடுப்பு 04. சிறுநீரக மையவிழையம்
05. சிறுநீர்ப்பை

37. கணம் அனலிடா தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது?
01. அவை உண்மையான உடற்குழி கொண்டன.
02. சில அங்கத்தவர்கள் ஒட்டுண்ணிகளாக உள்ளன.
03. இவற்றில் சுவாலைக் கலங்கள் கழிவகற்றும் அங்கமாக செயற்படுகின்றன.
04. மூன்று மூலவுயிர்ப்படையுடைய விலங்குகள் ஆகும்.
05. நீர் நிலையியல் வன்கூடு உள்ளன.

38. குருதியுறைதலுடன் தொடர்புடைய விற்றமின் பின்வருவனவற்றுள் எது?
01. விற்றமின் A 02. விற்றமின் D 03. விற்றமின் K
04. விற்றமின் B12 05. விற்றமின் C

39. சிகரெட் புகைப் பழக்கம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
01. அது சீதம் சுரக்கப்படலைத் தூண்டுகிறது.
02. புகையிலுள்ள நிக்கொட்டின் என்னும் பதார்த்தம் குருதிய முக்கத்தைக் குறைக்கிறது.
03. புகையிலுள் காபனோரொட்சைட்டு சுயாதீன ஈமோகுளோபின் அளவைக் குறைக்கிறது.
04. நுரையீரல் சம்பந்தப்பட்ட புற்றுநோய்கள் உருவாவதனைத் தூண்டுகிறது.
05. புகையிலுள்ள நிக்கொட்டின் இதய அடிப்புவீதத்தைக் கூட்டுகிறது.

**40 தொடக்கம் 44 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் ஒன்று சரியானது அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானவை. விடைகளுள் எது சரியானது அல்லது சரியானவை என முடிவு செய்க.**

A, B, D சரியெனின்.............................01
C, D சரியெனின்.............................02
A, B சரியெனின்.............................03
A,C சரியெனின்.............................04
வேறு விடைச் சேர்க்கை சரியெனின்.............................05

40. மனிதனின் தோலில் காணப்படுகின்ற பின்வரும் கட்டமைப்புகளுள் எது / எவை வெப்பநிலைக்கு உறுத்துணர்ச்சி உள்ளது அல்லது உள்ளவை?
A. Krause முனைக்குமிழ் B. Meissner இன் சிறுதுணிக்கை
C. Ruffini இன் சிறுதுணிக்கை D. சுயாதீன நரம்பு முடிவிடங்கள்
E. Pacinian சிறுதுணிக்கை.

41. பின்வரும் மனித ஓமோன்களுள் எது / எவை அகஞ்சுரக்கும் சுரப்பி / அகஞ்சுரக்கும் பகுதிகள் ஒன்றில் தொழிற்படக்கூடியது அல்லது தொழிற்படக்கூடியன?
A. Insulin B. Thymosine C. FSH
D. ACTH E. Prolactin.

42. குருதியில் ADH இருக்கும் போது மனித சிறுநீர்தாங்கு சிறுகுழாயிலே உடலின் தேவையின் பொருட்டு நீர் மீளவுறிஞ்சப்படுதல் நடைபெறுவது?
A. சேய்மை மடிந்த சிறுகுழாயில்
B. சேர்க்கும்கான்களில்
C. எல்லேயின் தடத்தின் ஏறும் புயத்தில்
D. எல்லேயின் தடத்தின் இறங்கு புயத்தில்
E. கலன்கோளம்.

43. மனித கண்ணில் உள்ள கூம்புக்கலங்கள் தொடர்பான கூற்றுகளுள் எது அல்லது எவை சரியானது / சரியானவை?
A. Rhodopsin நிறப்பொருளுடையவை
B. விழித்திரையில் பொதுவாக பரம்பிக் காணப்படுகின்றன.
C. அவை பிரகாசமான ஒளியினால் தூண்டப்படுகின்றன.
D. இவை நிறப்பார்வைக்குப் பொறுப்பானவை.
E. தனியான வகை கூம்புக் கலங்கள் உள்ளன.

44. ஓட்சிற்டோசின் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் எது அல்லது எவை சரியானது அல்லது சரியானவை?
A. அவை பரிவகக்கீழால் சுரக்கப்படுகின்றன.
B. பிள்ளை ஈனுதலின்போது கருப்பைத் தசைச் சுருக்கத்தை ஏற்படுத்தும்.
C. துணைப்பால் இயல்பிற்குப் பொறுப்பாக இருக்கிறது.
D. முற்பக்கக் கபச்சுரப்பியினால் சுரக்கப்படுகின்றது.
E. அவை பெப்தயிட் ஓமோன்களாகும்.

(தொடரும்)

# வெற்றி நிச்சயம் குழப்பம் வேண்டாம்

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி வேட்பாளராக மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி நிறுத்தப்பட்டுள்ளார். காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பிரதமர் மன்மோகன் சிங் முன்னிலையில் நேற்று முன்தினம் இதை அறிவித்தார். பிரணாப் முகர்ஜிக்கு முலாயம் சிங் யாதவின் சமாஜ்வாடி கட்சி, மாயாவதி யின் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவை ஆதரவு தெரிவித்துள்ளன.

போட்டி இருந்தாலும், இல்லாவிட்டாலும் பிரணாப் முகர்ஜி ஜனாதிபதியாவது உறுதி என்கிற நிலை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் குழப்பமும், பிளவும் ஏற்பட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

பாரதீய ஜனதா கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஐக்கிய ஜனதா தளம் கட்சி பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்தக் கட்சியைச் சேர்ந்த சிவனாந்த் திவாரி கூறும்போது, எனது தனிப்பட்ட கருத்து என்னவென்றால் பிரணாப் முகர்ஜியை ஆதரிக்கலாம். அவரேயே ஒருமித்த வேட்பாளராக அறிவிக்கலாம் என்றார்.

இதேபோல அந்த கூட்டணியில் உள்ள ஷிரோன் மணி அகாலிதளம் கட்சியும் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு தெரிவிக்கும். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று தெரிவித்து உள்ளது. ஆனால் சிவசேனா, ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியசுவாமி ஆகியோர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேண்டும் என்று தெரிவித்து உள்ளனர்.

இதேபோல் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக பாரதீய ஜனதாக் கட்சியிலும் மாறுபட்ட கருத்து நிலவுகிறது. அந்த கட்சியின் உயர் மட்டக் குழு கூட்டம் நடக்கிறது. ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக முடிவு எடுக்கப்படும். தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டம் நடந்தது.

இந்த கூட்டத்தில் எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை. பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது. இந்த கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படுகிறது. வேட்பாளரை நிறுத்தாமல் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவு தெரிவிக்கலாமா? அல்லது சங்மாவுக்கு ஆதரவு தெரிவிக்கலாமா? என்பது பற்றி முடிவு செய்யப்படும்.



தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் இடையே கருத்து நிலவுவதாலும், போதிய ஆதரவு இல்லாததாலும் பிரணாப் முகர்ஜியை பா.ஜனதா கூட்டணி ஆதரிக்கும் என்று தெரிகிறது.




# மக்களின் செல்வாக்கு; யாருக்கு ஏறுமுகம்?

புதுக்கோட்டை இடைத் தேர்தலில் தேமுதிகவுக்கு ஏறுமுகம் தான் என்று மக்கள் ஜெயலலிதாவிற்கு பதிலளித்துள்ளனர் என்று விஜயகாந்த் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், புதுக்கோட்டை இடைத் தேர்தலுக்காக 32 அமைச்சர்கள், 10 மேயர்கள், 100-க்கும் மேற்பட்ட நகராட்சி மன்றத் தலைவர்கள் என்று ஆளுங்கட்சி பரிவாரமே முகாமிட்டனர். முதல்வர் ஜெயலலிதா நேரில் தேர்தல் சுற்றுப்பயணம் செய்தார்.

இந்தச் சுனாமியை எதிர்த்து தேமுதிகவினர் 30,500 (21.3 சதவீதம்) வாக்குகள் பெற்று ஆளும் கட்சியினருக்குச் சரியான பாடம் புகட்டியுள்ளனர்.

புதுக்கோட்டை வாக்காளர்கள் தேமுதிகவுக்கு டெபாசிட்டை தந்ததோடு அதிக அளவிலும் வாக்குகளை அளித்துள்ளனர். தேமுதிகவுக்கு இனிமேல் இறங்கும் முகம்தான் என்று முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் பேசினார்.

ஆனால் மக்கள் தேமுதிகவுக்கு ஏறுமுகம்தான் என்பதையே பதிலாகத் தந்துள்ளனர் என விஜயகாந்த் கூறியுள்ளார்

# ஆதரவுக்கு நன்றி



புதுக்கோட்டை இடைத் தேர்தல் வெற்றி, அதிமுக ஆட்சியின் ஓராண்டு சாதனைக்கும் நல்லாட்சிக்கும் கிடைத்த வெற்றி என தமிழக முதல்வரும், அ.தி.மு.க பொதுச்செயலருமான ஜெயலலிதா கூறியுள்ளார்.

புதுக்கோட்டை சட்டப் பேரவைத் தொகுதிக்கான இடைத் தேர்தலில், அதிமுக ஆட்சியின் ஓராண்டு சாதனைகளை, வளர்ச்சித திட்டங்களை மனதில் நிலை நிறுத்தி கட்சியின் வேட்பாளர் கார்த்திக் தொண்டைமானை மகத்தான வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

2011இல் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலுடன் ஒப்பிடும் போது, அதிமுக வாக்கு வங்கி 24 சதவீதம் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும் சேர்ந்து 29 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளதால் அவற்றின் வாக்கு வங்கி கணிசமாக குறைந்துள்ளது. அதிமுக ஆட்சியின் ஓராண்டு சாதனைக்கும், நல்லாட்சிக்கும் கிடைத்த வெற்றி என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

# அனைவரும் நல்லவர்கள் அல்ல

நேற்று தனது பிறந்தநாளை கொண்டாடும் சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் 2014 ஆம் நடைபெற உள்ள தேர்தலில் லோக்பால் முக்கிய பங்கு வகிக்கும் எனவும், அனைத்து அரசியல்வாதிகளும் ஊழல்வாதிகள் அல்ல எனவும் தெரிவித்துள்ளார். மேலும் சில நல்ல தலைவர்களும் இருப்பதாகவும், அதே போன்று அனை வரும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவதாகவும் கூறினார். தானும், ராம்தேவும் மட்டுமின்றி அனைவரும் ஊழலுக்கு எதிராக போராட வேண்டும் என்பதே தமது நோக்கம் என்றார்.

# மத்திய அமைச்சர் பதவிக்காக அரசியலை வியாபாரமாக்க முடியாது

மத்திய அமைச்சர் பதவிக்காக மாற்று வியாபாரம் செய்ய விரும்பவில்லை என்று திமுக தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்ட பிறகு பிரணாப் முகர்ஜி தமிழகம் வரும்போது பெரிய வரவேற்பு கொடுப்பதை அவர் விரும்புவாரா எனத் தெரியவில்லை.

எனினும் நாங்கள் வரவேற்பு அளிக்க முயற்சிப்போம் என்று திமுக தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

மேலும் அவர், மத்திய அமைச்சரவையில் தி.மு.க.வுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இதையெல்லாம் எதிர்பார்த்து நாங்கள் செயற்படவில்லை.

பிரதமரும், சோனியாகாந்தியும் அமைச்சரவை மாற்றம் தொடர்பாக ஆலோசித்து முடிவு எடுப்பார்கள். பதவிக்காக திமுகவின் கோரிக்கைகளை மாற்று வியாபாரம் செய்ய நாங்கள் விரும்பவில்லை.

ஜனாதிபதி பதவி காலம் அப்துல் கலாமுக்கு முடியும் தருவாயில் டில்லியில் அவரைச் சந்தித்து இரண்டாம் முறையாக நீடிக்க விரும்புகிறீர்களா என்று கேட்டேன். அப்போது அவர் நாட்டமில்லை என்றார். இப்போது எப்படி அந்தப பதவியை மீண்டும் நாடினார் என்று தெரியவில்லை.

குடியரசுத் தலைவர் தேர்தலில் திமுக என்ன நிலைப்பாடைக் கொண்டிருந்ததோ அதே நிலைப்பாடுதான் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலிலும் என்றார் கருணாநிதி.

# கட்டியணைத்து நித்தியானந்தாவை வரவேற்றார் மூத்த ஆதீனம்

பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்த காரணத்தினால் கைதாகி நேற்று முன்தினம் பிணையில் வெளியான சுவாமி நித்தியானந்தா நேற்று மதுரை சென்றுள்ளார்.

இளைய ஆதீனமான சுவாமி நித்தியானந்தா, பெண் சீடர் கற்பழிப்பு வழக்கு, நிருபர்களைத் தாக்கியது, பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது போன்ற காரணங்களுக்காக இரு நாட்கள் கர்நாடக சிறையில் இருந்தார்.

இந்நிலையில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. கர்நாடகா பிடதி ஆசிரமத்திற்கு சீல் வைக்கப்பட்ட காரணத்தினால் இனி நித்தியானந்தா அங்கு செல்ல முடியாது.

இதனால் மதுரை ஆதீனத்திற்கு வருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் நித்தியானந்தா தனது சீடர்களுடன் ஆதீனமடத்திற்கு காரில் வந்திறங்கினார்.

அவரை மூத்த ஆதீனம் அருணாகிரி நாதர் கட்டி தழுவி கண்ணீர் மல்க வரவேற்ற சம்பவம் பார்ப்பவர்களை நிலைகுலைய வைத்தது.

# ரஜனியுடன் இணைந்து நடிக்காதது ஏன்?

கமல் நடித்து இருக்கும் விஸ்வரூபம் படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பு பெற்றுள்ளது. இதனால் உற்சாகமாக இருக்கும் கமல் அளித்த பேட்டியில் கூறியதாவது;


நான் ஒவ்வொரு படத்தில் பணியாற்றும் போதும் அதை கடைசி படமாகத்தான் பார்ப்பேன். அடுத்த படத்தை செய்வோம் என்று யாருக்கு தெரியும். சினிமாவில் எதுவும் நடக்கலாம். ஆனால் ரசிகர்களுக்கு ஒவ்வொரு படமும் கடைசி படமாக இல்லை. நடிகர்களுக்கு மட்டுமே கடைசி படம் என்ற நிலை உள்ளது.

நான் ஒவ்வொரு படத்தையும் நல்ல படமாக கொண்டு வர வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்காகவே உழைக்கிறேன். 200 கோடி பட்ஜெட்டில் படம் எடுப்பவர்களுக்கு கூட அதே அளவு பிரச்சினைகள் சுற்றி இருக்கின்றன.

ஐம்பது வயதை தாண்டியும் நான் அழகாக இருப்பதாக கூறுகின்றனர். அதற்காக என் தந்தைக்குதான் நன்றி சொல்ல வேண்டும். அழகாக இருப்பதற்கு நான் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொள்ளவில்லை. அப்படி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால் என தோற்றத்திற்காக அதையும் செய்வேன்.

விஸ்வரூபம் படத்தின் தொடர்ச்சியை படமாக்கப் போவதாக செய்திகள் பரவி உள்ளன. அப்படியொரு சிந்தனை பரிசீலனையில்தான் இருக்கிறது.

நான் படங்களை குறைத்து கொண்டதற்கு நல்ல தயாரிப்பாளர்கள் இல்லாததே காரணம். பணமும் மரியாதையும் ஒருவரை தகுதியான தயாரிப்பாளராக ஆக்கிவிடாது. தயாரிப்பு என்பது கூட ஒரு டெக்னிக்தான். நடிப்பை போல படங்களை தயாரிக்கவும் திறமை வேண்டும்.




200 படங்களில் நான் நடித்து இருக்கிறேன் என்றால் அதில் 100 தயாரிப்பாளர்கள்தான் சிறந்தவர்கள். சில தயாரிப்பாளர்கள் படத்தையே கெடுத்து உள்ளனர். மோசமான தயாரிப்பாளர்களை சந்திக்கும்போது நல்ல தயாரிப்பாளர்களையும் பார்க்கிறேன்.

ரஜினியும், நானும் இணைந்து நடிப்பது பற்றி கேட்கிறார்கள். நாங்கள் சேர்ந்து நடித்தால் வியாபாரத்தில் அந்த படத்துக்கு வானமே எல்லையாக இருக்கும். ஆனால் எங்கள் இருவருக்கும் அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். சம்பளம் போக படத்தை எடுப்பவர்களுக்கு என்ன மிச்சம் இருக்கும்.

எனது மகள்கள் ஸ்ருதி, அக்ஷ்ரா இருவரும் சினிமாவில் இருப்பதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். ஸ்ருதி கேமராவுக்கு பின்னாலும், அக்ஷரா கேமராவுக்கு முன்னாலும் இருக்க வேண்டும் என்று நான் நினைத்தது உண்டு என்றார்.

# விவசாயிகள் போராட்டம்; பராகுவேயில் வெடித்தது கலகம்

## 16 பேர் வன்முறையில் சிக்கி மாண்டனர்



AFP

தென் அமெரிக்க நாடான பராகுவேயில் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த வன்முறையில் சிக்கி 16 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 12 பேர் படுகாயமடைந்தனர்.

பராகுவே நாட்டில் நிலமில்லா விவசாயிகள் அரசை எதிர்த்துப்போராடி வருகின்றனர். இப்போராட்டத்தினால் எழுந்த பிரச்சினையில் பொலிஸார் விவசாயிகள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதனால் இரு தரப்பினரிடையே மோதல் வெடித்ததில் 7 பொலிஸாரும் 9 விவசாயிகளும் தலைநகரிலிருந்து 250 கி.மீ. தொலைவிலுள்ள குருகுவாட்டி நகரில் பலியானார்கள்.

பின்னர் நடந்த சம்பவத்தில் பலியான பொலிஸாரின் குடும்பத்தினருக்கு பராகுவே ஜனாதிபதி பெர்னான்டோ லூகோ இரங்கல் தெரிவித்தார்.

மேலும் செனட் கூட்டம் கூட்டி அப்பகுதியில் அவசர கால பிரகடனம் அறிவிக்க முடிவு செய்யப்பட்டது. இத்தகவலை பராகுவே உள்துறை அமைச்சர் கார்லோஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# நிதிநெருக்கடியில் கிரீஸ் அரசின் கஜானா காலி

ஐரோப்பாவில் யூரோ நாணயத்தை பயன்படுத்தும் நாடுகள் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்குண்டுள்ளன. இதற்காக பல்வேறு சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


கிரீஸ் நாட்டில் கஜானா காலியாகி விட்டதால் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க சர்வதேச நிதியம் உள்ளிட்டவற்றிடம் அவ் அரசு கையேந்தியுள்ளது. ஆனால் கடுமையான சிக்கன நடவடிக்கைகளை பின்பற்றும்படி ஐரோப்பிய வங்கி, சர்வதேச நிதியம் போன்றவை நிபந்தனை விதித்துள்ளன.

இதற்கிடையே கிரீஸ் நாட்டில் இரண்டாவது கட்டமாக பொதுத் தேர்தல் நடக்க உள்ளது. அரசு வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பக கூட பணம் இல்லாத நிலையை புதிய அரசு மேம்படுத்த வேண்டும்.

இது குறித்து சர்வதேச நிதியத்தின் தலைவர் கிரிஸ்டியானே லாகர்டே குறிப்பிடுகையில், கிரீஸ் நாடு பொருளாதார சிக்கலில் இருந்து மீள வேண்டுமென்றால் அது வரியை ஒழுங்காக செலுத்த வேண்டும்.

வரி ஏய்ப்பு செய்வதால் தான் அது தற்போதைய பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. எனவே சிக்கன நடவடிக்கைகளை கிரீஸ் கட்டாயமாக்கினால் தான் தீர்வு ஏற்படும் என்றார்.

# ஜப்பான் மீது பொருளாதாரத் தடை; ஐரோப்பிய கூட்டமைப்பு முடிவு




ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் முடிவு செய்துள்ளன.

மேலும் இறக்குமதியைக் குறைக்க ஜூலை மாதம் 1ஆம் திகதி வரை கெடு விதித்திருக்கிறது.

இந்தியா உள்பட 7 நாடுகள் இறக்குமதியை குறைத்ததால் விதிவிலக்கு அளிப்பதாக சமீபத்தில் அமெரிக்கா அறிவித்தது.

ஆனால் இவ்விவகாரத்தில் ஜப்பான் நிலை குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என கூறி இருந்தன.

இந்நிலையில் ஜப்பான் நாடாளுமன்ற கீழ் சபையில் ஈரானில் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு இன்சூரன்ஸ் செய்ய வகை செய்து சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டு நிறைவேறியது.

பின்னர் இது மேல் சபையிலும் தாக்கல் ஆனது. இந்த நடவடிக்கை ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகளின் கொள்கைக்கு எதிராக அமைந்துள்ளதால் ஜப்பான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரஷ்ய விமானம் மாயம்



ரஷ்யாவில் 12 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த தனியார் விமானம் ஒன்று திடீரென மாயமாகி உள்ளது.

ரஷ்யாவில் ரால்ஸ் பகுதியில் உள்ள விமான நிலையத்தில் இருந்து 12 பயணிகளுடன் ஒரு தனியார் விமானம் புறப்பட்டு சென்றது.


ஒன்றை என்ஜின் கொண்ட அந்த விமானத்தை விமானி ஒருவர் மட்டுமே ஓட்டிச் சென்றார். அதன் பின்னர் அந்த விமானம் மாயமாகி விட்டதாக பொலிசுக்கு தகவல் வந்தது.

சம்பவ இடத்திற்கு பொலிஸ் அதிகாரிகள் சென்று விசாரித்த போது, அங்கு மது விருந்து நடைபெற்று அதன் பிறகு நள்ளிரவில் 12 பயணிகளுடன் விமானம் புறப்பட்டதாகவும் தகவல் கிடைத்தது.

இந்த சம்பவம் நடைபெற்று 2 நாட்கள் ஆகியும் இதுவரையில் விமானம் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதுகுறித்து பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

உலகச் செய்திகள்

# சீனப்பெண்ணின் கன்னிப்பயணம்



முதன் முறையாக நேற்று சீனப் பெண் ஒருவர் விண்வெளிக்கு சென்றார். விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையம் ஒன்றை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்காக 'ஷென் ஷோ-9' என்ற விண்கலத்தை நேற்று விண்ணில் ஏவியது.

முதன் முறையாக ஒரு பெண் உட்பட மூன்று பேர் இந்த விண்கலத்தில் சென்றனர். விமானியான லியு யாங்(வயது -33) முன்பு, இவர் ஓட்டி சென்ற விமானத்தின் மீது 18 புறாக்கள் மோதிய போதும் விபத்தின்றி சமாளித்தார்.

இதற்காக இவர் தற்போது விண்வெளி பயணத்தில் பங்கேற்றுள்ளார். சீனாவின் வடக்கு பகுதியில் கோபி பாலைவனத்தில் உள்ள ஜியுகுவான் ஏவுதளத்திலிருந்து ஷென் ஷோ-9 விண்கலம் நேற்று விண்ணில் ஏவப்பட்டது.

# பாலியல் புகார் வழக்கு விஸ்வரூபம் எடுக்கிறது

## – ஜூலியன் அசாஞ்சேக்கு தலையிடி



நாடு கடத்தப்படுவதற்கு எதிராக விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை பிரிட்டன் உச்சநீதிமன்றம் நிராகரித்துள்ளது.

ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த பெண்கள் இருவர் தெரிவித்த பாலியல் புகார் தொடர்பான வழக்கில், அசாஞ்சேவை நாடு கடத்துமாறு லண்டன் விசாரணை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.


இதனிடையே நாடு கடத்தப்படுவதற்கு எதிராக விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை பிரிட்டன் உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

மேலும், அவரை நாடு கடத்தும் நடவடிக்கைகள் தொடங்குவதற்கு முன்பாக இருவார காலம அவர் லண்டனில் தொடர்ந்து தங்கியிருக்கவும் உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

இந்நிலையில் இந்த தீர்ப்பை எதிர்த்து ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்தில் ஜூலியன் அசாஞ்சே மனுத் தாக்கல் செய்வார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னதாக தன்னை நாடு கடத்த பிறப்பிக்கப்பட்ட ஐரோப்பிய கைது ஆணை செல்லாது என்று அசாஞ்சே தரப்பில் முன்வைத்த வாதத்தையும் மே 30ஆம் திகதி நீதிமன்றம் நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.

# தொடை தெரியும் பாவாடை மாணவிகள் அணியத்தடை



லண்டனில் உள்ள பிரபலமான பள்ளியில் மாணவியர்களின் குட்டைப் பாவாடை சீருடைக்கு தடை விதிகக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் நார்த்தாம்டன்ஷயரில் மவுல்டன் அறிவியல் பள்ளி உள்ளது. இங்கு 11 வயது முதல் 18 வயது வரையுள்ள 1,300 மாணவ, மாணவியர் படிக்கின்றனர்.

இந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் டிரிவோர் ஜோன்ஸ் கூறியதாவது, எங்கள் பள்ளி மாணவியருக்கு முன்பு பாவாடை சீருடையாக இருந்தது. முழங்கால் வரை இந்த பாவாடை இருக்க வேண்டும்.

ஆனால் மாணவியர் தொடை தெரியும் அளவுக்கு பாவாடைகளை அணிந்து வருவது அதிகப்படியான கவர்ச்சியாக உள்ளது. இதனால் தேவையில்லாத பிரச்சினைகள் உருவாகலாம் என்பதால் தற்போது பாவாடையை இரத்து செய்துள்ளோம்.

அதற்கு பதில் பேண்ட் வடிவ சீருடையை அறிமுகப்படுத்தியுள்ளோம். மீண்டும் பாவாடை அணிந்து வரும் மாணவியருக்கு தண்டனையாக பழைய ஆடைகள் அணிவிக்கப்படும் அல்லது அவரின் பெற்றோரை அழைத்து வர வேண்டும்.

புதிய சீருடை அணிந்து வரும் வரை அவர்களை வகுப்பில் அனுமதிக்கப் போவதில்லை. தற்போதைய சீருடை மூலம் மாணவியரின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

# தக்காளியை திருடியவருக்கு சிறைத் தண்டனை



இத்தாலியில் நபர் ஒருவருக்கு தக்காளியைத் திருடியதற்காக 20 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இத்தாலியின் லெசி நகரத்தை சேர்ந்தவர் டேனியல் கார்லினோ (வயது 30). இவர் கடந்தாண்டு ஜூலை மாதம் விவசாயி ஒருவரின் வாகனத்திலிருந்து 2 கூடை தக்காளியைத் திருடினார். இதனையடுத்து அப்பகுதி மக்கள் பொலிஸில் புகார் செய்தனர்.

இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம், தக்காளிக்கான 7 ஆயிரம் ரூபாயை விவசாயிடம் அளிக்கும்படி கூறியது. ஆனால் இதை டேனியல் செய்யத் தவறி விட்டார். எனவே இவருக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனை அளிக்கும்படி அரசு தரப்பு வழக்கறிஞர்கள் நீதிபதியிடம் கோரினர். ஆனால் டேனியலுக்கு 20 மாத சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# குருதிக் கொடையாளர்கள் பதக்கம் வழங்கிக் கௌரவிப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற குருதிக் கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வில் 134 குருதிக் கொடையாளர்கள் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர்.

நாடு பூராகவுமுள்ள வைத்தியசாலைகளின் இரத்த வங்கிக்கு குருதிக்கொடையளிப்பவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு பல தடவை குருதிக் கொடை வழங்கிய சுமார் 134 பேரைக் கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில் குருதிக் கொடையை ஊக்குவிக்கும் விழிப்புணர்வு நிகழ்வுகளான கவிதை, கட்டுரை, சித்திரப் போட்டிகளில் வெற்றியீட்டி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகிய இந்நிகழ்வில் குருதிக் கொடையாளிகள் இலங்கை வங்கியின் கிளை விரிவாக்கல் அதிகாரி கோனேசநாதன், யாழ்.போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று மற்றும் பெண்ணியல் சிகிச்சை நிபுணர் கே.முகுந்தன், பிரதேச வைத்திய அதிகாரிகள் குருதிக் கொடையாளிகளுக்கான பதக்கங்களை அணிவித்துக் கௌரவித்தனர்.


இந்நிகழ்வில், மகப்பேற்று மற்றும் பெண்ணியல் சிகிச்சை நிபுணர் கே.முகுந்தன் உரையாற்றுகையில், யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்தம் தேவையாக இருந்தும் இரத்தம் தட்டுப்பாடு இல்லாமல் வைத்தியசாலையின் தேவையைக் கருத்தில் கொண்டு இரத்த வங்கி செயற்படுவது பாராட்டுக்குரியது என்று தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வில் வைத்தியசாலையின் இரத்த வங்கியின் இரத்தப் பற்றாக்குறையை உணர்ந்து பல்வேறு தடவைகள் பல்வேறு தரப்பினரும் குருதிக் கொடை வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிகழ்வில், யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள், குருதிக் கொடையாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக குருதிக் கொடையாளர்களை மகிழ்விக்க நடனம் மற்றும் இன்னிசை கானங்கள் மேடை நிகழ்வாக இடம்பெற்றது. (பா)

# நான்காவது ஒருநாள் போட்டியில் 44 ஓட்டத்தால் இலங்கை வெற்றி



(கொழும்பு)

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்றைய தினம் இடம்பெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியில் 44 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சிறப்பாக விளையாடிய சங்ககார 97 ஓட்டங்களைப் பெற்ற வேளை, அஜ்மலின் பந்தில் அசார் அலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்ததால் சதம் பெறும் வாய்ப்பை தறவிட்டார். அணித் தலைவர் ஜெயவர்த்தன 40, டில்ஷான் 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் தன்வீர், அஜ்மல் மற்றும் ஹபீஸ் மூவரும் தலா 2, உமர்குல் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 244 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஓட்டமெதனையும் பெறாமலேயே ஹபீஷின் விக்கெட்டை இழந்தது.

எனினும் அசார் அலியுடன் அசாத் ஷாபீக் இணைந்த போதிலும் அவர் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும், அசார் அலியுடன் மிஸ்பா இணைந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார். ஆனால் மிஸ்பா 57 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை மலிங்கவின் பந்தில் ஆட்டமிழக்க அதுவே இலங்கை அணியின் வெற்றிக்கு திருப்புமுனையாக அமைந்தது.

மிஸ்பாவின் பின்வந்த வீரர்கள் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழக்க பாகிஸ்தான் அணி 45 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 199 ஓட்டங்களை மட்டும் பெற்று தோல்வியைத் தழுவியது. இறுதி வரை ஆட்டமிழக்காதிருந்த அசார் அலி 81 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் திசார பெரேரா 4, மலிங்க 2, குலசேகர, மத்தியூஸ் மற்றும் வீரக்கோன் மூவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பெரேரா தெரிவானார்.

# ஜே.வி.பி. கொலை தொடர்பாக இரகசியப் பொலிஸார் விசாரணை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை, கட்டுவன பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கூட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும் பொறுப்பு இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தின்போது இனந்தெரியாத ஆயுததாரிகள் சிலர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் பெண்ணொருவர் உட்பட இருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் சிலர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீள்குடியேற்றம்...

கீழ் வடக்கில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் வரை முற்று முழுதான வழமை நிலையை அங்கு எதிர்பார்க்க முடியாது.

வன்முறைகளின் மூலம் அரசியல் மாற்றங்களை உருவாக்க முடியாது. தேர்தல் மூலமே உருவாக்க முடியும்.

பிரிவினையை வலியுறுத்திய மக்களும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு வழங்கிய மக்களும் ஜனநாயகத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களின் முகாம்களை நாம் ஐந்து நட்சத்திர விடுதிகளின் நிலைக்கு எதிர்பார்க்க முடியாது, ஆனால் நிலைமை முற்றிலும் மோசமானதாக இல்லை.

இருந்தாலும் இடம்பெயர்ந்த மக்கள் கூடிய விரைவில் மீளக்குடியேற்றப்பட வேண்டும்.

வடக்கில் அதிகளவு இலங்கைப் படையினர் நிலைகொண்டுள்ள போதும், எதிர்பார்க்கப்பட்டளவுக்கு தொந்தரவாக இல்லை.

உலகில் அதிக இராணுவத் தலையீடுகள் உள்ள பகுதிகள் மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நான் சென்றுள்ளேன். அங்கு அதிகபட்ச தொந்தரவு இருக்கிறது.

ஆனால் இலங்கையின் வடக்குப் பகுதியில் விசனத்துக்குரிய பதற்றமான நிலை உள்ளதாக நான் உணரவில்லை என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## கிழக்கு முஸ்லிம்...

உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தலைமையில் கிண்ணியா பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றவேளை அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாண தேர்தலில் ஐ.தே.க.வை பற்றி பேசுவதற்கில்லை, மூன்று பிரதான கட்சிகள் இருக்கின்றன ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதற்குள் உள்ளிருக்கும் உதிரிக்கட்சிகள், மற்றயது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதில் அடித்துப் போட்டாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் கூட்டுச் சேரப்போவதில்லை. இந்த மூன்று கட்சிகளில் இரண்டு கட்சி கூட்டுச் சேர்ந்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். இதில் யார் சேர்ந்தாலும் சரி இதனோடு ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்துக் கொண்டால் போனஸ் ஆசனத்தையும் பெற்றுக் கொள்ளமுடியும். இதுதான் அரசியல்.

இன்று கிழக்கு மாகாண சபையை கலைக்கக் கூடாது என்று கிழக்கு முதலமைச்சர் வழக்கு போடவுள்ளார். இதில் முஸ்லிம் காங்கிரஸையும் இணைந்து கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.கிழக்கு மாகாண சபைக் கலைக்கப்பட்டு வேட்பு மனுத்தாக்கலுக்கு காலமுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் இது பற்றி பேசிக்கொள்வோம் என்றார்.

## போரின்....

போரின் வடுக்கள் ஆறுவதை தடுக்கிறது.

நிலக் கண்ணிவெடிகள் அகற்றப்படுவதனை முன்னிறுத்தி சில பகுதிகளில் இராணுவ பிரசன்னத்தினை நியாயப்படுத்தினாலும், இராணுவத்தினரது நடமாட்டம் என்பது போரினால் பயந்து போயிருக்கும் சிறார்களுக்கு, கடந்த போரை நினைவூட்டுகின்றது.

அத்தோடு அந்த நினைவூட்டல் போர் இன்னமும் முடியவில்லை என்ற ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்துகின்றது.

இலங்கையின் வடக்கிலிருக்கும் சிறார்களை அவர்களின் சொந்த ஊர்களில் திரும்பவும் குடியமர்த்தி, கல்வி, மற்றய தேவைகளை வழங்கி மற்றவர்களுடன் சம சந்தர்ப்பம் கிடைக்க செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு Save the Children அமைப்பின் இலங்கைக்காக பிரதிநிதி மேனகா கல்யாணரத்தின தெரிவித்துள்ளார்.

## அம்பாந்தோட்டைச்...

இச்சம்பவத்திற்கு ஜே.வி. பி.யின் உட்கட்சி மோதலை காரணமாக காட்ட அரசாங்கம் முயற்சிப்பதாகவும் ஆனால் யதார்த்த நிலை அவ்வாறில்லை எனவும் ரில்வின் சில்வா கூறினார்.

அவர்கள் முன்னிலை சோஷலிஷக் கட்சியின் மீது குற்றம் சுமத்த முயற்சிக்கிறார்கள். வீதி நடைபாதையில் நடப்பதற்குக் கூட 2-3 பேரை தேடிக் கொள்ளமுடியாத ஒரு கட்சி எப்படி துப்பாக்கிப் பிரயோகம் நடத்த முடியும்? எனவும் அவர், கேள்வி எழுப்பினார்.

இவ்விடயத்தை தமது கட்சி சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்லும் என தெரிவித்த அவர், நாம் ஜனநாயக ரீதியாக அரசியலில் ஈடுபடுகிறோம். அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இத்துப்பாக்கிப் பிரயோக விவகாரத்தை நாம் சர்வதேச ரீதியாக கொண்டு சென்று, இச்சம்பவத்தின் சூத்திரதாரிகளை சட்டத்தின்முன் நிறுத்த முயற்சிப்போம் என மேலும் தெரிவித்தார்.

## சர்வதேசத்தைப்...

கட்டமைப்புக்கள் பற்றியும் அங்குள்ள சபைகளின் வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் வெளிநாட்டவர்களை அழைத்து பயிற்சி கொடுக்கவுள்ளோம் என்றார்.

## கொழும்பில்...

மன்ற நீதிபதி ஷிரான் குணரத்ன, இதற்கு உதவிகளையும் ஒத்தாசைகளையும் வழங்கிய வர்த்தகருக்கும், மற்றுமொரு நபருக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டாண்டு கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த கதிரமலை சந்திரவேல் (வயது-35) என்பவருக்கே 8 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. நீர்கொழும்பு முன்னகரை சிறிவர்தன வீதியை சேர்ந்த வர்த்தகரான சுந்தரலிங்கம் இளஞ்செழியன் (வயது-44), களுவாஞ்சிகுடி பெரிய போரதீவை சேர்ந்த தம்பிராசா சிவலிங்கம் (வயது-57) ஆகியோருக்கே ஒத்திவைக்கப்பட்ட இரண்டு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## அநாகரிகமாக...

என்றே திட்டமிடப்பட்டு நீக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், சபைக் கூட்டங்களின் போது சபையில் சிறுபான்மையாக உள்ளதால் சபை நடவடிக்கைகளின் போது தங்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுகின்ற வகையில் தவிசாளர் உட்பட ஆளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நடந்துகொள்வதாகவும் தவிசாளர் நாகரீகமற்ற வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் எதிர்தரப்பு உறுப் பினர்களை விழித்துப் பேசுவதாகவும் இவ்வாறு கீழ்த்தரமான அரசியல் நாகரீகமற்ற முறையில் நடந்துகொள்வது கண்டிக்கத்தக்கது எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, கோணாவில் பகுதியில் பொதுக் கிணறுகளை அமைப்பதற்கான தனது பிரேரணையை மறைத்து தமக்கு சார்பான உறுப்பினர் ஒருவர் அதனை பிரேரித்ததாக கூட்ட றிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மிக மோசமான செயலாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (29)

## தாக்குதலாளிகள்...

குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் குற்றச் செயல்கள் காரணமாக விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

யாழ். குடாநாட்டில் பாரிய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு குழுவினரைத் தேடி விசேட பொலிஸ் குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மக்களைப் பாதுகாத்து மக்களின் அமைதியான வாழ்வுக்கு யாழ்.பொலிஸார் தங்களது கடமையைச் செய்வர். அத்துடன் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கையின் போது நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 28 பேரைக் கைது செய்துள்ளதாகவும், அவர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தி தண்டனை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# இரட்டை வாய்க்காலுடன் முடிந்த புலிகளுக்கு எதிரான போர்

## கூறுகிறார் சரத்பொன்சேகா

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் 2009 ஏப்ரல் 19 ஆம் திகதியே முடிந்து விட்டதாக முனனாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

போர்முறை பற்றி எதுவும் தெரியாதவர்கள் தான் போரைப் பற்றி முட்டாள்தனமாக பேசினார்கள்.

உண்மையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர், 2009 ஏப்ரல் 19 ஆம் திகதி இரட்டை வாய்க்கால் பகுதியைப் படையினர் கைப்பற்றியதுடன் முடிந்து விட்டது.

அதற்குப் பின்னர் மே 19 ஆம் திகதி வரை கேணல்கள் மற்றும லெப். கேணல்கள் தலைமையில் நடந்தது தேடுதல் நடவடிக்கைகள் தான்.

போரின் இறுதி வாரத்தில் சீனாவுக்கு நான் மேற்கொண்ட அதிகாரபூர்வ பயணத்தை தவறு என்று கூறுவோருக்கு, விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் அதற்கு முன்னரே தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்பது தெரியாது.

நான் நாட்டைவிட்டுச் செல்ல முன்னர், விடுதலைப் புலிகளின் போராளிகள் தப்பி ஓடிக் கொணடிருந்தனர்.

இறுதிக்கட்டம் கேணல்கள் மற்றும் லெப்.கேணல்களின் கையில்தான் இருந்தது.

போர் நடந்துகொண்டிருந்ததால், சீனாவுக்கான பயணத்தை நான் ஐந்துமுறை பிற்போட்டிருந்தேன்.

எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்ட பின்னர்தான் நான் சீனாவுக்குப் பயணமானேன்.

2009 மே 11 தொடக்கம் 17 வரை நான் சீனாவில் இருந்த போதுகூட, கொழும்பிலுள்ள எனது அதிகாரிகளுடன் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் தொடர்புகொண்டு முன்னேற்றங்கள் குறித்து அறிந்துகொண்டிருந்தேன்.

அந்தக் கட்டத்தில், போர் வலயத்தில் சிக்கியிருந்த 85 ஆயிரம் மக்களை எப்படிப் பாதுகாப்பாக வெளியேற்றலாம் என்பதே எனது கரிசனையாக இருந்தது.


முப்பதாண்டுகளாக இழுபட்டு வந்த ஆயுதமோதலை நான் இரண்டு ஆண்டுகள் 9 மாதங்களில் முடித்து வைத்தேன்.

பெரும்பாலான மக்கள், பிரபாகரனும் அவரது 100 வரையிலான போராளிகளும் ஓடிய இறுதி நாட்களையே உறுதியான வெற்றியாக பேசுகின்றனர்.

நந்திக்கடல் பகுதியில் இறுதிச்சமர் மே 17 ஆம் திகதி பிற்பகல் 2 மணியுடன் முடிந்துவிட்டது. அன்று காலை 10 மணியளவில் 30 விடுதலைப் புலிகள் வரை கொல்லப்பட்டனர்.

19 ஆம் திகதி அவர்களின் உடல்களும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உடலுடன் நந்திக்கடல் பகுதியில் மீட்கப்பட்டன என்று சரத்பொன்சேகா மேலும் கூறியுள்ளார்.

# மின் ஒழுக்கால் வீடு எரிந்து நாசம்



(கிரு)

ஆனைக்கோட்டை அரசடிச் சந்தியில் நேற்று மாலை 5.30 மணிக்கு மின் ஒழுக்குக் காரணமாக வீட்டின் ஒரு பகுதி எரிந்து சாம்பலாகியுள்ளது. யாழ் ஆனைக்கோட்டையில் வசிக்கும் கு.முகுந்தன் என்பவரின் வீட்டில் நேற்று மின்சாரம் பகல் முழுவதும் தடைப்பட்டிருந்து. மாலை மின்சாரம் வந்தபோது ஏற்பட்ட மின் ஒழுக்குக் காரணமாக இந்த வீடு எரிந்துள்ளது.

வீட்டின் பாவனையில் இருந்த முதிரை தளபாடங்கள் மற்றும் பட்டுப்புடவைகள், சமையலறைப் பாத்திரங்கள், வீட்டுக் கூரைத் தகடுகள், என இரண்டு இலட்சம் பெறுமதியான பொருட்கள் எரிந்து சாம்பலாகியுள்ளது. (02)

# கேள்விக்கு பதிலளிக்க மறுத்த மாணவனை வதைத்த பிக்கு

பௌத்த சரித்திர பாடத்தில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு, பதில் அளிக்க மறுத்த 14 வயது கத்தோலிக்க பள்ளி மாணவனை, பௌத்த பிக்கு ஒருவர் வதைத்த சம்பவத்தினை, ஆசிய மனித உரிமைகள் ஆணையம் அம்பலப்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் ஆசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்டுள்ள செய்தியறிக்கையில்,

கண்டியில் உள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்கும் அமிலதரங்க திலகரத்னே என்னும் பெயரினைக் கொண்ட 14 வயது கத்தோலிக்க மாணவனே, இவ்வாறு பௌத்த பிக்குவின் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

பௌத்த சரித்திரம் தொடர்பிலான பாடத்தில், ராகுல தேரோவினால் கேட்கப்பட்ட கேள்விக்கு, தான் கத்தோலிக்க மதத்தினை தழுவியிருப்பதால் குறித்த கேள்விக்கு தன்னால் பதில் அளிக்க முடியாதென மாணவன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பௌத்த சரித்திர ஆசிரியரான தேரோ, அந்த மாணவன் மீது கடுமையான தாக்குதலை நடத்தியுள்ளார்.

மத அடிப்படையிலேயே குறித்த மாணவன் மீது வன்கொடுமை நிகழ்த்தப்பட்டுள்ளதோடு, பிற மதங்களுக்கு உரிய அனுசரணை காட்டப்படாமல் மாணவன் வஞ்சிக்கப்பட்டுள்ளதாகவும் ஆசிய மனித உரிமைகள் ஆணையம் குறித்த சம்பவம் தொடர்பில்தெரிவித்துள்ளது.




தற்போது கண்டி போதனா வைத்தியசாலையில் மாணவன் அனுமதிக்கப்பட்டிருப்பபோடு, பொலிஸாரிடம் மாணவனின் குடும்பத்தினர் முறைப்பாடு செய்தபோதும், பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை எனவும் ஆசிய மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது. இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

# ஐ.தே.க. தலைவர்களில் சிலர் முட்டாள்கள் என்கிறார் ரங்கே எம்.பி.

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சில தலைவர்கள் முட்டாள் தனமாக செயற்பட்டு வருவதாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி கிரமமாக வீழ்ச்சியடைந்து செல்கின்றது. மக்கள் மத்தியில் கட்சி தொடர்பான நம்பிக்கை வலுவிழந்து செல்கின்றது.

சஜித் பிரேமதாச நாடு முழுவதிலும் உள்ள பௌத்த விஹாரைகளுக்கு பாரியளவில் சேவையாற்றி வருகின்றார். அவர் அவ்வாறு சேவையாற்றினாலும் சிலர் விஹாரைகளில் தேனீர் பருகி வருகின்றனர். சரத் பொன்சேகா உண்மையான ஓர் தலைவர். அவர சிறந்த சேவையை ஆற்றியுள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்க வேண்டாம் என உத்தர விடுகின்றனர். சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளித்தாலும் நான் கட்சியை விட்டு விலகிச் செல்லவில்லை.

சிலர் பெரிய பதவிகளை வகித்து வந்தாலும் முட்டாள் தனமான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என பாலித ரங்கே பண்டார குற்றம் சுமத்தியுள்ளார்.

# கல்விசாரா ஊழியர் பகிஷ்கரிப்பு தினமும் 10 மில்லியன் ரூபா இழப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக பல்கலைக்கழகங்களில் நாளொன்றுக்கு 10 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுவதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி சாரா ஊழியர்கள் தொடர்ந்து 10 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தமது சம்பளம் மற்றும சம்பள முரண்பாடு தொடர்பான கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றும் வரை வேலைக்குத் திரும்பப்போவதில்லை எனக கூறியுள்ளனர்.

வேலை நிறுத்தம் காரணமாக நாம் தினம் 10 மில்லியன் ரூபா நஷ்டத்தை அனுபவிக்கின்றோம். வேலைநிறுத்தம் தொட்ருமாயின் நாம் மேலும் நஷ்டமடைவோம் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ன கூறினார்.

வேலை நிறுத்தம் நடந்தாலும், சம்பளம், பராமரிப்பு, மின் கட்டணம், எரிபொருள் என பல்வேறு தேவைகளுக்கு செலவழித்தே ஆகவேண்டும். இதுவே நட்டம் ஏற்படக் காரணம் என அவர் கூறினார்.

இதேவேளை சில பீடங்களில் நடைபெறும் பரீட்சைகள், விரிவுரைகள் தொடர்பில் இப்போது வழங்கிவரும் அத்தியாவசிய சேவைகளையும் நிறுத்தப் போவதாக கல்விசாரா ஊழியர்கள் எச்சரித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் அரசாங்கத்தால் நிறை வேற்றப்படும் வரை தாம் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக பல்கலைக்கழக கல்விசாரா சேவையினர் ஏற்கெனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படை விட்டோடிகளுக்கு பொதுமன்னிப்பு இல்லை

தப்பிச் சென்ற படைச்சிப்பாயகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படமாட்டாது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

தப்பிச் சென்ற படைச் சிப்பாய்களை கைது செய்யும் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 20 ஆயிரம் படைச் சிப்பாய்கள் இவ்வாறு தலைமறைவாக வாழ்ந்து வருகின்றனர். கடந்த மார்ச் மாதம் 680, ஏப்ரல் மாதம் 484 மற்றும் மே மாதம் 617 படைச் சிப்பாய்கள் இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு முதல் இது வரையில் நாட்டில் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 20 சிப்பாய்களுக்கே தொடர்பு இருபபதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச கடல் எல்லை உப தலைவராக பாலித



சர்வதேச கடல் எல்லைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயலகத்தின் உப தலைவராக நியூயோர்க்கிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கோஹண தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சர்வதேச கடல் எல்லைகள் தொடர்பான கொள்கைகளுக்கு அமைவான உறுப்பு நாடுகளின் ஏகமனதான அனுமதியுடன் பாலித கோஹண நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 1982 ஆம ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்தக் கொள்கையின் கீழ், சர்வதேச கடல் எல்லைகள் தொடர்பான புதிய சட்டங்கள் வகுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தலென முறையீடு

(கொழும்பு)

பிரபல சிங்கள நாளிதழான லங்காதீப வின் ஊடகவியலாளர் ஒருவருக்கு உயிரச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபருக்கு, குறித்த ஊடகவியலாளர் எழுத்து மூலம் இது தொடர்பான முறைப்பாட்டை செய்துள்ளார். சுஜித் மங்கல என்ற இந்த ஊடகவியலாளர், நேற்று முன்தினம் தனது முறைப்பாட்டைக் கையளித்துள்ளார்.

அதில், கடந்த 12 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் கட்டுபெத்தையில் உள்ள தமது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், தனது தாயை மிரட்டி விசாரணை செய்துள்ளனர் என்று செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். எனவே தாம் தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கருதுவதாக ஊடகவியலாளர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சில வாரங்களுக்கு முன்னர் தனது நண்பரான சி.ஜே. அமரதுங்க என்பவரின் வீட்டுக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் என்று கூறிக்கொண்டு சென்ற சிலர் அவரை விசாரணை செய்ததாகவும் சுஜித் மங்கல தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.